

# “பிரவர்த்தியும்”!
# “நிவர்த்தியும்”!!



பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா




# “பிரவர்த்தியும்”!
# “நிவர்த்தியும்”!

# பொருளடக்கம்


1. சாம தான அபேத தண்டம்---------------------------------------1
2. வினையும் மதியும் விதியும்-------------------------------------13
3. கேள்வியும்! பதிலும்!!---------------------------------------------24
4. பூரணத்வம்------------------------------------------------------------42
5. பிரவர்த்தியும் நிவர்த்தியும்------------------------------------72
6. வெண்மை கொடி---------------------------------------------------90


எல்லாம் நீ!





(சத்திய வாக்கை)

சத்தியம் பேசு. தர்மம் செய்.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

"சத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்!"

"ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெயராம்," ஓம்

"அகம்பிரம்மம்", "ஜெகம்பிரம்மம்",

"அகமே எல்லாம்!"

"ஜெகம், பரமும், ஜீவர்களும்"

"சிறிதும் இல்லை!"

1. "உடல் உணர்ச்சியும், இறை உணர்வும்"

2. "சாம, தான, அபேத, தண்டம்!!!"

இது கலியுக தோஷ நிலையில் "சாம, தான, பேத, தண்டன்"
எனமாறி வந்துவிட்டது. இதன் நிலை என்னவென்றால்

1. அமைதியாக சொல்லிப்பார்!
2. பாட்டுப் பாடி இனிப்பும் கசப்பும் கலந்த நிலையில் சொல்லிப்பார்!
3. உன்னிலும் அவனை வேறுபடுத்தி கடின வழியில் சொல்லிப்பார்!
4. கடும் தண்டனை கொடுத்து உன் வழியில் நடக்க கொடூர வழியில் சொல்லிப்பார்!

இதிலும் அவன் திருந்தவில்லையானால் "அவனை அழித்துவிடு". ஒருவனை அழிப்பதன் மூலம் பலரை திருத்த வாய்ப்பிருப்பதனால் அக்கர்மாவை செய்வதால் பாவம் இல்லையென கலியுக தர்மம் கூறுகிறது. இது இக்கலியுகத்திற்கு மட்டுமே செல்லுமேயன்றி "ஆத்ம சாதனைக்கு ஒவ்வாது"!



# 1. "உடல் உணர்ச்சி" (இறை உணர்வு)

அன்புக் குழந்தைகளே! அடங்கி வாழ்தலினால் ஆத்ம சம்பத்தை பெறுவீர்களாக. உங்கள் புலன் அடக்கத்தினால் ஸ்வயஞான அனுபவம் பெறுவீர்களாக.

சென்ற இதழில் "உணர்வின் ஒடுக்கமும்! உணர்ச்சியின் வெளிப்பாடும்" என்ற தலைப்பில் ஓர் விளக்கம் தந்தோம். இது அதனினும் சற்று மாறுபட்டதாகும். இந்த மடலில் உடல் உணர்ச்சியையும் அதை எப்படி இறை உணர்வாக மாற்ற வேண்டுமென்றும் புதிய விளக்கமாக தருகிறோம். இதில் குடும்பஸ்தர்களாக இருந்து கொண்டு "பெண் இன்பத்தை" மறக்க முடியாமல் இருக்கும் அன்பர்களுக்கும் பொருந்தும். இவ்விளக்கத்திற்கு எமதய்யன் கண்ணனை (திருடனை) வைத்து விளக்கம் தருகிறோம். உணர்வால் உணர்க!

எம் கண்ணன் அவதரித்த காலமோ "துவாபர யுக முடிவு! கலியுக ஆரம்பம்"! ஆகும். இன்றைய கலியுக மேதாவிகள் (மூடர்கள்) கண்ணனை ஓர் ஸ்திரீ லோலனாகவும், போகப்பிரியனாகவும், அவன் செய்த ராஜ க்ரீடையையும் ஜலக்கிரீடையையும் "ராஸ லீலை" என்ற நிலையில் காமரஸனையாக பேசுகின்ற காலக்ஷேபம் செய்தும், அனேக புத்தகங்களாக வெளியிட்டும், எதிலும் பற்றப்படாத "புருஷோத்தமனை" பதினாறாயிரம் கோபிகைகளை திருமணம் செய்தான் என்றும், எட்டு பட்ட மஹிஷிகள் அவனுக்கு மனைவிகள் என்றும், "குரு சிஷ்ய பாவனையில்" உள்ள "ராதை"யையும் கண்ணனையும் இணைத்து "நாயகி நாயகன்" பாவனையாகவும், "காதலி காதலன்" பாவனையாகவும், "காமரஸனையாக" வர்ணித்து தான் மட்டும் கெட்டுப்போனதோடல்லாமல், "பார்க்கும், கேட்கும், பேசும்" அனைத்து அறியாமையின் மக்களையும் "கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்"!

"ஜலக்கிரீடை": — நிர்மலமான ஜலத்தில் தன் புருஷ சொரூபத்தை காட்டி, அவர்கள் ஜீவ சொரூபத்தையும் காட்டி, உங்கள் அறியாமையின் ஜீவ சொரூபமான "பெண்" என்ற "சபல, சலன, சந்தேக" குணங்களை களைந்து யாம் ஆகிய "ஆண்" என்ற "பொறுமை நம்பிக்கை வைராக்கிய" குணங்களை ஏந்தி எம்போன்று புருஷோத்தமன் ஆக என உணர்த்துவதே ஜலக்கிரீடை!



உ

"ராஜகிரீடை": — "யாமே ராஜா" (அரசன் என்றும் சக்ர வர்த்தி என்றும் புருஷோத்தமன் என்றும் பொருள்படும்) நீங்களும் எம் போன்று ராஜாவே. (எம் தொழிலால்!) நீங்கள் உங்கள் தொழிலால் (சுயம் சயனம் சந்தேகம்) நான் "குடிமகன்" என எண்ணி எம்மிலிருந்து பிரிந்து விட்டீர்கள். நீங்கள் உங்கள் தொழிலை விட்டு நீங்கியதும் யாம் எம் தொழிலை விட்டு நீங்கியதும் நாம் இருவரும் ஒன்றாக முடியும்" "நாம் இருவரும் புருஷோத்தமனே" என உணர்த்துவதே ராஜகிரீடையாகும்.

ஹே அறியாமையின் ஜீவனே!

"நாம் கணவன் மனைவி குழந்தை உறவு நிலைகளில் வினைவசத்தாலும், புத்திவசத்தாலும், விதிவசத்தாலும், சிக்கிக் கொண்டது போன்றே அதிருஷ்டமான இறைவனையும் உன் நிலைக்கு ஆளாக்கி வைத்துப் பார்க்கிறாயே? இது என்ன மதியீனம்? உன் மனம் இங்கு எப்படி கெட்டுப் போகிறதென்றால்?

1. நம் இறைவனே திருமணம் செய்திருக்கிறான்!
2. நம் இறைவனே பற்பல குழந்தை பெற்றிருக்கிறான்!
3. நம் இறைவனே காமகளியாட்டம் ஆடுகிறான்!
4. நம் இறைவனே இறைவியிடம் ஊடல் செய்து அவஸ்தைப்பட்டிருக்கிறான்!
5. நம் இறைவனும் இறைவியும் நம் போன்று அவஸ்தைப்படும் ஓர் குடும்பியே!

என இன்ன சம்பவங்களில் சிற்ப, சித்திர, விக்கிரகங்களில், உன் கற்பனை வடிவில் புகுத்தி **"இறைவனை கெடுக்கவில்லை"!** உன் மனதை கற்பனையால் **நீ கெட்டு அழிகிறாயே!!**

இது முறையா? இது நியாயமா? இது நீதியா? இது பொருத்தமா?

மேலே சொல்லும் ராஜகிரீடையையும், ஜலக்கிரீடையையும் **"ராசலீலை"** (காமலீலை) ஆக்கினீர்கள்.

அது மஹாபாபமாகும்! அது வினையின் பெருக்கமாகும்! அது குணநோய் விருத்தியாகும்! அது பிறவியின் வித்து ஆகும்! அது தெய்வ நிந்தனையும் தீர்க்க முடியாத **"பழிபாவமாகும்!"**



௨

அன்பு வடிவான!

குழந்தைகளே! நீங்கள் அனைவரும் ஆத்மசாதனை செய்து இறை உணர்வையும் ஆன்ம உணர்வையும் பெற்று பிறவி பிறப்பற்ற நிலைக்கு வந்தவர்களே! உங்கள் மனைவியான்ற பெண்ணைத்தந்த "**பெண்ணைக்கும், போகப் பொருளாகவும்**" மேயைப் படி விதிப்பதியே செய்து தாமன் என்னும் மரண தேவனுக்கு பலி ஆக வேண்டாம் என்று உங்கள் பாதம் தொட்டு வேண்டிக் கொள்கிறேன். ஓர் அன்பர் பாடியிருக்கின்ற பாடலின்படி உங்கள் மனம் என்ற கண் "எப்படி நோக்குகிறது என்றால்?

1. பிறந்த இடத்தை நோக்குதே "**பேதைமட நெஞ்சம்**"!

2. அமுதம் சுரந்த இடத்தை நோக்குதே "**காமக்கண்**"!! என இருப்பதால் கீழே சொன்னபடி மாற்றுங்கள்.

1. இனிப் பிறவா நிலையை கூட்டி வைத்த "**பிறந்த வழி**"!!

2. பிறவா நிலைக்காக அமுதம் சுரந்த "**அமுத கலசம்**"!!

3. வார்த்தைகள் அதிகம் பேசாதே என உன் வாக்கை தடுத்த "**உதடு**"!!

4. சிருஷ்டி கர்த்தா பிரம்மன் தோன்றிய இடம் **நாபிக்கமலம்**!!

(மேலும் விளக்கம் தனங்களான (பேத) பார்வையுக்கில் காணலாம்)

மேலும் புராணங்களையும் புத்திக் கதைகளையும் கேட்கும் அன்பர்கள் அதில் கூறும் தேவ தெய்வ "**உடல், கூடல்களை**"யும் "**பிறவி**" ரகஸ்யங்களையும் "**திருமணவை போகங்களையும்**" "**காம**" ரஸனையாகச் சொல்லும் கதைகளையும் தயவுசெய்து எவரிடமும் கேட்க வேண்டாம் என்றும். அப்படி இதுவரை தெரியாமல் கேட்டவைகளைப் பற்றி "மறைமய காம ரஸனை" கற்பனை பண்ண வேண்டாம் என்றும் கேட்கிறேன்!



௨

ஆண்கள் பெண்களை கற்பனை பண்ணவும், அவர்களைப்பற்றி காம ரஸனையாக பேசவும் வேண்டாம். பெண்கள் ஆண்களை கற்பனை பண்ணவும் அவர்களைப் பற்றி காமரஸனையாகப் பேசவும் வேண்டாம்!

ஆண் பெண் ஒருவர் ஒருவரை நெருங்கும் போதும், பேசும் போதும் தன்னையும் அறியாமல் "ஓர் வேகம்! ஓர் உதால்! ஓர் மோஹ" வெறி உண்டாவதாக உணர்ந்தால் அந்த தொடர்பை "உடனே துண்டிக்கவும்" அதாவது உடனே தாமே விலகவேண்டும். அந்த நபரையும் விலக வைக்கவேண்டும். பின் அந்த நபர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்க நேர்ந்தால், இறைநாமமாவையோ குருநாமமாவையோ, உருகி உணர்ந்த வண்ணம் தம் மார்பில் கை வைத்து அக்காட்சியை மறக்கப் பழக வேண்டும். இப்படி பலமுறை சாதனை செய்து பழகும் போது காம வாஸனை குறைந்து குறைந்து குறைந்து நீங்கி விடும். "தம் சுய அனுபவத்திலேயே அதை உணரலாம்."

ஆண்களை பெண்களோ, பெண்களை ஆண்களோ சந்தித்துப் பேசுவதாக இருந்தால் முகத்தையோ மற்றும் அங்கங்களையோ பார்த்தும் பேசவேண்டாம். ஒருவரை ஒருவர் "திருவடியை" மட்டும் பார்த்துப் பேசலாம். (அல்லது ஆகாயத்தையோ இயற்கையையோ பார்த்துப் பேசலாம்.) இதுவும் காமத்தை அடக்கி அழிக்க முடியும். உங்கள் மனம் "திட உணர்வு" பெறும் பரியந்தம் அவ்வாறு செய்யவும். ஆண்களும் பெண்களும் பிறருடைய "அவயவங்களை" கூர்ந்து நோக்காமல், அவை எவை என அதாவது அனைத்தும் இறைவன் சிருஷ்டி என கண்டு கண்டு உணர்ந்தால், இறை சிருஷ்டியில் அவஸ்யம் காமம் உண்டாகாது.

வினைப் போகத்தால் இறைவனால் உண்டாக்கப்பட்ட ஓர் பதுமை என உணர்ந்தால் அவஸ்யம் காமம் உண்டாகாது.

தன்மனைவியையோ அடுத்த பெண்களையோ காணும் போதும் இறைவன் பொருளென்றும் இறைவனே என்றும் உரை பழகிக் கொண்டால் அங்கு அவஸ்யம் காமம் உண்டாகாது.



உ

(6)

ஆண்களோ பெண்களோ, பெண்களோ ஆண்களோ
நோக்கும் போது "**அங்கங்களை**" நோக்காதீர்.
"**அங்கங்கு**" நம் இறைவன் உள்ளான் என உணர்வீர்.

# "மோகத்தின் முடிவு வேகம்"!

அது அழிவு.

# "பொறுமையின் (அமைதியின்) முடிவு ஆனந்தம்"!

அதுவே சாதனை.

"தெய்வ உணர்வு இருந்தால் அங்கு உடல் உணர்ச்சி வராது"!
உடல் உணர்ச்சி இருந்தால் அங்கு தெய்வ உணர்வு மறைபடும்; அழியாது)

தெய்வங்களும் திருமணம் செய்திருக்கிறதென்றும்; தெய்வங்களும் காம களியாட்டம் ஆடியிருக்கிறதென்றும்; தெய்வங்களுக்கும் உடல் கூடல் உண்டென்றும்; தெய்வங்களின் உறவே இப்படித்தான் அமைந்திருக்கிறதென்றும்; அந்த தெய்வங்களை உங்கள் நினைவுக்கு கொண்டுவர வேண்டாம். "உங்கள் உண்மையான "**கற்பனை**" வடிவமே தேவ தெய்வங்கள்" அந்த கற்பனையை பேதமாகவும், குற்ற உணர்வாகவும், காம உணர்ச்சிகளாயும் பண்ணினால் "உன் உள்ளமே கெடும்"; தேவ தெய்வங்களை அது பாதிக்காது! உங்கள் உள்ளங்களில் வரும் தேவ தெய்வ கற்பனைகள் பவித்ரமாகவும் பரிசுத்தமாகவும், உள்ளத்தில் சாந்தியையும் அமைதியையும் ஆனந்தத்தையும் தரக்கூடியதாக இருந்தால், உங்கள் குடும்பமே ஓர் கோயிலாகி விடும். அங்கு உங்கள் உபாசனா மூர்த்தி அவசியம் குடி இருப்பான். மேலே கூறிய பரிசுத்தமான தேவ தெய்வ நினைவுக்கு உங்களை கொண்டு செல்லுங்கள். அங்கு காமம் அவசியம் அழிந்து விடும்.

எம் ஆனந்த செல்வங்களே!

"பார்ப்பது, கேட்பது, பேசுவது, தொடுவது" இந்த நான்கினை நீ காணும் நாள் நீங்கள் "**உடல் உணர்ச்சி**"களுக்கு அடிமையாகி விடுகிறீர்கள் அங்கு தெய்வீக உணர்வு மறைபட்டு விடுகிறது. அங்கு தன் நிலை குலைந்து விடுகிறீர்கள். அங்கு தேவையில்லாத ஆத்திரம், அவசரம், வேகம், கோபம், மோகம் என்ற ஓர் "**வெறியில்**" விழுந்து சிதறிப் போய் விடுகிறீர்கள்.



உ

மேலே சொன்ன இந்த நிலையில் சற்று கவனமாக இருக்கப் பழகிக் கொள்ளுங்கள். அந்த தெய்வீக உணர் வாழ்வது: எப்படி இருக்க வேண்டுமென்றால் அனைத்தும் இறைவன் பொருளே! அனைத்தும் இறைவன் இயக்கமே! நம் தாவமாகிய புண்ணிய பாப வினைகளை வைத்து இறைவனால் நடைபெறும் ஓர் மாயா நாடகமே இறைவன் நடத்துவதால் அனைத்தும் நலமே, அது சுகமே. என சாந்தியும் அமைதியும் கொண்டு இறை உணர்வோடு திருப்தியாக ஏற்றுக்கொள்ளுங்கள். ஆத்திரம், அவசரம், வேகம் இவைகளை கொஞ்சம் கொஞ்சமாக குறைத்து வந்தால் நீங்கள் அனைவரும் நிச்சயமாக

# "ஆண்மலாபம்" பெறுவீர்கள் இது சத்தியம்!

# சாம/தான/அபேத/தண்டம்!!!!

1. **சாம** :– சாமகானம் என்றால் அமைதியான கானம். சாம கானம் என்றால் இனிமையான கானம். சாமகானம் என்றால் ஆனந்தமான கானம். சாமகானம் என்றால் இரண்டை ஒன்றுபடுத்தும் கானம். சாம கானம் என்றால் இறை சொரூபத்தையே மகிழ்விக்கும் கானம். சாமகானம் என்றால் கொந்தளிப்பை அடக்கி சாந்தி நிலவும் கானம். சாம கானம் என்றால் பக்தியை மேலோங்கவைக்கும் கானம். இப்படியே இன்னும் சாமகானத்திற்கு நிறைய விளக்கம் கொடுத்துக் கொண்டே போகலாம். அப்படிப்பட்ட சாமகான நிலைப்படி, அறியாமையிலிருக்கும் ஒருவனுக்கு சிறிது சிறிதாக, அறிவை ஊட்டி அறிவை வளர்க்க வேண்டும். அறியாமையை விரட்டுவதற்கு கடும் சுடும் சொல்லோ, அவனுக்கு கடின முறையில் பாடம் நடத்தவோ, கண்டிப்பு, தண்டிப்பு முறையில் அவனைத் திருத்த முயற்சிக்கவோ, ரஜோ குணமுறையில் அவனுக்கு சிட்சை செய்வித்து அறியாமையை விலக்க முயற்சி செய்யவோ கூடாது. ஒருவனை ஆட்படுத்தும் நிமித்தம் அஹங்காரத்தையோ, அதிகாரத்தையோ பிரயோகிக்க கூடாது. இம்முறை எல்லோர்க்கும் பொருந்தாது தான். முதிர்ச்சியான 'வலிய மரத்தைத்தான்" உத்தரத்திற்குப் பயன்படுத்த முடியும். இளமையான மரம் தூணுக்கு பயன்படாது. அதுபோல அம்மாணவனிடம் அடக்கம், கருணை, சேவை, பக்தி, ஆற்றல் ஆகிய இந்த ஐந்தும் இருக்கிறதா என சரிபார்க்க வேண்டும்!



உ

இவனே இப்பயிற்சிக்கு உரியவன் என தேர்ந்தெடுக்கலாம். "இதை நன்றாக கவனம் வைக்க வேண்டும்!" ஒருமாணவனுக்கு ஆரம்ப காலத்திலும் சரி. இடைப்பட்ட காலத்திலும் சரி. முதிர்ச்சியான காலத்திலும் சரி, கடும், சுடும், வார்த்தைகள் பேசியோ; கோபத்துடன் அடித்து உதைத்து முறையில் செயல்படுத்தியோ; ஞாயம் கொடுக்கும் நிலையில் பேசியோ; "ஆன்மீகத்தை" வளர்த்தால் "அது ஆன்மீகமாகாது". அவன் "பக்தனாக மாட்டான்"; அவன் "பத்தராவான்" அதாவது பற்று வைக்கும் கொல்ல ஆசாரியாவான். காரணம் இவர்களுடைய கண்டிப்பு, தண்டிப்பு, வலிய முறைகள்தான் அவன் "மனதில்" அப்படியே பதிந்து விடும். இங்கு பலன் இல்லாமல் போய் விடும்! காரணம்?

"விளைய வேண்டிய உள்ளம் வெம்பிப்" போகும் அதாவது உதவாமல் போய் விடும். இங்கும் ஓர் பழமொழியை சொல்லுவார்கள். அதாவது "அடியாத மாடு பணியாது" என்பார்கள். இங்கு மாட்டைத்தான் சொன்னார்களே தவிர மனிதனை சொல்லவில்லை! மாட்டைப்போல் பணியாத பண்படாத மனிதனை விட்டு விடு. அவனை திருத்த முடியவே முடியாது. காலம் தான் அவனுக்கு பதில் சொல்லும். "சாந்தியே உருவான "உன்" பார்வைபட்டவன்" அடுத்த ஜென்மாவில் அவசியம் கரையேறி விடுவான் இது சத்தியம். இதுவே சாம (காரணத்தின்) த்தின் பொருள் விளக்கமாகும்.

2. தான(ம்) :— "அவனுக்காக உன்னையே தானம் செய்"

இங்கு இதைக் கொடுப்பவனுக்கும் குறையாது! உன்னிடம் இருந்து வாங்குபவனுக்கும் மறையாது! "நிறைந்து இருக்கும்"!!!

"அவனுக்காக உன்னையே தானம் செய்ய வேண்டுமென்றால்" "நீயே" அவன் (இறைவனுக்கு) "அவனாக" வேண்டும். அது உன்னால் முடியாது தான், ஆனாலும் "அவன் அருளால்" சாதகனே அவனாக முடியும். இதன் உண்மை பொருள்



உ

என்னவென்றால் உனக்கு எந்த "பெருமை, புகழும்" "பதவியும்" இருக்கவாகாது. எல்லாம் உன்னையே நம்பி இருக்கப்பட்ட அந்த "பக்குவ ஆன்மா" விற்காக உன்னையே அர்ப்பணம் பண்ணவேண்டும். அப்படி எப்படி அர்ப்பணம் பண்ணமுடியும் என கேள்வி எழலாம்? இதற்கு ஒரே வழிதான், உன்னையே அவனுக்கு தானம் செய்வது என்றால் நீ "ஓர் ஓடமாக" அல்லது "ஓர் ஏணி" ஆகணும். அப்படி ஆகமுடியும். அப்படி நீ ஆகவில்லையானால் அவனை எப்படி பரண் ஏற்றுவாய்? எப்படி கரை யேற்றுவாய்? நீயும் அவனும் இணைந்து கரை யேற முடியாது, யாராவது ஒருவர்தான் கரை யேறமுடியும் இணைந்து பரண் ஏறவும் முடியாது) அவனா? நீயோ? (பரண் ஏறவும் முடியும்.

"பரணும் கரையையும் கண்டவன்" (ஆனவன்) ஆகவே இனி அது உனக்கு தேவையில்லை. ஆகவே நீ "ஓர் திருப்பாதம்" "தாங்குபவன்" ஆனால்தான் உன்னையே நீ தியாகம் (தானம்) பண்ணியதாகும்.

"3. அபேத": — இங்கு பேதம் களையப்பட வேண்டும். அபேத திருஷ்டி ஓங்கவேண்டும். ஆரம்பகாலத்தில் இருந்தே தன் சாதகனுக்கு "குற்றம் குறை காணா நிலையும், விருப்பு வெறுப்பு கொள்ளா நிலையும்", எங்கும், எதிலும், எந்நிலையிலும், எக்காலத்தும், "பேதம் காணா" நிலையையும், வேகதாபம் இல்லாமலும், ஆத்திரம் அவசரம் இல்லாமலும், நிதானமாக (உன்னையே தானம் செய்த நிலையில்) பொறுமையே ஆபரணமாகவும் கவசமாகவும் ஏற்றுக்கொள்ளச் செய்து; உன்னுடைய "ஸ்வய அனுபவ நிலையை" அவனுக்கு உணர்த்தி அவனை பக்குவப் படுத்த வேண்டும்!



உ

உன்னுடைய "பேதம் காணாத சாதனைதான்"
அவனுக்கு அனுபவமாகுமேயன்றி,
"உன் போதனை அவனுக்கு உதவாது"! (இது அனுபவம்)
அபேத திருஷ்டியை அவனுக்கு உணர்த்துவது என்றால்

1. அனைத்து ஜீவசரீரங்களும் புண்ணியபாபத்தாலான "பதுமைகள்".
2. அப்பதுமைகள் அவரவர் காரியங்களை ஒழுங்காகச் செய்கின்றன.
3. அனைத்துப் பதுமைகளும் அவரவர் "வினையை" வைத்துக் கொண்டு அதற்குத் தக்க "நீதியினால்" இயங்கிக் கொண்டு அவரவர் "விதியின் வழியே செய்கின்றன.
4. விதி என்ற நாவதேவன் (இறைவன்) எந்த "பாரபட்ச தோஷமும் இன்றி" ஒழுங்காக நடத்துகிறான்.
5. நம்முடைய "மனோ சுபாவமே" வித்தியாசமாகத் தோற்றுவிக்கிறது.
6. இந்த மனோசுபாவத்தை விட்டுவிட்டால் அனைத்து பேதமும் மறைந்துவிடும்.
7. அந்த வினையும், அதை நடத்தும் சக்தியும், அதற்கு ஆதாரமான விதியும், நமக்கும் இவ்வுலகமும் இல்லை. "அவை ஒரு மாயா காரியமே"!
8. நாம் மேலே கூறிய அனைத்திற்கும் "சர்வ சாட்சியாக" இருக்கிறோமேயன்றி நாம் அவைகள் அல்ல!
9. சர்வ சாட்சித்தன்மையையும் தாண்டிய "பர சொரூபமே நாம்" இது சத்தியம்!
10. **"அதுவே நாம், நாமே அது"** என்ற பரிபூரண நிலையில் பேதங்களே அபேதமாகும்!

**4. தண்டம்** :— தண்டம் என்றால் ஸாஷ்டாங்க நமஸ்காரம். தண்டம் என்றால் ஒரு கம்பு எப்படி "எந்த விசாரணையும் இன்றி, எந்த தடங்கலும் இன்றி, "எவ்வித கேள்வி பதிலின்றி", "எந்த முயற்சியும் இன்றி", "எவ்வித சலனமும் இன்றி", **"எப்படி தடால்"** என விழுகின்றதோ, அதே நிலையில் "சர்வார்ப்பணமாக" "தண்டம் சமர்ப்பித்தலாகும்"!
தம் மாணவன் அவ்வாறு "சரண்டர்" ஆவதற்கு தான் வழிகாட்டியாக இருக்க வேண்டும். சரணாகதி, சரணாகதி, என தன் வாக்கால் சொன்னால் மட்டும் போதாது. நான் அவ்வாறு "வாழ்ந்து காட்ட வேண்டும்."



உ

இப்படி தண்டம் சமர்ப்பித்தலின் ரகஸ்யம் என்னவென்றால், இங்கு "சந்தேகமும்", அதனால் "தோஷிகளும்" அவஸ்யம் இருக்காது, இருக்கலாகாது. இரண்டாவதாக எதிலும் "விட்டுக்கொடுக்கும்" நியமம் வரவேண்டும்.

## "விட்டுக்கொடுத்தால் விக்னங்கள்" மறையும்!

இங்கு?

"மன்னிப்பு கேட்பவன் மனிதன் ஆகிறான்"!

"மன்னிப்பு கொடுப்பவன் மஹான் ஆகிறான்"!

ஆகவே விட்டுக்கொடுப்பதனாலே "சரணாகதியும்" அடங்கி விடுகிறது. இதில் "ஓர் அனுபவ ரகஸ்யம்" எப்படி இருக்கிறதென்றால்? ஓர் பெரியவர் இப்படி ஏன் செய்தாய்? என்றோ இப்படி ஏன் பேசினாய்? என்றோ, ஓர் சாதனையாளனைக் கேட்டால் அச்சாதனையாளனின் பதில் எப்படி இருக்க வேண்டுமென்றால்?

"ஐயா! அறியாமல் பேசிவிட்டோம் என்றோ "அறியாமல் செய்துவிட்டோம்" என்பதான் அமைய வேண்டும். மேலும் பணிந்த நிலையில்,

"ஐயா! இனி இவ்வாறு பேசாமலிருக்க, இனி இவ்வாறு செய்யாமலிருக்க கிருபை செய்ய வேணுமென்று பணிந்துரைக்க வேண்டும்"!

அதற்கு மாறாக!

"அச்சாதகன் நான் எப்போது எங்கே பேசினேன் என்றோ"!

"நான் எப்போது எங்கே இதை செய்தேன் என்றோ"!

## "மறுப்பு கூடாது"

"அப்படி மறுப்பு அச்சாதகன் செய்வானாயின் அவன் அந்த பெரியவரின் வாக்குக்கு குற்றம் கற்பிக்கிறான் என்றும், மறுப்பு தெரிவிக்கிறான் என்றும், அவரை "மதிக்கவில்லை" என்றும் பொருள்படும். ஆனால் இக்கலியுகத்தில் இப்படி நடப்பது மஹாமஹா கடினமாகும்.



உ

அங்கு தண்டம் சமர்ப்பிக்கிறோம் எனச் சொல்லும் அர்த்தமே இல்லாமல் போய்விடும்.

இதன் காரணம் என்னவென்றால்?

அங்கும், இங்கும், எங்கும், பரிபூரணப் பொருளே!

ஆசை மனம் படைத்த உன்னை, அம்மன எழுச்சியை விட்டுவிட்டாயா? இன்னமும் இருக்கிறதா என அது உன்னைச் சரிபார்க்கிறது எனப் பொருள் கொள்ள வேண்டும். "தண்டம்" என்றும், "பணிவு" என்றும், "சரணாகதி" என்றும், "விட்டுக் கொடுத்திடும்" என்றும், "வாய் ஞானம் பேசிப் பயனில்லை"! அது அனுபவ ஞானம் ஆகவேண்டுமானால் இந்த "**தண்டம்**" என்பதை வழிநடத்துபவர் வாழ்ந்து காட்ட வேண்டும். அதை வாய் ஞானமாக போதிக்கலாகாது.

"நெருப்பில்லாமல் புகையாது" என்ற நிலைப்படி எப்போதோ எங்கேயோ எப்படியோ நடந்த சம்பவத்தை சுட்டிக் காட்டும்போது அதை பொறுமையாகவும் அமைதியாகவும் ஏற்றுக் கொள்வதே "தண்டம் சமர்ப்பிக்கும்" நிலையாகும். இப்படி விட்டுக் கொடுத்து விலகுவதால் உண்மையான சாந்தியும், அமைதியும், அதனால் ஆனந்தமும் பெறமுடியும்!

ஓம் அன்புச் செல்வா! "**பவித்ரா!**" உன் ஆழ்ந்த முக்கியமான "சாம, தான, அபேத, தண்டம்" கேள்விக்கு இதில் பதில் அவன் கொடுத்திருக்கிறான். இவைகளை ஆழ்ந்து நோக்கின் இவை கள் அனைவரையும் சாதகரியில் ஏற்றுக் கொள்ளச் சொல்வதாக! ஞானக்குழந்தைகளாகிய அனைவரும் இந்நான்கு நெறி முறைகளையும் முறையாக கற்று சாதனை செய்து "**நாம் அது**" என நிலை பெறுவீர்களாக என ஆசி கூறுகின்றேன்!

பாபா.



(ஸத்திய வாக்கை)

ஸத்தியம் பேசு. ஓம் தர்மம் செய்.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்!

"ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெயராம், ஓம்!"

"அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம், அகமே எல்லாம்!"

"ஜெகம், பரமும், ஜீவர்களும், சிறிதும் இல்லை"!

அன்புமயமாயும், அறிவு சொரூபமாயும், ஆனந்தமயமாயும், விளங்கும் ஆனந்தாஸ்ரமும், அன்பின் குடியும், இணைந்த அன்பர்களே! எம் செல்வச் சீமாட்டியும், எம் தவழும் மழலையாயும், ஞானப்புதல்வனையும், அமைந்த எம் குழந்தாய்! "ஸத்ஸித் ஆனந்தா"! ஓர் சிறிய விளக்கம் தருகிறேன் அதை உணர்வால் உணர்க!

"வினையும், மதியும், விதியும்!!!"

1. வினை:— குழந்தைகளே! 84 லட்சம் ஜீவகோடிகளும் 'புண்ணிய பாப வினை' சம்பந்தப்பட்டவர்களே. அனைத்து ஜீவ வர்க்கங்களின் சரீரங்களும் "வினைக் கூடுகளே". ஒவ்வொரு ஜன்மாவிலும் அவரவர் செய்யும் புண்ணிய பாப வினை அனுபவித்துக் கொண்டும், மேலும் வினைகளை சேர்த்துக் கொண்டும், அப்படி சேர்க்கும் வினைகளை மொத்தக் கணக்கில் கொண்டு சேர்த்துக் கொண்டும், பிறகு அம் மொத்தக் கணக்கிலிருந்து தமக்கு தேவையானவைகளை மட்டும் அந்த ஜன்மாவில் எவ்வளவு அனுபவிக்க வேண்டுமோ அவைகளை மட்டும் எடுத்துக் கொண்டும் பிறவிகளை எடுத்துக் கொள்கிறார்கள். அப்படி எடுத்து வந்த வினைகளை மட்டும் அனுபவித்தால் வினையும் முடிவுறும், பிறவியும் தொடராது. ஆனால் அந்த கணக்கை மட்டும் முடிக்காமல் மேலும் மேலும் சேகரித்து விடுவதால்



உ

வினையும் பெருகுகிறது. பிறவியும் தொடருகிறது. இந்த
ஓர் உண்மை என்னவென்றால் "
சேமிப்பின் மொத்த மூட்டைக்கு **"சஞ்சிதம்"**
என நாமம் வழங்கப்படுகிறது இதை **"ஆதி"** யென்றும்
சொல்லுவோம். இதைப்படி "வினைக்கணக்கு" என்றும் சொல்லுவோம்.
அந்த ஆதியாகிய சஞ்சிதத்திலிருந்து நம் சமயம் எடுக்கும் பிறவிக்கு
கொண்டுவரும் வினைக்கு **"பிராரப்தம்"** என்று சொல்லுவோம்.
நாம் ஏற்றுவந்த பிராரப்தத்தை அனுபவிக்கும் போது "நம் அறியாமை
யின் அஹங்காரத்தாலும், அபிமானத்தாலும்" மேலும் வினைகளைத்
தேடிக்கொள்கிறோம். அப்படி தேடும் வினைகளுக்கு கொடுக்கும் பெயர்
**"ஆகாமியம்"** என்று சொல்லுவோம். இதை **"வியாதி"**
யென்றும் சொல்லுவோம். இந்த வியாதியாகிய ஆகாமியம் எப்படி
தொடர்கிறதென்றால், அனைத்தும் "இறைவன் செயலாகவும்" அனைத்தும்
"இறைவன் பொருளாகவும்" இருக்க, நம் அஞ்ஞானத்தால் மறந்து அதாவது நம்
கவனக்குறைவால் **"நான்"** செய்தேன் என்றும் **"என்னால்"**
முடிந்தது நான் இல்லையேல் நடைபெறாது அனைத்துக்கும் நானே பொறுப்பு
என்ற **"அஹங்காரத்தையும்"**; இவை அனைத்தை
யும் **"என்னுடையது"**, எங்கப்பனுடையது, என்
பாட்டனுடையது, என் மூதாதையர் தேடிய பொருள் என அறியாமை
யினால் **"அபிமானத்தையும்"** பெருக்கிக்
கொள்வதால் இந்த ஆகாமியமாகிய வியாதி முன் சேமித்து வைத்த
சஞ்சிதமாகிய ஆதியில் சேர்ந்து கொள்கிறது. இந்த அறியாமை
யின் அஹங்காரத்தையும், அபிமானத்தையும் ஏற்காதிருந்
தால் அனைத்தும் இறைவன் செயலென்றும், அனைத்தும் இறைவனுடையதே
என்னும் "சர்வார்ப்பணத்தால்" ஆகாமிய வினை தொடராது. வந்த பிராரப்தம்
அனுபவித்துத் தீர்ந்துவிடும். ஞானாக்னியினால் சஞ்சிதத்தையும் எரித்து
விடலாம்; கர்மாவும் முடியும்; ஜன்மாவும் இல்லை.



உ

## மதி :— குழந்தைகளே!

மதியென்றால் மனம் என்று சொல்வதாகும். இதை புத்தி என்றும் சொல்வாம். இது மனம் என்ற நிலையில் இருக்கும் போது "எண்ணம்" என ஒன்றைத்தான் குறிக்கும். இது புத்தியென்ற நிலையில் இருக்கும் போது "கற்பனையால் பலவாக விரிவடைகிறது"

உதாரணம்:— மரம் இது எண்ணம்! பலரக மரங்கள்!
மிருகம் இது எண்ணம்! பலரக மிருகங்கள்!
பறவை இது எண்ணம்! பலரக பறவைகள்!
மீன் இது எண்ணம்! பலரக மீன்கள்!
மனிதன் இது எண்ணம்! பலஇன மனிதர்கள்!

இப்படி ஒன்றாகவும் பலவாகவும் பிரித்து அறிந்து. இது இன்னது செய்யும் இது இப்படி இருக்கும்; இது இதனால் ஆனது. இது இப்படிப்பட்டது என இன்னும் பற்பல விதமாக "குணாதிசயங்களை" கற்பனை செய்வது மதியாகும். இந்த மதியென்ற கற்பனையானது அனைத்து ஜீவ கோடிகளின் இயக்கங்களாகிய "வினையை" சம்பந்தம் கொண்டிருக்கும். இந்த குணாதிசயங்களும், புண்ணிய பாப வினைகளும், ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டதாகும். இந்த குணாதிசயங்களையும், புண்ணிய பாப வினைகளையும் நம் "**கற்பனையில்**" இணைத்து நடத்துவது "**மதி**" ஆகும். இதிலிருந்து என்ன உணர்கிறோம் என்றால்?

"**குணம்**" இல்லாமல் "**வினை**" இல்லை. வினை இல்லாமல் "**மதி**" இல்லை. ஒன்றிலிருந்து ஒன்றை பிரிக்க முடியாது. இந்த மூன்றும் இணைந்ததே "**ஜீவ இயக்கமாகும்**"

இந்த மூன்றும் இணைந்ததால் அவை ஓர் ஜீவ போர்வையாகி நம் "ஸ்வய சொரூபமான "**ஆத்மாவை**" மூடிக் கொள்வதால் "**ஜீவன்**" என்ற நாமம் சூட்டப்படுகிறது! இந்த அறியாமையினால் சூழப்பட்ட இந்த ஜீவபோர்வையானது கழற்றி எறியப்பட்டாலொழிய ஜீவன் முக்தி இல்லை என்றே சொல்வாம். ஆனாலும் ஆத்மா சுகசொரூபமே! இந்த ஜீவபோர்வையே "பந்தம்" என பேசப்படுகிறது.



இந்த ஜீவ போர்வை வந்தவுடன் **"நான்"** **"என்னை", "என்னுடையது"**, என்ற அஹங்கார அபிமானமாகும்! இதுவே ஆகாமிய கர்மாவில் வினைகளைச் சேர்த்து பிறவிக்கு வித்தாகி விடுகிறது. ஆனால் இந்த மதியின் இயக்கம் **"மனித"** இனத்திற்கு மட்டுமே பொருந்தும். மற்றும் அனைத்து ஜீவகோடிகளும் அவரவர் வினையின்படி தாமே இயங்கும். இதில் விசேஷம் என்னவென்றால் அனைத்து ஜீவ வர்க்கங்களும் தாமாகவே "வினை அறிந்தும், நிலை அறிந்தும்" இடம், உணவு, தற்காப்பு இனப்பெருக்கம் இவை நான்கையும் இயல்பாகவே இயற்கையின் நியதியில் தேடிக் கொள்கிறது. ஆனால் அவைகளை நாம் காணும் போது "மனம் என்ற மதியினால்" இயங்குவதைப் போல தோற்றும். இவை அனைத்தும் **"ஓர் மாயா"** காரியமாகும்!

**3. "விதி":** — அன்புக் குழந்தைகளே!

மேலே சொன்ன அந்த மாயா காரியத்தின் நாயகனே **"விதிக் கடவுள்"** என்றும், விதி நாயகன் என்றும், இயற்கை என்றும், இறைவன் என்றும், பல்வேறு நாமங்களில் பேசப்படும். இவை அனைத்தும் காலத்திற்கு உட்பட்டு நடைபெறுவதால் இதை **"காலதேவன்"** என்றும் சொல்லலாம். இதில் ஓர் உண்மை என்னவென்றால்? **"விதியின் வழியே மதி செல்லும்"!!** என்றும் பேசப்படுகிறது. இந்த விதியை "அன்று எழுதியவன் அழித்து எழுதப் போவதில்லை" என்றும் பேசப்படுகிறது! இங்கு ஓர் உண்மை என்னவென்றால்? "புண்ணிய பாவ வினையாகிய பிராரப்தத்தை மதியென்னும் மனதை வைத்து, விதி என்னும் காலதேவன் நடத்துகிறான்" எனக் கொள்ள வேண்டும். ஆகவே இங்கு இம்மூன்றும் இணைந்து செயல்படுவதால் இதை "மாற்றவோ, மறுக்கவோ விலக்கவோ" இறைவனாலும் ஆகாது எனவும் பேசப்படுகிறது. ஆனாலும்?



உ

இறைவன் நம்பிக்கை உள்ள பக்குவ ஆன்மாக்களுக்கு மாற்றவோ, மறுக்கவோ, விலக்கவோ முடியாது தான். ஆனால் அதன் **"வேகத்தை"** குறைக்கமுடியும்!
(நீங்கள்) அதை முன்பின் தள்ளி வைக்கவும் முடியும்!

இதை இன்னமும் நன்றாக ஆராயுமிடத்து பாவம் புண்ணிய பாப வினைக்கூறுஎன உணர்கிறோம். இந்த வினையை நடத்திமுடிப்பது மதியாகிய மனமாகும். இந்த மனதின் இயக்கத்தை விதியாகிய காலதேவன் நடத்திவைக்கிறான். ஆகவே இங்கு புண்ணிய பாபவினை இல்லையானால் அவற்றை இயக்கும் மனதிற்கும் வேலை இல்லை. அந்த மாயாமனமாகிய மதி இல்லையானால் இவைகளை **"சாட்சி"**யாக கவனிக்கும் விதிநாயகனாகிய காலதேவனுக்கும் வேலை இல்லையெனலாம். அப்படியானால் இதை வரிசைப்படுத்தி சொல்வது என்றால்?

**"வினை"** இல்லையானால் **"மதி"**யாகிய மனதிற்கு வேலை இல்லை!
**"மதி"** என்றமனம் இல்லையானால் அதை நடத்தும் **"விதி"**க்கும் வேலை இல்லை!

இதை!

## "விதியின் சதியென்று பேசப்படும்"!

இதை ஏன் இப்படி சொல்கிறோமென்றால்?

மேலே கூறிய இந்த "வினையும் மதியும் விதியும்" இணைந்து இயங்குவதை ஏன் **"சதி"**யெனச் சொல்கிறோம் என்றால்? இந்த விதியாகிய காலதேவன் இதை யாமே செய்தோம் என அப் **"பழியை"** தான் ஏற்க மாட்டான். ஆகவே இதை சதியெனச் சொல்கிறோம்.

## "காலன் பழி ஏற்க மாட்டான்"!

எனச் சொல்வதுண்டு.
எப்படி என்றால் காலன் வந்து இவ்வுயிரை எடுத்துச் சென்றான் என்ற பழியை ஏற்காமல், அதாவது அப்படிச் சொல்லாமல், ஆக்ஸிடெண்ட் என்றும், தற்கொலை, வியாதி, துர்மரணம், பூமிஅதிர்ச்சி என இன்னும் பல விதமாக, மரணம் சம்பவித்தது என்பதாக இருக்குமே தவிர



"காலன்" வந்தான், "உயிரை" யெடுத்துச் சென்றான், என எவரும் சொல்வதில்லை. ஆகவே இதை பாவம் ஓரிடம் பழி ஓரிடம் என சொல்வதுண்டு. இதை வைத்து ஓர் சிறிய கதை சொல்கிறோம். கவனமாகக் கேட்கவும், நீங்கள் கதைகேட்கும் குழந்தைகள், ஆகவே உங்களுக்கு கதை சொல்லியே உங்களை "ஹரி துயில்" கொள்ளச் செய்வோம்.

கதையின் பெயர்!

# "காலன் பழியேற்க மாட்டான்!"

எம் அன்புச் செல்வங்களே! எம் ஆனந்த மூடிக் குழந்தாய்! "ஸத்" ல் விளைந்து "ஸித்" ல் அமர்ந்த எம் "ஆனந்த" மான கண்மணியே!

ஓர் சமயம் ஓர் குடியானவன் தன் வழிப் பயணத்தில் தன் மனைவியையும் உடன் அழைத்துச் சென்றான். வழியில் ஓர் ஏரி, அதன் கரையில் ஓர் பெரிய ஆலமரம். அம்மரத்தின் அருகில் வந்ததும் குளிர்ந்த தென்றல் வீசியது போலும்? அப்பெண் சொன்னாள். ஸ்வாமி! இங்கு சற்று ஓய்வெடுத்து விட்டுப்பின் செல்வோமே என்றாள். அவனும் சம்மதித்தான். அவள் அம்மர நிழலில் சற்று சாய்ந்தாள். அவன் சொன்னான் இங்கேயே படுத்திரு நான் அருகில் உள்ள கிராமத்தில் ஏதேனும் ஆகாரம் வாங்கி வருகிறேன், நாம் இருவரும் ஆகாரம் உண்டு பசியையும் களைப்பையும் போக்கி விட்டுப்பின் பயணத்தை தொடரலாம் என்றான். அவளும் சம்மதித்தாள். அவனும் அருகில் உள்ள கிராமத்திற்கு சென்றுவிட்டான்.

அப்பெண் களைப்புடன் இருந்ததால் நன்றாக கண் அயர்ந்து தூங்கி விட்டாள். "இவள் விதிமுடியும் நேரம் வந்தது" போலும் அவ்வால விருட்சத்தில் என்று ஓர் வேடன் எய்த பாணமானது ஓர் கிளையில் சொருகி இருந்தது. இவள் தூங்கிக் கொண்டிருந்தாள். அதுசமயம் ஓர் வன வேடன் அங்கு "அவன் விதிப்படி" அங்கு வந்து சேர்ந்தான். இவளை அவன் கவனிக்காமலேயே அம்மரத்தின் மறுபகுதியில் படுத்தான், வேடனும் தூங்கி விட்டான்.



உ

"இப்பொழுது விதி என்ற மாயை வேலை செய்து போலும்?

"இவருக்கு விதி சூழ்ந்த தன்மையினால்" காற்றின் வேகத்தில் அசைந்த மரக்கிளையானது அந்த பாணத்தை நழுவ விட்டு விட்டது. அங்கு நழுவிய அப்பாணமானது இவள் மார்புக்கு நேராக வந்து பாய்ந்தது போலும்? அவள் மரண வேதனையில் "ஐயோ" என அலறினாள். மறுபகுதியில் படுத்திருந்த அவ்வேடுவன் இந்த அலறல் சப்தத்தைக் கேட்டு எழுந்தான். எழுந்தவன் குரல் என ஓடிவந்து பார்த்தான். நிலைமையை அறிந்து கொண்டான். உடனே வந்தவன் அப்பாணத்தை பலம் கொண்டு பிடுங்கினான். அங்கு கிராமம் சென்றிருந்தவன் வந்து விட்டான். வந்தவன் இக்காட்சியை கண்களால் கண்டான். அவன் எண்ணினான் இந்த வேடுவன் தன் மனைவியின் நகைக்காக இவளை கொலை செய்திருக்கிறான் என உணர்ந்தான். அடபாவி! என் மனைவியை கொன்று விட்டாயே என அலறினான். "ஐயோ இது என்ன கொடுமை" நான் இப்பெண் மீது தைத்த பாணத்தைதானே எடுத்தேன் என்றான். ஆனால் அங்கு சாட்சி சொல்லும் அப்பெண்ணை காலதேவன் கவர்ந்து சென்று விட்டான்! கணவன் மனைவியை இழந்து பரிதவித்தான். அப்பாவி வேடுவன் கொலைகாரன் எனப் பழிசுமத்தப்பட்டான்.

அவ்வூர் அரசன் நீதிமான் தெய்வபக்தி நிறைந்தவன். அவன் இவ்வழக்கை விசாரணை செய்தான். அவள் மார்பிலிருந்து பாணத்தை பிடுங்கினான் வேடுவன். ஆனால் அப்பாணத்தால் குத்திக் கொலை செய்த குற்றம் சாட்டப்பட்டான். அவ்வரசன் விசாரணையில் "சாட்சி நிலையில் கொலை குற்றம் நிரூபிக்கப்படுகிறது! ஆனால் அவ்வரசன் வேடுவனைக் காணும் நிலையில் அவன் மனசாட்சி நிலையில் அவ்வேடுவன் குற்றவாளி அல்லவென உணர்க்கப்படுகிறான்! ஆனாலும் இவ்வழக்கில் ஓர் உண்மையை உணராமல் தீர்ப்பு வழங்கலாகாது என முடிவு செய்த அரசன், அவ்விருவரையும் விருந்தினர் பகுதியில் தங்க ஏற்பாடு செய்து விட்டு நாளை தீர்ப்பு என்றான். தாம் மட்டும் இறைவனிடம் உருகி வேண்டினான். இவ்வரசன் அழுகுரலுக்கு இறைவன் செவிசாய்த்தான். "இறைவன் அசரீரியாக சொன்னான்



உ

இறைவன் வாக்கியம்:- ஏ அரசே! உன்னூரில் ஓர் வசுதாதிபதி வீட்டில் திருமணம் நாளை காலையில் நடைபெறுகிறது. நீயும் அவ்விருவரும் அங்கு சென்றால் "நீதிமுபம்பரும்" செல்லும்பாதை நேர்வழியாக இருக்கக்கூடாது. புறக்கடைப்பக்கம் பசுந்தொழுவத்தின் பக்கமாக இருக்க வேண்டும் என்றான் எம் இறைவன். அரசன் தலைவணங்கி அதை மௌனமாக ஏற்றுக் கொண்டான்.

தெய்வ வாக்குப்படி அரசனும், வேடுவனும், வழிப் போக்கனும் அத்திருமண வீட்டிற்குச் சென்றனர். நேர்வழி செல்லாமல் பசுந்தொழுவத்தின் வழியே சென்றனர் அம்மூவரும். அங்கு அம்மூவரும் ஓர் காட்சியைக் கண்டனர். அதாவது ஓர் முரட்டுத்தனமான இளங்காளை ஒன்று கூர்மையான கொம்புடன் அங்கும் இங்கும் ஆடிக் கொண்டிருந்தது. அதன் அருகே கருத்த மேனியுடன் கிங்கரர்கள் போல் பயங்கர தோற்றத்துடன் இருவர் நின்று கொண்டு, இவ்வார்த்தைகள் பேசிக் கொண்டிருந்ததை இம்மூவரும் கேட்க முடிந்தது.

ஒருவன்:- ஏ தூதுவா! நம் எஜமான் எமதர்மராஜன் அதோ திருமண மேடையில் மாப்பிள்ளை கோலத்துடன் அமர்ந்திருப்பவன் உயிரை கொண்டு வரும்படி அனுப்பினாரே. அவன் நலமாகவும் எந்த வியாதியும் இன்றி வெகு ஆரோக்கியமாக இருக்கிறானே அவன் உயிரை எப்படி எடுக்க முடியும்? அதற்கு நம் எஜமான் ஏதேனும் வழி சொன்னாரா? அடியேன் அதை கவனிக்கவில்லை!

மற்றவன்:- ஏ காவா! ஆமாம் நண்பா சொல்லி அனுப்பியிருக்கிறார். நேற்று ஓர் பெண்ணின் உயிரைக் கொண்டு செல்லவில்லையா? அதைப் போல்தான் இவன் உயிரையும் கொண்டு செல்ல வேண்டும். நேற்று அந்த பெண் அயர்ந்து நித்திரை செய்து கொண்டிருந்தாள். எவனோ போட்டபாணம் அங்கு மரத்தின் உச்சிக் கிளையில் தொங்கிக் கொண்டிருந்தது. யாம் காற்றாக மரக்கிளையை அசைத்தோம். ஆனால் நீயோ அப்பாணத்தில் இருந்து கொண்டு நேராக அப்பெண்ணின் மார்பில் பாய்ந்து அவள் உயிரை எடுத்துவிட்டாய். அதேபோல் இன்றும் இக்காளைமாட்டின் கொம்பில் நீ அமர்ந்து கொள். யாம் இதன் கயிற்றை தறித்து விடுகிறோம். நீ காளையை அதன் கொம்பு பிடித்து ஓட்டிச்சென்று கூட்டத்தில் பாய்ந்து வேறு யாவரையும் தாக்காமல், அம்மாப்பிள்ளையை மட்டும் இக்காளையின் கூரிய



உ

கொம்பால் ஒரே குத்தாக குத்தி தூக்கிப்போட்டு அவன் உயிரையெடுத்துக் கொண்டு வந்து விடும். என்றான்!
"அன்றோ ஓர் யானை தாக்கி ஓர் பெண் இறந்தாள்"!
"இன்றோ ஓர் மாடு தாக்கி ஓர் ஆண் இறந்தான்"! இவ்வளவு தானா
என்று தான் உலகம் ஏற்கும்! அது நம்மைச் சாராது.
இங்கு "**பாபம் ஓரிடம்!**" என்றும் "**பழி ஓரிடம்!**"
"என்பதை இச்ஜீவர்கள் அறியார். ஆனால் நாம் மட்டும் அறிவோம்."
இச்சம்பாஷணையை அம்மூவரும் கேட்டதால் தெளிவடைந்தனர்.
குற்றம் நிவர்த்திக்கப்பட்டது. இறைவன் கிருபையால் நீதி நிலைத்தது.
ஓ எம் அருமை செல்வங்களே! மற்றும் எம் ஆனந்தத்தின் உருவமே!

**ஸத் ஸித் ஆனந்தா!**

இக்கதையிலிருந்தும், தற்காலிகமாக நடைபெறும் சம்பவங்களிலிருந்தும், நாம் உணர்வது என்னவென்றால்?

1 பாபம் என்றால்:- "**வினையும், சதியுமாகும்!**"
2 பழி என்றால்:- "**மதியும் விதியுமாகும்!**"

1. அதாவது "வினையென்பது புண்ணிய பாபமாகும்; சதியென்பது அதை நடத்தும் திறமையாகும்."
2. இங்கு மதியென்பது வினைப்போகத்தின்படி கற்பனை செய்யும் மனமாகும்.
"விதியென்பது தர்மதேவன் என்றும், நீதிதேவன் என்றும், காலதேவன் என்றும் சொல்லும் இயற்கையின் இறைவனால் இது நிர்மாணிக்கப்பட்டதாகும்."
இங்கு இறைவன் காட்சிக்கும் வரமாட்டான், வீழ்ச்சிக்கும் வரமாட்டான், புண்ணிய பாபத்திற்கும் வரமாட்டான், எந்த நிகழ்ச்சிக்கும் வரமாட்டான். இவை அனைத்திலும் ஒட்டாமல் இருந்து கொண்டு, "**சாட்சி சைதன்யமாக**" மட்டும் இருப்பான்.
ஆனால் அவனுடைய விஷ்ணுமாயையானது (மூலமாயையானது) எந்த குறையாவும் இல்லாமல், பேதம் இல்லாமல், விருப்பு வெறுப்பு இல்லாமல், பாரபட்ச தோஷம் இல்லாமல், அனைவர்க்கும் "**சமமாக**" நடத்திவைக்கும். அப்படி நடத்துவதால் தான் இறைவனை சாட்சியென்கிறோம்!



இதில் ஓர் சூட்சுமம் என்னவென்றால்? இறைவன்
சூட்சுமமாயும் எந்த எண்ணமும் இன்றி, எந்த செயல்
பாகமும் இன்றி, இவைகளுக்குரிய "எந்த கற்பனையின்
"**மனம்**" இன்றி இருந்தாலும், அவனால்
உண்டாகி அவனைப் பற்றியிருக்கப்பட்ட அந்த மாயையினுடைய"
திறமையினால் ஒழுங்காக நடைபெறுகிறது. ஆனால் அனைத்தும்
இறைவன் செயலென்றும், ஈசன் செயலென்றும், நடப்பதெல்
லாம் நாராயணன் செயலென்றும், அவனன்றி ஓர் அணுவும்
அசையாதென்றும் "நம் இறைவனுக்கு "**உபசார**"
வசனமாகப் பேசப்படுகிறதேயன்றி உண்மையில் இவ்வாறே இல்லை!
ஓம் அமுத சொரூபங்களே! எம் செல்வா ஸத்ஸித் ஆனந்தா!
முடிவாக இப்பைத்தியம் சொல்வது:- உலக சிருஷ்டிக்கு ஸ்ரீ பகவானு
டைய மாயை காரணமாகிறது. அந்த மாயையின் சிருஷ்டியாகிய
மனமானது ஜீவனைப் பற்றியிருக்கப்பட்ட தன்மையினால், மனம் தம்
இஷ்டம்போல் கற்பனையை பண்ணும். அப்படி கற்பனை செய்யப்பட்ட
இந்த மனதிற்கு ஆகாரம் "**நாமரூபங்களாகும்**"
இந்த மனமானது இந்த நாமரூபங்களை புசிக்கும்போது **குண**
சொரூபங்களாக பாவனை பண்ணி சுவைக்கிறது. அந்த குண சொரூப
தோஷங்களே "புண்ணிய பாப வினைகளென்று" பேசப்படுகிறதே தவிர
உண்மையல்ல. அப்படி அந்த புண்ணிய பாப வினைகளின் தோற்றம்
"குற்றம் குறைகளாகவும், பேதமாகவும், விருப்பு வெறுப்பாகவும்"
இந்த மனதினால் தீர்மானிக்கப்பட்டு, அவை "ஆழமாகவும்
அனுபவமாகவும்" பதிந்துவிட்ட தன்மையினால் அவை திரும்ப
திரும்ப மாறி மாறி நிகழ்வதால் இந்த பந்தப்பட்ட ஜீவன்,
பலபிறவி எடுக்க வேண்டிய "நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடுகிறது."
ஆகையினால் "இந்த நாமரூபங்களை", "அவற்றின் குண தோஷங்களை
அதனால் விளையும் மேலே கூறிய "குற்றம் குறை பேதம், விருப்பு வெறுப்புக்களை
அதனால் விளையும் பிறவியென்ற நோயை அறவே முடிவு செய்ய
வேண்டியது இந்த "கற்பனையாகிய மனமே" யன்றி வேறொன்றுமில்லை!
"இவை சாமானியமான காரியமும் இல்லைதான்" ஆனால்



௨

இவற்றிற்கு காரண கர்த்தா ஸ்ரீபகவான்தானே
என எண்ணாமல் "ஸ்ரீபகவானின் மாயைதானே" என
"உணரவேண்டும்"! அப்படி நான்
உணரவேண்டுமென்றால்?
"ஸ்ரீபகவான் "பரமாத்ம" சொருபம்!
பக்குவப்பட்ட ஜீவாத்மாவாகிய நாம் "ஆத்ம" சொருபமாவோம்.

ஆகவே நாம் தள்ள வேண்டியது "மாயையின் காரியத்தையும்"
அக்காரியத்தில் தோன்றிய "அவித்தையாகிய உலகம் & காரியம்"
ஆகிய இரண்டையுமே தள்ள வேண்டும்! இவை தற்பவடிவில் பற்பல
ஜன்மமாக தொடர்ந்து வருகின்ற ஓர் "வியாதி" ஆகும். அந்த

வியாதி நம்மிடம் பரவிய விதம் "சுவைத்து சுவைத்து அனுபவித்
துக்கொண்டிருக்கின்ற "அறியாமையின் குணங்களாகிய"
"நான், என்னும், என்னுடையது" என்ற
அஹங்கார அபிமானங்களாகும். இம்மூன்றையும் எண்ணம்,
சொல், செயல்களால் முழுமையாக பூரணமாக விட்டுவிட்டால்,
நாம ரூப குண தோஷங்கள் இல்லாமல் போய்விடும். மேலே கூறியவை
இல்லையென்றால் ஜீவன் என்ற பேர்கூட இல்லாமல் போய்விடும்.
ஜீவ பேர்கூட இல்லாமல் போய்விட்டால் இருக்கப்பட்டது
"ஒன்றே"
"அதுவே ஆத்மாவாகிய நாம்"
நாமும் மாயையை உடல் உலக காரியமாக தள்ளிவிட்ட தன்மையினால்,
நம் உபாசனாமூர்த்தியாகிய ஸ்ரீபகவானும் "பரமாத்ம"
சொருபமும், காலாதீதமான அந்த "பரசொருபமும்",
அனைத்தும் ஒன்றே என்றும், அது நம் சுகம் என்றும்,
அதுவே யாவும் நீங்களும் என்பது
ஸத்யமாக பிரகாசிக்கும் இது
ஸத்தியம்! ஸத்தியம்! ஸத்தியம்!!!

பாபா.



(ஸத்திய வாக்கை)

ஸத்தியம் பேசு. **ஓம்** தர்மம் செய்.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்!

# "ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெயராம்,ஓம்!

# "அகம் பிரம்மம், ஜெகம்பிரம்மம், அகமே எல்லாம்!"

# "ஜெகம், பரமும், ஜீவர்களும், சிறிதும் இல்லை!"

**அ**ன்பும், **அ**றிவும், **ப**ணிவும், **க**னிவும், **க**ருணையும், **ஸ**த்குரு **ப**க்தியும், **சே**வையும் "**இணைந்த**" "**எம்ஞானமழலைகளே**!" அன்பு இல்லையானால் ஆனந்தம் இல்லை. ஆனந்தம் இல்லையானால் ஞானம் இல்லை. ஆத்மஞானம் இல்லையானால் பிறவியே பெரும் தொல்லை! அப்பிறவிநோயை அறுத்தெரிவதற்காகவே தோன்றிய எம் "**ஆனந்தாஸ்ரமும்**!" "**அன்பின் குடியும்**!"

இணைந்த எம் ஞானச்செல்வங்களே!

உங்கள் சேவையும் ஸ்ரீஸத்குருபக்தியும் இணைந்த தன்மையினால், உங்களுக்குள்ளேயே "**அடங்கி**" இருந்து, உலகையும் ஜீவர்களையும் "**அடக்க**" என்றுமே மனமகிழ்ந்து ப்ரார்த்தனை நிலை பெற வாழ்த்தி ஆசி வழங்குகிறேன்!



# "கேள்வியும்" "பதிலும்"!!

அன்புக் குழந்தைகளே!

உங்கள் அகத்திறப்பும் மனநலமும், ஆன்மசுகமும் பெற வாழ்த்துகிறோம்! உங்களைப் போன்ற எம் மெய்யன்பர்கள் அனேக இடங்களில் அனேக விதங்களாக உண்மையை உணரத் துடிக்கும் நிலையில் கேள்விகள் கேட்பார்கள். இந்த உதவாக்கரை (உதவ அக்கரை) யானவைத்தியமும் "ஓர் கருவியாக இருந்து கொண்டு"

## "அவன் இயக்க இது இயங்கி"

பதில் சொல்லும். அவற்றில் சிலவற்றை கீழே தருகிறது.

"இயக்கம் அவனுக்கே. ஆனால் பொருள் உங்களுக்கே"!!

கேள்வி:- ஐயா! இவ்வுலகமும், நம் உடலும், இங்குள்ள அனைத்துப் பொருள்களும் வினையால் சூழப்பட்டது எனச் சொல்கிறீர்களே. அவ்வினை எப்படி நம்மை தொடர்ந்தது? அவ்வினைக்கு மூலகாரணம் என்ன?

பதில்:- குழந்தாய்! வினையென்றால் புண்ணியம் பாபம் எனச் சொல்வதுண்டு. அவ்விரண்டு வினைகளும் பெயரளவில் வித்தியாசமே தவிர இரண்டும் ஒன்றே. அதாவது ஓர் நாணயத்தின் இருபக்கம் போன்றது புண்ணிய பாபமாகும். அவைகளைப் பிரிக்கவும் முடியாது, விலக்கவும் முடியாது. இவையிரண்டும் நம் எண்ணம், சொல், செயலால் உண்டாகிறது.

கேள்வி:- இவைகளை சற்று விளக்கிச் சொல்ல முடியுமா?

பதில்:- ஓ விளக்கலாமே! சற்று கவனமாக கேள். இவ்வுலகமும் அதன் இயக்கமும் அனைத்துப் பொருள்களும் நம் இறைவனுடையதாக இருக்க, பொருள் மோகத்தினாலும், நம் அறியாமையினாலும் "இவை என்னுடையது" என சொந்தம் கொண்டாடினோம். இச்சொந்தத்தால் பந்தம் என்ற பற்று உண்டாயிற்று. அப்பற்றினால் மோகமும் வெறியும் உண்டாயிற்று. (மோகம் = நான் என்னுடையதை கொடுக்கமாட்டேன்)



௨

அவையே புண்ணிய பாப வினைகளாகி அவை நம்
பிறவியின் வித்தாகி விட்டது. யாம் அது நம்
எண்ணம், சொல், செயலென்று சொன்னதன்
பொருள் என்னவென்றால்? வந்து இருந்து மாறி
மறையும் பொருள்கள் அனைத்தும் "மண்மயமாக"
இருக்க அவை மண்ணே என்று உணராமல் அதன்
நாமரூபத்தில் ஓர் மயக்கம் உண்டாகிறது! அதை
"வஸ்துமோஹம்" எனச் சொல்லலாம். அவை "என்னுடையது" என
எண்ணும் போது அது "அபிமானம்" ஆகிவிடுகிறது. அதை அடுத்த ஜீவனி
டம் சொல்லும் போது "நான் வாங்கியது" என அஹங்காரத்தையும் "
உண்டுபண்ணி விடுகிறோம். இவைகளை அழிக்க வேண்டுமானால் அனைத்தும்
இறைவன் உடைமையாகவும், இறைவன் இயக்கமாகவும், அவை ஒழுங்காக
எந்த பாரபக்ஷ தோஷமும் இல்லாமல் நடைபெறுகிறதென
பொறுமையுடன் அமைதிகாக்க வேண்டும்! செயலைவிட "எண்ண
மும், சொல்லுமே "அதிகசக்தி வாய்ந்த கர்மவித்தாகும்!

கேள்வி:— அப்பா! புண்ணியபாப வினைகளை நல்வினை யென்
றும் தீவினையென்றும் சொல்கிறோம். இவை இந்த ஜன்மா
விலேதான் உண்டாயிற்று? முன் ஜன்மத்திலிருந்தே இவை
தொடர்கின்றனவா?

பதில்:— குழந்தாய்! இப்புண்ணியபாபவினைகள் இப்பிறப்பிற்கே
சொல்லப்படும். முற்பிறப்பின் வினைகளுக்கு வேறு விதமா
கச் சொல்வார்கள்.

கேள்வி:— அது என்ன பெயரோ? அதையும் சற்று சொல்லி விடுங்
கள். வினை! வினை! வினை அது என்ன தீவினையோ? வினையின்

பதில்:— ஏன் குழந்தாய் இப்படி சலித்துக் கொள்கிறாய்? வினையின்
தன்மையை தெரிந்து கொண்டால் தானே நாம் எப்படி
நடந்து கொள்ள வேண்டும் என்ற விவரம் தெரியும்
கவனமாகவும் இருக்க அவை உதவுமல்லவா?

கேள்வி:— ஆமாம் அப்பா! உண்மைதான், அவசியமாக தெரிந்து
கொள்ள வேண்டியது தான். வேறு விதம் என்றால் என்ன?

பதில்:— குழந்தாய்! அவ்வினைகளை மூன்று வகைப்பிரித்து சொல்வார்
கள் நம் அனுபவ ஞானிகள்.

கேள்வி:— ஓகோ! இது நல்வினை தீவினை யென்றும் அதாவது புண்ணிய
பாப மென்றும் சொல்கிறோம். இவை வார்த்தை விளக்கத்தின்
நிமித்தம் தான். ஆனால் இவை "இரண்டும் ஒன்றே" எனவும்
உணர்ந்து கொண்டோம். அந்த மூன்றின் பெயரென்னவோ?



உ

பதில்:— அவைகள் "சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம், என மூன்று வகைப்படும்.

கேள்வி:— இப்படி பெயர் வரக் காரணம் என்ன? காரணம் இல்லாமல் காரியம் இல்லையே? அதையும் சற்று புரியும்படி சொல்லுங்கள் பார்ப்போம். கேட்பதற்கு நன்றாகத் தான் இருக்கிறது. ஆனால் அனுபவத்தில் கவனம் வேண்டுமே? வெறுமனே கேட்டு விட்டுவிட்டால் அதில் பிரயோஜனம் இல்லையே?

பதில்:— உண்மைதான் குழந்தாய்! உண்மையைக் கேட்க வேண்டும். அதை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். அதன்படி நடக்க வேண்டும். அது இல்லாமல் செவிடன் காதில் சங்கை ஊதியவன் கதையாக இருந்தால் அது பிரயோஜனம் இல்லையே!

கேள்வி:— ஆமாம் அப்பா! இதைத்தான் சிரவணம், மனனம், நிதித்யாசனம் எனச் சொல்கிறார்களா?

பதில்:— ஆமாம் சரியாகச் சொன்னாய். இனி வினைகளைப் பற்றி சற்று கவனமாக கேட்பாயாக.

"சஞ்சிதம்":— முன்பல பல பிறவிகளில் நாம் அனுபவித்தது போக மிஞ்சிய வினையின் மொத்த சேமிப்பு இந்த சஞ்சிதமாகும். இதை ஆதி என்றும், பழவினை என்றும், மொத்த மூட்டைகள் என்றும் சொல்வார்கள்.

"பிராரப்தம்":— இது அந்த மொத்த மூட்டைகளிலிருந்து பிரித்தெடுத்து இந்த ஜன்மாவுக்காக "நாம் கேட்டு வாங்கியது" என்றும் இவ்வினையே "தூல சொரூபம்" எனவும் சொல்லப்படும்!

கேள்வி:— அது என்ன அப்பா! நாம் கேட்டு வாங்கி வந்தோம் என்று சொல்கிறீர்கள்? இப்படியெல்லாம் இதன் அனுபவம் தெரிந்திருந்தால் இவைகளை நாம் கேட்போம்?

பதில்:— அந்த அனுபவம் தெரியாமல் மறக்கடிப்பதுதானே நம் மாயாமனதின் வேலை! சரி சரி குறுக்குக் கேள்வி கேட்காதே. இதன் விபரம் எல்லாம் பின்னால் வரும்.

கேள்வி:— சரி அப்பா! இனி குறுக்குக் கேள்வி கேட்கமாட்டோம். கடைசியில் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் தொடர்ந்து சற்று விளக்கமாகவும் அவைகளை சுருக்கமாகவும் சொல்லுங்கள்.

பதில்:— மூன்றாவதாக யாம் சொன்னது இப்பிறவியில் நாம் சேர்க்கும்

"ஆகாமியம்":— இது இந்த ஜன்மாவில் நாமாக இஷ்டப்பட்டு அறியாமையின் காரணமாக, நம் கவனக்குறைவினால் "ஆசை வசப்பட்டு" தேடிய கர்மா ஆகாமியமாகும்.



உ

கேள்வி:- நாமாக ஆசைவசப்பட்டு தேடுகிறோம் என்கிறீர்களே? அதுவும் அறியாமை என்றும் கவனக்குறைவு என்றும் சொன்னீர்களே! அறியாமல் செய்யும் தப்புக்கும் தண்டனை உண்டா? இதற்கு மன்னிப்பு கிடையாதா?

பதில்:- குழந்தாய்! தெய்வநீதியில் அறிந்து செய்தால் அது தப்பு என்றும் அறியாமல் செய்தால் அது தவறு என்றும் பொருள்படும். ஆதலால் தப்பை விட தவறுக்குத்தான் தண்டனை அதிகம்.

கேள்வி:- ஆச்சர்யமாக இருக்கிறதே? ஏன் தவறை அத்தனை முக்கியமாகக் கொள்கிறீர்கள்?

பதில்:- குழந்தாய்! தப்பு என்பது "முடிந்த கதை" அதன் தண்டனை சற்று பாதிப்பு ஏற்படுத்தாது. அது உன் பிராரப்தத்தின்படிதான் நடக்க வாய்ப்புண்டு. ஆனால் தவறு என்பது அறியாமையினால் நடக்கக்கூடியது. "தப்பு என்பது முடிந்த கதை. தவறு என்பது தொடரும் கதை" ஆகவே தவறுக்கு மனம் வருந்தி மன்னிப்பு கேட்க வேண்டும். இனி நடவாவண்ணம் கவனமாகவும் இருக்க வேண்டும்.

கேள்வி:- அம்மா! இந்த தப்புக்கும் தவறுக்கும் கொஞ்சம் விளக்கம் வேண்டும்? இது எங்களை குழப்புகிறது!

பதில்:- குழந்தாய்! "இதை கவனமாக கவனிக்க வேண்டும்"!

**தப்பு**:- தப்பு என்பது முன்வினையின் காரணமாக இரண்டு வினைப்பதுமைகள் ஒன்றுக்கொன்று வினைப்பரிமாற்றம் செய்து கொள்கிறது. இது "பிராரப்தத்தின்படி" நிகழக்கூடியது! இங்கு வினையால் ஒன்றுடன் ஒன்று பாதிப்படைகின்றன என்று சொல்வதைக்காட்டிலும் "பகிர்ந்து கொள்கின்றனர்" என்றே சொல்ல வேண்டும். இதை சத்திய வாசகம் எப்படி சொல்கிறது என்றால் "கொடுத்ததை வாங்க வேண்டும்" என்றும் "வாங்கியதை கொடுக்க வேண்டும்" என்றும் "இதை பற்று வரவு தீர்க்கும் படலம்" என்றும்!

இதை சித்தர்கள் வாசகங்களில்!

"கொன்றனை அனைத்தும்; அனைத்தும் நினைக் கொன்றன"

"தின்றனை அனைத்தும்; அனைத்தும் நினைத் தின்றன" என்றும் குறிப்பிடுகிறார்கள் இதன் பொருள்!

"கொல்பவன் முன்பு கொல்லப்பட்டவனாகிறான்" என்றும்;

"தின்றவன் முன்பு தின்னப்பட்டவனாகிறான்" என்றும்;

"காப்பாற்றுபவன் முன்பு காப்பாற்றப்பட்டவனாகிறான்" என்றும்;

(முன்பு எதைச் செய்தாயோ அதை இன்று திரும்பப் பெறுகிறாய் என்றும் பொருள்படும்.)

கொடுப்பவன் முன்பு வாங்கியவனாகிறான்!



உ

இதுவே இயற்கையின் நியதி. இங்கு
இயற்கையை இறைவனாக கருதுவதால்
இதை "இறைவன் தீர்ப்பு" என்றும் சொல்லலாம்!
இங்கு இயற்கையாகிய இறைவன் ஒவ்வொ
ரு ஜீவர்களையும் தம் "யோகமாயையால்"
"அசைப்பித்து" எந்த வித
பாரபட்ச நோக்கும் இல்லாமல் இயங்க வைத்து விடுகிறான்!
ஆனால்?
"மனம்" வசப்பட்ட இந்த "மனித" ஜீவன் மட்டும்,
அக்கர்மாவுக்கு "நான்தான்" காரணம் என்றும், "என்னால்தான்"
இது முடிந்தது என்றும், இவை அனைத்தும் "என்னுடையதே"
என்றும் அக்கர்மாவை "வலிய ஏற்றுக் கொள்வதே"
"தப்பு" எனப் பொருள்படும்.

"தவறு" என்பது பூர்வபுண்ணியத்தினாலும், இறைவன் திருவருளினா
லும், ஞானிகளின் அனுபவ வாக்கினாலும் விவகாரத்தை விபரமாக
உணர்ந்த ஜீவன், திரும்ப திரும்ப அத்தப்பை அறியாமையினால் அதாவது
தம் கவனக் குறைவால், மேலே சொல்லிய அஹங்கார அபிமானத்தால்
ஏற்றுக் கொண்டு இன்ப துன்பத்தை, தானே ஏற்றுக் கொள்வது "தவறு"
ஆகும். இது எப்படி பொருள்படுகிறது என்றால்?
"பக்குவ ஆன்மாக்களுக்கு மட்டும்"!

உண்மையை உணர்ந்தும், தம் கவனக் குறைவால் திரும்ப திரும்ப
"எண்ணுவது" தவறு என்றும், எண்ணி எண்ணி மனம் புழுங்குவது
உண்மையை உணராமல் தம் கவனக் குறைவில் திரும்ப, திரும்ப
"செய்வது" தப்பு என்றும் பொருள்படும்!

"தப்பு"க்கு தண்டனை "பிறப்பு பிறப்பு" என்றும்,
"தவறு"க்கு தண்டனை "இறை, குரு நிந்தனை" என்பதாகும்.
நிந்தனை என்றால் அவர்கள் வாக்கை அவமதிப்பு செய்வது!



2

இதனால் தான் எம் சிபு சொன்னான் ஓர் பாடலில்
"மனம் தனினால் செய்ததுவே செய்ததாகும்.
மற்றொன்றால் செய்த தெல்லாம் செய்ததாகா"! என்றான்.
காரணம்?
"தாவம் ஏற்று வந்த கர்மாவைச் செய்யும்"!
"மனம் செய்யும் கர்மாவை மறக்க முடியாமல்"
திரும்ப திரும்ப எண்ணி எண்ணி மனதை "பாரம்"
ஆக்கிக் கொண்டு வினையைப் பெருக்கிக் கொள்ளும்."
"மனம் மறப்பதே மனம் இறந்த" நிலையாகும்!

கேள்வி:— நீங்கள் சொல்லி வந்தது அனைத்தையும் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் "மறப்பது என்பது" அத்தனை எளிதாகத் தோன்றவில்லையே!

பதில்:— குழந்தாய்! மறப்பது என்பது "மாற்றுவதாகும்" இது உனக்குப் புரிகிறதா? இதற்கும் விளக்கம் வேண்டுமா?

கேள்வி:— ஆமாம் அம்மா சற்று விளக்கினால் நல்லது. ஏனென்றால் பின்னல் பட்டிருக்கும் மனதிற்கு சகவாச தோஷத்தினால் புரிய சற்று விளக்கம் தேவைதான்?

பதில்:— குழந்தாய்! தப்போ தவறோ! "நடந்தது முடிந்துவிட்டது" என அதை அப்படியே ஏற்றுக் கொண்டு. அந்த தப்பு, தவறைச் "செய்பவனும், அதை ஏற்றுக் கொள்பவனும், அதன் காரண காரியமும் "உன்னையல்லால் வேறில்லை" புண்ணியபாப வினைப்பதுமைதானே. இந்த சரீரமானது புண்ணிய வினை உன்னுடைய அறியாமை என இருந்தாலும், அதுவும் ஒன்று "இயக்கம்" உன்னுடையதுதானே? என இந்த ஒரு எண்ணத்தால். அந்தபாரமான எண்ணத்தை அகற்றவாமே. இதை செய்யாமல் உனக்கு வேறு சாதனைகள் தான் ஏது?

கேள்வி:— அம்மா! நாங்கள் என்னதான் சாந்தி சமாதானம் சொன்னாலும் "கடினமான பாதிப்பு" சாமான்யமாக மறையாதே அதற்கு என்ன செய்வது?

பதில்:— எம் செல்வமே! எண்ணம் சாமான்யமாக மாறுதுதான் அது மறையாதுதான்! இது எமக்கும் தெரியும். முள்ளை முள்ளால் எடுப்பது போல் அந்தபாரமான பாதிப்பு நிகழும் போதெல்லாம் திரும்ப திரும்ப அந்த இறை உணர்வு அப்யாசம் தான் செய்ய வேண்டும். மேலும் மேலும் அந்த பாரமான பாதிப்பு எண்ணம் வந்தாலும் அவை



உ

"அவஸ்யம் பவன் அறியும் போகும்? எப்படி
யென்றால் ஓர் தென்னை மரத்தில் இருக்கும்
மட்டையானது உலர்ந்து விழுந்து விட்டாலும்
அம்மட்டை இருந்த இடத்தில் அது இருந்ததற்கு
தான "வடு மறையாதது"
போல அது இருக்கத்தான் செய்யும். ஆனால் அது
பற்றிய பயம், கவலை, துக்கம், சந்தேகம் இவைகளை மனதிலேயே
குறைத்து குறைந்து குறைத்து இல்லாமல் செய்து விடலாம்.

கேள்வி:— அப்பா! "எல்லாம் ஈசன் செயலென்றும்"! "அவனன்றி அணுவும் அசையாதென்றும்"! முடிவான
பின், தப்பு, தவறு எங்கிருந்து வரும்? அப்படியானால்
அதுவும் அவன் செயல்தானே? பின் அதை ஏன் எண்ணிப்
பார்க்க வேண்டும்? அதை ஏன் பாராட்ட வேண்டும்?

பதில்:— நல்ல கேள்வியப்பா! உன் வழியிலேயே யானும் வருகிறேன்
எல்லாம் அவன் செயலென்றால்; நான் இப்படி செய்துவிட்
டேனே என வருந்துவதும்; அவன் இப்படி ஏன் செய்தான் என
வருந்துவதும் யார்?

கேள்வி:— அதுவும் அவனே!

பதில்:— அவன் அப்படி புலம்ப மாட்டானே! எல்லாம் அவனாகிவிட்டால்
அங்கு புலம்பல், அதாவது சலனம் (அசைவு) எப்படி வரும்?

கேள்வி:— நாங்கள் சொல்வது உண்மைதான்! இந்த சலனம் வரக்
கூடாதுதான். ஆனால் நேர்ந்து விடுகிறதே! ஆமாம் ஆமாம்
இது மனதின் கூத்துதான்!

பதில்:— இந்த மனம் எப்படி வந்தது? அவனும் நீயும் ஒன்றாக இருக்கும்
போது இடையில் இந்த மனம் எப்படி வரக்கூடும்?

கேள்வி:— ஆமாம் உண்மை தானப்பா! அவனும் யானும் ஒன்றாக
இருந்தாலும் அங்கு சலனமான கேள்வியைக் கேட்ட அந்த
மூன்றாம் நபரே அந்த மனம்.

பதில்:— நீயும் அவனும் ஒன்றாக ஐக்கியமாக இருக்கும் போது அந்த
மூன்றாம் நபர் தேவையில்லையல்லவா? அவன் உங்கள்
இருவருக்கும் சரியான அசைவைக் கொடுத்துக் கொண்டு
தானே இருப்பான்?

கேள்வி:— ஆமாம் உண்மைதான்! அவனை என்ன செய்யலாம்?

பதில்:— மனமாகிய அவனை நீ ஒன்றும் செய்ய முடியாது. அவன் உங்கள்
இருவரின் அம்சமான (இறைவனின்) நிழல். உன் அம்சமான
அவன் சும்மா சுகமாக இருக்கிறான் (இங்கு மனசாட்சியை
குறிப்பிடுகிறோம்) நீயும் அவனும் இருவரும். நீயும் அவனைப் போல்
சும்மா சுகமாக இருக்கலாமே!

உ



கேள்வி:— இப்போது நானோ யானும் இறைவனும் ஒன்றாலும் இந்த மனமாகிய நிழலின் சேஷ்டை எம்மிடம்தானே இருக்கிறது. அதனை யாம் என்ன செய்ய வேண்டும்.

பதில்:— குழந்தாய்! நீ அதனை ஒன்றும் செய்யவும் வேண்டாம் ஒன்றும் செய்யவும் முடியாது. "நீயாகிய அவனில்; அவனாகிய உன்னில்"! முழுமையாக சரண்புகுவாயாக!

கேள்வி:— புரிய வில்லையே சற்று புரியும்படியாக சொல்லுங்களேன்?

பதில்:— (சிரித்துக் கொண்டே) குழந்தாய் முன்பு சொன்ன அதே பாதைதான். இறைவா! சரியோ? தப்போ? தவறோ? குற்றமோ? குறைகளோ? இந்த வினைக் கூடு அடுத்துள்ள ஓர் வினைக் கூட்டுடன் எண்ணம் சொல் செயல் இம்மூன்றுடன் நடத்தும் வினைபரிமாற்றம் எம்முடைய **"மனதின் தோஷமாக"** இருந்தாலும் **"இயக்கம்"** உம்முடையதுதானே? உன்னில் இருந்து விளையாட்டாக (வினையாக) பிரிந்த யாம் **"வினையாலும்"; "மனதாலும்"** பட்ட தொல்லைகள் போதும் ஐயனே! கருணைக் கடலே! கிருபா சமுத்திரமே! ஆனந்த வாரிதியே! உம்மில் இருந்து "உப்புப் பதுமையாக" வெளியே வந்து உன்னைப் பிரிந்து அஹங்காரத்தாலும், அபிமானத்தாலும் **"அகங்காரத்தாலும்"** பட்ட தொல்லைகள் போதும் எம்மை உன்மயமாக்கிடுவாய் என கரைந்து, கசிந்து கதறி, பதறி, உருகி கரைவதல்லாது வேறு கதி இல்லையென உன்னை முடித்துக் கொள்வாயாக!

கேள்வி:— ஹே பிரபோ! எம்முடைய **"வினையோ?"** உம்முடைய **"விதியோ?"** இடையில் வந்த **"மனமோ?"** இதை ஏற்று நடத்திய **"சக்தியோ?"** ஏதும் அறியோம் ஐயனே! உம்மை யல்லால் வேறு **"வழி"**யும் இல்லை; எமக்கு வேறு **"கதியும்"** இல்லையென தம்மை முடித்துக் கொண்டான்!



உ

கேள்வி:— அப்பா! ஒழுக்கம் என்றால் என்ன?

பதில்:— குழந்தாய்! ஒழுக்கம் இருவகைப்படும்.

கேள்வி:— இருவகை ஒழுக்கமா? அதை சிறிது விளக்கலாமா?

பதில்:— ஓகோ! விளக்கலாமே! அவை கருவி ஒழுக்கம் என்றும், கரண ஒழுக்கம் என்றும் இரு நிலைகளில் சொல்வர் நம் முன்னோர்!

கேள்வி:— கருவி, கரணம் என்றால் அவை எதைக் குறிக்கும்?

பதில்:— குழந்தாய்! கருவி என்பது ஞானேந்திரியம் ஐந்து என்றும், கர்மேந்திரியம் ஐந்து என்றும் சொல்லப்படும். கரணம் என்பது மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் என நான்காகும்.

கேள்வி:— ஞானேந்திரியம், கர்மேந்திரியம் இவைகளின் விளக்கம் என்ன? இவைகளின் செயல்பாடு என்ன?

பதில்:— ஞானேந்திரியம் இவைகள் மெய், வாய், செவி, மூக்கு, கண் என ஐந்தாகும். இவற்றின் தொழில் முறையே தொடுதல், ருசித்தல், கேட்டல், நுகர்தல், காண்டல் என ஐந்தாகும். கர்மேந்திரியம் இவைகள் கால்கள், கைகள், மல ஜலத்துவாரம் இரண்டு, வாக்கு அதாவது பேசுதல் என ஐந்தாகும். இங்கு நம் வாய்க்கு இரண்டு தொழில் இருப்பதால் ஞானேந்திரியத்திற்கு ருசித்தலும், கர்மேந்திரியத்திற்கு வாக்கும் கொடுக்கப்படுகிறது.

கேள்வி:— ஏன் அப்பா? இவைகள் அனைத்தும் சரீர உறுப்புகள் தானே ஏன் இவைகளை இரண்டாகப் பிரிக்க வேண்டும்? அதற்கு ஏதேனும் காரணம் உண்டா?

பதில்:— ஆமாம் குழந்தாய், உண்டு. ஞானேந்திரியம் ஐந்தும் நம் "**மனம்**" வெளியே செல்லும் பாதைகளாகும். கர்மேந்திரியம் ஐந்தும் இந்த மனமானது வெளியே சென்று விஷயாதிகளை (கர்மாக்களை) தேடி அவைகளை இந்த கர்மேந்திரியங்களின் வழியாக செய்விக்கிறது.

கேள்வி:— அந்த மனமானது வெளியே செல்லும் பாதைகளாகவும் அக்கர்மாக்களை செய்யும் கருவியாகவும் இருநிலைகளில் சொன்னீர்கள். அவைகளை சற்று விளக்கத்துடன் தந்தால் நல்லது?



உ

பதில்:— நல்லது குழந்தாய்! இவற்றின் விளக்கங்களை கேட்டறிந்தால் நாம் எப்படி நடக்க வேண்டுமென்பதை தெளிவாக அறியலாம். அதன்படி நடந்து ஒழுக்கம் கடைப்பிடித்து சாதனை செய்யவும் முடியும். இனி கவனமாக கேட்பாயாக.

## "ஞானேந்திரியம்" 5.

**"மெய்":**— இது பொதுவாக உடல் என்று சொல்லப்படும். இந்த உடல் அநித்தியமே. இவ்வுடல் பொய்யே. ஆனாலும் இதை மெய் என்று (உண்மை என்று) சொல்லக் காரணம், இவ்வுடலை வைத்துத் தான் உள்ளே இருக்கும் மெய்யான இறைவனை உணர முடிகிறது. இது சாதனைக்கு ஏற்ற ஓர் கருவியாக இருப்பதால் இது மெய்யே!

ஆனால்?

இந்த உடல் பொய்யே. காரணம் இதற்கு தொடுதல் என்றும், அதாவது ஸ்பரிசம் என்றும், ஓர் தர்மா இருப்பதால், அந்த ஸ்பரிசத்தினாலே ஸ்பரிச உணர்ச்சியினாலேயே [illegible] இது அழிகிறது. அதாவது ஸ்பரிச [illegible] பக்ஷி போல, ஓர் ஜீவன் கெடுவதும் மயங்கி அழியும் இந்த ஸ்பரிசத்தினால் தான். இந்த ஸ்பரிசத்தை **"குறியால்"** தொடுவது (புணர்ச்சி) எனப்படுவதால், இதில் சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

**"வாய்":**— இது சுவைப்பதாகும். அதாவது ருசிப்பதாகும். இங்கு ருசி ஆகிய சுவையில் மயங்கி விட்டால், உணவே நம் **"மனமாக"** குணதோஷங்களில் சிக்கிறதுவாகும். இயங்குவதால் இதில் சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பசிக்கும் மட்டும் உணவு அருந்த வேண்டுமேயன்றி ருசிக்கு உணவு ஏற்றல் கூடாது. அப்படி பசிக்கு உணவு ஏற்றாலும், "எக்காலமும் இரண்டு மூன்று கவளம் உணவு குறைத்தே எடுக்க வேண்டும்." இதனால் மனம் அமைதியும் சாந்தியும் பெறும்.

**"செவி":**— இது சப்தார்த்தங்களையும், பிறர் வார்த்தைகளையும் கேட்பதாகும். கேட்பதில் மனம் விகாரம் (தோஷம்) அடைந்து விவகாரத்தை (பிரச்சனைகளை) பெருக்குவதாகும். கேட்கும் சப்தார்த்தங்களை இறை "உணர்வோடு கூடி" அர்த்தங்களை (அதன் பொருள்களை) மனதைத் துன்பப்படுத்தாத நிலையில் உயர்த்திப் பார்க்கலாம். அது சகித்துக் கொள்ள முடியவில்லையானால் எதிர் வார்த்தைகள் பேசாமல் விட்டுக் கொடுத்து விலகிக் கொள்ளலாம். "காதால் கேட்பது பொய் தீர விசாரித்து அறிவதே மெய்".



உ

"மூக்கு":— இது அந்தளவு பிரமாதமான காரியம் இல்லைதான். ஓர் சாதகன் "நறுமணம்" "துர்வாஸனை" ஆகிய இவ்விரண்டையும் சமமாக ஏற்கப்பழகிக் கொள்ள வேண்டும். இதில் "தோஷமான, பேதமான, குற்ற உணர்வான, விருப்பு வெறுப்பான, எண்ண விருத்திகள் உண்டாகும். ஆகவே நுகர்வதில் சர்வ ஜாக்ரதையாக இருக்கவேண்டும்.

"கண்":— இந்த கண்கள் இரண்டும் வெகு வெகு ஆபத்தானவை. சிலநிகழ்ச்சிகளையும், சிலகாட்சிகளையும் நாம் காணும் போது நம் பேதமையான மனதை வைத்து "நம்மை ஏறிவிக்கும்; நம் வினைக்கும்" தக்கபடி தான் அக்காட்சியைக் காணமுடியும். எதிராளியின் மனமும், விளையும், நாம் உணரமாட்டோம். அதனால் பெரிய தவறு நடந்து விடுகிறது. இங்கு இறை உணர்வோடு "பொறுமையும்" "இது இறைவன் அவரவர் வினையை வைத்து நடத்தும் ஓர் பொம்மலாட்டம்" என அமைதி காத்து விசாரித்தால் அங்கு எந்த தோஷமும் தோன்றாது. அங்கு ஆனந்தமும் அமைதியும் பெற முடியும். ஆகவே காண்கின்ற காட்சிகள் அனைத்தும் பொய்யே அதை தீர விசாரித்து அறிவதே மெய். இவை ஐந்தும் ஞானேந்திரியமாகும். இனி!

## "கர்மேந்திரியம்" 5.

குழந்தைகளே! "ஞானேந்திரியம் ஐந்தும் வினைகளை பெருக்கும்!" "கர்மேந்திரியம் ஐந்தும் வினைகளை முடிக்கும்"! என சொல்லலாம். ஞானேந்திரியம் ஐந்தும் இந்த மனதின் "கற்பனையின்" சொரூபம். காரணம் இந்த ஐந்தின் வழியாக இம் மனம் வெளி இடங்களில் "நாமரூபங்களைக்" கண்டும், கேட்டும், நுகர்ந்தும், சுவைத்தும், ஸ்பரிசித்தும் "குணதோஷ" சொரூபமான கர்மங்களை (புண்ணிய பாபங்களை) பெருக்கிக்கொள்கிறது. ஆனால் கர்மேந்திரியங்களோ, "தம்க்கு விதிக்கப்பட்ட கர்மாக்களை மட்டுமே செய்யும்" இவை விதிக்கப்பட்ட கர்மாக்களை மட்டும் செய்வதால் கர்மேந்திரியம் என பெயர் கொடுக்கப்பட்டது. ஆனால் ஞானேந்திரியங்களை மட்டும்



உ

ஞான

"அடக்கி நம் வசப்படுத்தி ஆத்மசாதனை
செய்வதன் மூலம் இவைகளுக்கு ஞானேந்திரியம்
என பெயர் கொடுக்கப்பட்டது. ஆனால் கர்மேந்
திரியத்திலும் அவசியம் கட்டுப்பாடு வேண்டும்
தான். "கர்மேந்திரியம் சொன்னால் கேட்டுக்
கொள்ளும்". ஆனால் ஞானேந்திரியம் என்ன
தான் அறிவுரை சொன்னாலும் "விஷய வாஸனையின் பழக்க
தோஷத்தால்" அவை மீண்டும் மீண்டும் **"குற்ற"** உணர்
வோடு இருந்து கொண்டு கர்மாவைப் பெருக்கும். ஆகவே ஞானேந்
திரியங்களில் **"அதிக கவனம்" தேவை!**

இனி கர்மேந்திரியங்களை கவனிப்போம்.
**"கைகள், கால்கள்"**: — இவ்விரண்டும் **"இரண்டு"** ஆகும்.
கைகள் இரண்டும் "நம் பிராப்தத்தின்படி" (நாம் ஏற்று வந்த வினையின்படி)
"கொடுத்தும், வாங்கியும்" நம் கர்மாவை ஒழுங்காக செய்கின்றன!
அதைப் போலவே கால்கள் இரண்டும் "நம் பிராப்தத்தின்படி" (நாமேற்று
வந்த வினையின்படி) எங்கு சென்று எதை கொடுக்க வேண்டுமோ, எங்கு
சென்று எதை வாங்க வேண்டுமோ, "அங்கங்கு சென்றும், வந்தும்" நம்
கர்மாவை ஒழுங்காகச் செய்கின்றன.

ஆனால்?

"மனவசப்பட்ட நாம்" அவை அனைத்தும் நம் வினையின்படி நம்
இறைவன் ஒழுங்காக நடத்துகிறான் என உணராமல், "நான், என்னால்,
என்னுடையது" என்ற அஹங்கார அபிமானத்தால், முடியும் கர்மாவை
முடியாமல் **"நம் எண்ணத்தால்"** புண்ணிய பாவவினைகளை
பெருக்கிக் கொண்டு பிறவிப்பிணியை தேடிக் கொள்கிறோம். மேலே
கூறிய "அஹங்காரம், அபிமானம் ஒழிந்தால்" அவசியம் பிறவி
இல்லை. இதை கவனிக்கவும்!
"அவனுடைய (இறைவனுடைய) பொருளையும், அவன் இயக்கத்தையும்,
நான், என்னால், என்னுடையது என ஏற்றுக் கொண்டால் இது
இறைவன் குற்றமா? நம் குற்றம் தானே? ஆகவே அனைவரும் கைகள்
கால்கள் இயங்குவதில் அதிக கவனமாக இருங்கள். இப்படி
நீங்கள் இயங்கக் காரணம் நடப்பதிலும், கொடுக்கல், வாங்கல் செய்வதிலும்
ஓர் மயக்கமான "இன்பத்தையும்", அவைகளை விட்டுவிட்டால் ஓர் துன்பத்
தையும் **"மறு"** மயக்கமாக அனுபவிக்கிறீர்கள். ஆகவே அவைகளை குறைந்து
குறைத்து, குறைத்து, குறைத்து நிறுத்தி விடவும்.



உ

# "மல, ஜலத்துவாரம்:—"

"இவைகளும் இரண்டு அங்கங்களாகும்"! இவ்விரண்டுமே "நம் சரீரத்தின்படி" அதனதன் கர்மாவை (உணவின் கழிவுப் பொருள்களை வெளியேற்றும் நிலையை) ஒழுங்காகச் செய்கின்றது.

"ஆனால்"?

"மலத்துவாரம் பிரச்சனை இல்லைதான்"! ஜலத்துவாரம் ஆணுக்கும், பெண்ணுக்கும், "இருவரையாக" இருப்பதால், புத்திர சந்தானம் விதிப்படி தான் நடைபெறுகிறது. ஆனாலும்? அந்த சேர்க்கையில் ஓர் மோஹம் / ஓர் வேகம் / ஓர் காமம் / "விலக்க" முடியாத, "விளக்க" முடியாத, ஓர் "வெறி"யின் "துடிப்பு" இருப்பதால், அனைத்து மனித இனங்களும், அறிவே அழிந்து போகின்றன! அந்த ஒன்றில் "அதிக கவனம்" எல்லோர்க்கும் தேவை.

குறிப்பாக:— நிலை கண்டு, இடம் கண்டு, பொருள் கொண்டு, இயங்கும் (புணர்ச்சி வேண்டும்) ஆனால் காம விகார எண்ணமான "வெறி" வேண்டாம்!

"நாக்கு":— நம் வாய்க்கு இரண்டு தொழில் இருக்கிறது. அங்கு நம் நாக்கு ருசிப்பதில் ஞானேந்திரியமும் ஆகிறது; பேசுவதில் கர்மேந்திரியமும் ஆகிறது. நம் நாக்கில் வரும் வாக்கே அமிர்தமாகவும், அக்னியாகவும் வடிவெடுக்கிறது. நம் வாக்கே அனைத்து கர்மாவுக்கும் காரணமாக இருக்கிறது. நம் வாக்கே பிறவியின் மூலகாரணமாக இருக்கிறது. இதைத்தான் [illegible] (குருடன்) கண்ணன் நம் ஸத்திய வாசகத்தில் சொன்னான்:— "கும், கும்கபடம்", வாக்கு உன் வாயில் வந்தால் நீயே "கலிபுருஷன்"! இறை சிந்தனையோடு கூடிய "இதம், மிதம்" வாக்கு உன் வாயில் வந்தால் எம் அம்சமாகிய "கல்கி" அவதாரம் நீயே என்றான். ஆகையால் நாவாகிய வாக்கில் அதிக கவனம் வேண்டும்.



உ

கடும் :- வஞ்சகம், பொறாமை வார்த்தை.
சுடும் :- கோபம், குரோதம், விரோதம் வார்த்தை.
தபடம் :- ஏளனம், பழியாபம், சந்தேகம், சூழ்ச்சி, வம்பு, குற்றம் குறை, ஆக இந்த ஆறு வார்த்தை.
இதம் :- பொறுமை, நிதானம், இறையுணர்வோடு இனிமை, ஆனந்தம் ஆக இந்த ஆறு வார்த்தை.
மிதம் :- குறைவான, ஆதரவான, இறை உணர்வோடு வரும் வாக்கு மிதமாகும். இனி!

# "கரண ஒழுக்கம்"!!!

கரணங்கள் என்பதை "அந்தக் கரணம்" என சொல்வதுண்டு. இவை "புறவுணர்ச்சிக்கு" எட்டாமல், "அக உணர்வோடு" கூடியதாகும். இவை "**மனம், புத்தி, சித்தம், அஹங்காரம்**," என நான்காகும். இந்த நான்கிற்கு நான்கு தேவ தெய்வங்களை குறிப்பிட்டுச் சொல்வார்கள். அவைகள்?

"மனதிற்கு சந்திரன் என்றும்;" "புத்திக்கு பிரம்மா என்றும்;" "சித்தத்திற்கு விஷ்ணு என்றும்;" "அஹங்காரத்திற்கு ருத்ரன் என்றும்;" நான்காக பிரித்துச் சொல்வார்கள்.

1. "**மனம்**" = சந்திரன் :- இதன் அம்சம் "குளிர்ச்சியான ஓர் எண்ணம்". சந்திரனைப்போல் குளிர்ச்சியாகவும், களங்கம், கலக்கம், கலகம், விகாரமற்ற "**சுத்தமான**" ஓர் நிலை!

2. "**புத்தி**" = பிரம்மா :- இதன் அம்சம் கோடானு கோடி நாம ரூபம். இது சிருஷ்டியின் அம்சம். இங்கு விகாரமான எண்ணமும், அதை சேர்ந்த விவகார (பிரச்சனை) பழக்க வழக்கங்களும் உண்டு. இதை "**பிரம்மன் சிருஷ்டி**" என்ற ஓர் களங்கம், கலக்கம், கலகம், விவகாரமான ஓர் நிலை! அதாவது மனநிலையில் "பழங்கள்" எனச் சொல்வதில், புத்திநிலையில் அப்பழரகங்களைப் பிரிப்பது. மனநிலையில் மரங்கள் எனச் சொல்வதில், புத்திநிலையில் அம்மர நாம ரூபங்களைப் பிரிப்பது எனலாம். ஒரு எண்ணத்தை பல எண்ணங்களாக்குவது **புத்தி** ஆகும்!



ஓம்

"சித்தம்" = விஷ்ணு:— இதை

இது தான் என பொய்மை உண்மையாக்கும் "விஷ்ணுமாயா" நிலையாகும்.

இதை "யோகமாயா என்றும், மகாமாயா என்றும், அலங்காரம், அழகு, வனப்பு, வசீகரம் ஆகியவைகளை சிறப்பாகச் செய்யும் என்றும் சொல்லலாம். ஆகவே இதை காக்கும் தெய்வம் எனச் சொல்வதுண்டு. இந்த காக்கும் நிலை எப்படி அமைகிறது என்றால்? இந்த ஜீவர்களை உலகவஸ்துக்களைக் காட்டி "மோஹிக்கச்" செய்து ஓர் போதை மயக்கத்தைக் கொடுத்து திரும்ப திரும்ப புசிக்கச் செய்வதில் இச்சித்தமாகிய விஷ்ணுமாயை அதிக உபகாரமாக இருக்கிறது.

4. "அஹங்காரம்" = ருத்ரன் என்ற சிவன்:— "சந்திரன்"

பொய்யாகிய ஓர் எண்ணத்தை மட்டும் உருவாக்கினான். அந்த பொய்மையை அநேக நாமரூபத்தைக் கொடுத்து விகாரப்படுத்தினான் "பிரம்மன்". பற்பல நாமரூபம் பெற்ற இச்ஜகசொரூபத்தை அலங்காரம், அருகவர்ச்சி(?), வசீகரம், என மோஹிக்கச் செய்தான் "விஷ்ணு". விஷ்ணுவால் அழகுபடுத்தப்பட்ட இச்ஜகசொரூபத்தை இந்த ருத்ரனாகிய சிவன் "நான்! என்னை! என்னுடையது!" என அஹங்கார அபிமானங்களால் புசிக்கிறான் சிவன்.

ஆகவே மேலே கூறிய நான்கும் "அந்தக்கரணங்களாகும்"! இவைகளில் சர்வ ஜாக்ரதையாக இருக்க வேண்டும். இவைகள் மறைமுகமாகவே இருந்து கொண்டு சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், ஆகியவைகளை செய்துவருகின்றன. இவைகளை ஓர் கட்டுக்குள் அடக்கி வைத்திருப்பதுவே "ஒழுக்கம் எனப்படும்"! அந்த கட்டு என்ற ஒழுக்கம் எப்படி இருக்க வேண்டுமெனில்?

1. உடல் உலக பொருள்களின் நாமரூபங்களை காணும் போது இவைகள் "கோடானுகோடி நாமரூபங்களை தோஷிக்காமல்(?) தோற்றினாலும் இவை "இறைவனுடையதே" என மதிப்பதும். இவை அனைத்தும் "மண்ணே" என்றும் நம் மயக்கத்தை நீக்க வேண்டும் இங்கு "மனம்" அமைதியாகும்.

உ



௨. இந்த ஜகமும் அதன் அனைத்து பொருள்களும் நம் மனதின் கற்பனையால் தான் "நாம, ரூப, குணங்கள்," கற்பனை செய்தோமே தவிர அவைகள் எங்களுக்கு இதை தாருங்கள் என கேட்கவில்லை. ஆகவே இந்த ஜகம் அனைத்தும் "மனதுக்கு" அன்னியமில்லை. மேலும் அனைத்தும் "இறைவனுடைய விளையாட்டே". நாம் ஆனந்த சொரூபமே என "புத்தியை" அமைதிப்படுத்தவும்.

௩. இந்த ஜகம் அனைத்தும் "மண்" மயமாக இருந்தாலும், அழகு, வனப்பு, வசீகரம், கவர்ச்சி, குரூரம், இனிமை என நம் சிந்திக்கப்பட்ட "சித்தத்தால்" (விஷ்ணுவால்) ஏற்றுக் கொள்ளப்படுகிறது என அறிவுபூர்வமாக உணர்ந்து, இவைகளை ஜன்ம ஜன்மாந்திரமாக அனுபவித்தது "போதும்" என "நிறைவு" செய்து கொண்டு "பூரண திருப்தியுடன்" சித்தத்தை அமைதிப்படுத்தவும். "சித்தம் சிவம் ஆனால்" அங்கு நாம ரூப குண விகாரம் வராத்தன்மையினால் விகாரம் (பிரச்சனை) அற்ற "சித்தம்" "சிவமாகும்".

௪. இந்த ஜகமும் பொருள்களும் அனைத்து ஜீவ கோடிகளும் நம்முடைய தந்தையாகிய இறைவனின் விளையாட்டே. நாம் இறைவனின் செல்வக் குழந்தை. நம்மை இங்கு "ஆனந்தமாக விளையாடவிட்டானே" தவிர பிடிப்புடன் "உரிமை" கொண்டாட விடவில்லை. இந்த ஆனந்தமான விளையாட்டு ஓர் கடமையான அவஸ்தையைக் கொடுத்த காரணம் நம் எண்ணத்தால் "நான், என்னால், என்னுடையது" என அஹங்கார அபிமானமாகிய நம் "ருத்ர குணத்தால்" ஏற்பட்ட வினையே என முழுமையாக அந்த அஹங்கார அபிமானங்களை நம் "எண்ணம் சொல் செயல்கள்" இந்த மூன்றிலிருந்தும் அகற்றி விட்டு அதற்கு மாறாக எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உன்னுடையதே! என மாற்றிப் பிடிக்கப் பழகிக் கொண்டால் ருத்ர (சிவன்) சொரூபமாகிய "அஹங்காரம்" அமைதி அடையும்.



உ

கேள்வி:— அப்பா! நாங்கள் கருணையினால்
கருவி, கரண ஒழுக்கங்களை நன்கு
விபரமாக தெரிந்து கொண்டோம்
அதை தீவிரமாக கடைப் பிடிக்க
தாங்கள் ஆசி அவசியம் வேண்டும்
தாங்கள் ஆசி இல்லையானால் எதுவும்
எமக்குக் கிட்டாது.

பதில்:— குழந்தாய்! ஆசியென்பது கொடுக்கும் வஸ்துவும் இல்லை. அது வாங்கும் வஸ்துவும் இல்லையே. பின் அதை யாம் எப்படி கொடுப்பது அதை நீ எவ்வாறு வாங்குவது?

கேள்வி:— உண்மைதான் அப்பா! ஆசியென்பது கொடுக்கவும் வாங்கவும் முடியாதுதான். ஆனால் தாங்கள் திருவாக்கால் நலம் பெறுவாய்! சுகம் பெறுவாய்! என ஆசியுரை கூறினால் போதும். "அதை யாம் பெற்றுக் கொண்டோம்" என பூரண நிறைவைப் பெற்றுவிடுவோம்.

பதில்:— நீ அதற்குத் தகுதி உள்ளவனாக உன்னை ஆக்கிக் கொண்டால் அவசியம் உனக்கு லக்ஷியமாகும்.

கேள்வி:— தகுதி, தகுதி அற்றது இவை அனைத்தும் தாங்கள் தரிசனத்திற்கு முன்புதான். என்று "தாங்கள் தரிசனமும்" "ஸ்பரிசனமும்" (தாங்கள் வாக்கு எங்களை ஆட்கொள்ளும் நியமும்) என்று ஏற்பட்டதோ "அந்த நொடியே!" "யாம் அதைப் பெற்றுக் கொண்டோம்"! இனி எமக்கு எந்த கலக்கமும் பயமும் இல்லவே இல்லை. "இந்த நொடியே" "யாம் உமக்குள் மயமாகிவிட்டோம்." என தன்னை முழுமையாக குடித்துக் கொண்டு அக்குழந்தை "தூங்கு"

பதில்:— யாம் மௌனம் ஆனோம். ஆனாலும் ஆட் கொண்டது போலும்?
என ஓர் ஒலி வந்து அதை

அனைத்தும் நலமே! அது சுகமே!
அது யாமே! அது நீயே!
இது லக்ஷியம்! லக்ஷியம்! ஸத்தியம்!

பாபா



# "பூரணத்வம்"

(ஸத்ய வாக்கு)

ஸத்யம் பேசு. தர்மம் செய்.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

"குருபூஜை ௐ மலரிதழ்"

ஸத்யம் பேசினால் தர்மம் நிலைபெறும்.

## 1. ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெயராம், ௐ

## ௨. அகம் பிரம்மம்; ஜகம் பிரம்மம்;
## அகமே எல்லாம்!
## ஜகம், பரம், ஜீவர்களும்;
## சிறிதும் இல்லை!!

ஓம் அன்புச் செல்வமே! **ஸத், ஸித், ஆனந்தா!**

மனை உறுதி பெறுவாய். அதனால் மனோநலம் பெறுவாய்! அதனால் ஆத்ம சுகம் பெறுவாய்! இவை இணைந்த தன்மையினால் பிரம்மானந்த நிலை பெறுவாய். அதனால் ஜீவன் முக்தனாகி பிறவா நிலை பெற்று, **பரிபூரணத்வம்** பெறுக எனக் கூறி வாழ்த்தி ஆசி கூறுகிறோம். "இதை கவனிப்பாயாக"!

முதலாவது மந்திரம் பக்தி நிலை, இரண்டாவது மந்திரம் ஞான நிலை! இதில் "ஞானம் இல்லாமல் பக்தி இல்லை! பக்தி இல்லாமல் ஞானம் உண்டு"! காரணம் ஞானம் அதிஷ்டானம், பக்தி ஆரோபம்! ஆனால் ஓர் ஜீவனுக்கு பக்தியில் அஞ்ஞானம் (அறியாமை) பஸ்பமாகி வினை (கர்மா) முடிந்தால்தான் ஞானம் பிரகாசிக்கும். ஆனால் ஞானத்தை எந்த கர்மாவாலும் அடைய முடியாது.

உ



கர்மா முடிவுறமல் ஞானம் சாத்தியமாகாது! ஓர் சாதகன் (நிஷ்காம்ய) கர்மா செய்தே ஆக வேண்டும். அந்த "கர்மா தானாகவே முதிர்ச்சியானால் தானே கர்மா நின்றுவிடும். அந்த சாதகனுக்கு "பிறவியின் கர்மா முற்றுப் பெற்று முடிந்துவிட்டால் **பரகர்மா**" தொடர்ந்து அவனை ஜீவன் முக்தனாக்கவும் செய்யலாம். பரோபகார நிமித்தமாக அவனை தொடர்ந்து அவனுக்கு "எந்த உபாதைகளும் இல்லாமல்" ஞானானுபவமாகி" பின் அவை (தாவனை) மறையலாம்! இது முந்தைய மூன்று யுகங்களிலும் உள்ள ஞானிகளின் அனுபவமாகும். இது,

"இந்த உதவாக்கரை வைத்தியத்தின் சுய அனுபவமுமாகும்"!

ஓர்முக்கிய அறிவிப்பு.

குற்றம் குறை இருந்தால் தான் உலகம். குற்றம் குறை பார்த்தால் தான் ஜீவன். குற்றம் குறைகளாக கற்பனை பண்ணினால் தான் மனம். குற்றம் குறைகளாக அனுபவித்தால் தான் வாழ்க்கை தோற்றம். குற்றம் குறைகளான வாழ்க்கை அமைந்தால் தான் புண்ணிய பாப கர்மா தொடரும். குற்றம் குறைகளான புண்ணிய பாபங்கள் நிறைந்தால் தான் பிறவி நோய் தொடரும்.

பிறவி நோய் தொடர்ந்தால் தான் சிருஷ்டி கர்த்தாவான பிரம்மனுக்கு வேலை. பிறப்பு பிறப்புக்கென்று இருஷ்டித்தால் தான் காக்கும் கர்த்தாவான விஷ்ணுவுக்கு வேலை. ஒருவன் காத்து ரக்ஷித்தால் தான் பழையன அழித்து புதியன ஆக்குவதற்காக இருக்கும் அழிக்கும் கர்த்தாவான சிவனுக்கு வேலை. இப்படி திரிகர்த்தாக்களுக்கும் சர்வ சதா வேலை கொடுப்பது "**குற்றம் குறைகளே**"

இந்த குற்றம் குறைகள் தோன்றுவது "**விருப்பும் வெறுப்பும்**" அதாவது ராகத்வேஷாதிகளாகும். ஆகும்

இதனால் என்ன உணர்கிறோம் என்றால், விருப்பும் வெறுப்பும் தோன்றினால் அவசியம் குற்றம் குறைகள் தோன்றத்தான் செய்யும். ஆகவே எதிலும் விருப்பும் வெறுப்பும் இல்லாமல், அனைத்தும் இறைவனுடைமையே என்றும் அனைத்தும் இறைவன் சொரூபமே என்றும், இதில் விருப்பதற்கோ வெறுப்பதற்கோ எந்த காரணகாரியம் இல்லை என்றும்.



உ

அனைத்து செயல்களும் அவரவர் புண்ணிய பாப வினைக்கேற்ப பாரபக்ஷதோஷம் இல்லாமல் விதிதாச் சாரப்படி நியதி வழுவாமல் நடைபெறுகிறது என்றும்; இவைகளில் ஐந்தினையும் (பார்ப்பது, கேட்பது, நுகர்வது, ருசிப்பது, தொடுவது) **சுகமாக, சும்மா** இருக்கப் பழகிக் கொண்டால்?

1. திரிகர்த்தாக்களுக்கும் வேலையில்லை. அதனால்?
2. புண்ணிய பாபங்களுக்கும் வேலையில்லை. அதனால்?
3. பிறப்பிறப்புகளுக்கும் வேலையில்லை. அதனால்?
4. ஜீவன் என்ற பெயரும் அங்கு வரத் தேவையில்லை. அதனால்?
5. வேறு ஆத்ம சாதனையும் இங்கு தேவையில்லை அங்கு?

## அதுவாகவே நீ இருப்பாய்!
## நீயாகவே அது இருக்கும்!!

ஆகவே? பேத உணர்வும் வேண்டாம்!
குற்றம் குறையும் வேண்டாம்! விருப்பும் வெறுப்பும் வேண்டாம்!!

எம் பரமாத்ம சொரூபனை குழந்தாய்! ஸத் ஸித் ஆனந்தா

குற்றம் குறைகள் பார்க்கவா காது என்றும். இராகத்துவேஷிகளாகிய விருப்பும் வெறுப்பும் கூடாதென்றும். எதிலும், எவ்விடத்தும், எக்காலத்தும், எந்நிலையிலும் **சமபார்வை**யும், "பேதமற்ற எண்ணமும், பேதமற்ற வாக்கும், பேதமற்ற செயலும்" இருக்க வேண்டுமென்பதே பரிமஹானந்தனின் அனுபவமாகும்.

ஆதலால்?

இங்கு கீழே கூறும் கதையில் பேதபார்வையும், குற்றம் குறை உணர்வுகளும், இவன் அல்லது இவள் இப்படியும் இருக்கலாமா? இப்படி நடக்கலாமா? வழிகாட்டிகளே இப்படி நடந்தால் இவர்கள் எவரைத் திருத்த முடியும்? என்ற பேதபார்வையும். அடுத்தவனையோ அடுத்தவரையோ சர்வ சதாவும் பார்த்துக் கொண்டு உள்ளத்தை பாழாக்கிக் கொண்டால்

உ



என்ன நிலை ஏற்படும் என்பது பற்றியும், அப்படி எண்ணங்கள் வந்தால் அடுத்து எப்படி பிறவிகள் அமையும் என்பது பற்றியும், அப்படி பிறவிகள் எடுத்து என்னென்ன அவஸ்தைகளை அனுபவிக்க வேண்டி வரும் என்பது பற்றியும், முடிவை எப்படி இறைவன் முடிக்கிறான் என்பது பற்றியும்,

"எம் திருட்டுக் கண்ணனும், கோள் சொல்லும் நாரதனும்,"
தங்களை வைத்தே "**நடித்துக்காட்டி**" இருக்கிறார்கள்
கதை உண்மையல்ல "ஓர் கற்பனைக் கதை" ஆனால்?
உங்கள் அனுபவத்திற்கு இது உண்மைக் கதைதான்!
கதைக்கு தலைப்பு கொடுக்க வேண்டுமே என்றதும், எம் கண்ணன் இந்த தலைப்பைக் கொடுத்தான். தலைப்பு வெகு அற்புதம்.

# "நாரதன் திருமணம்"!!

கருத்து!

"குற்றம் குறை கண்டாலும், பேதமாக பார்த்தாலும்"
"துவேஷமாக உணர்ந்தாலும், ஆசைகொண்டு நோக்கினாலும்"
"முதலில் உன் மனம் கெட்டு அழிகிறது"!
"இரண்டாவது ஆத்மாவை ஜீவகளை மூடுகிறது"!
"மூன்றாவதாக புண்ணிய பாப வினைகள் கூடுகிறது"!
"நான்காவதாக குரு தெய்வ ஸ்மரணை கெடுகிறது"!
"ஐந்தாவதாக பிறப்பிறப்பை நீயே தேடிக் கொள்கிறாய்"!
ஆதலால் "**நீ கெடுகிறாய்**"! "**பிறரை கெடுக்கவில்லை**"!!

கலியுக தோஷத்தின் முக்கிய அம்சமே இதுதான். இது இல்லையாயின் கலிதோஷம் உன்னைப்பற்றாது. ஆதலால் எப்போதும் ஜீவன் முக்தனாகவே இருப்பாய். இங்கு நீயே "**கல்கி**" அவதாரம்.

உ



# "கதை"

காலம் :— துவாபரயுகம்.

இடம் :— துவாரகை.

பாத்திரம் :— கண்ணன்! நாரதர்!!

திரேதாயுகத்தில், "ஸ்ரீராம" அவதாரகாலத்தில் மஹரிஷிகளும், தபஸ்விகளும், முனிவர்களும் ஸ்ரீராமபிரானை நமஸ்காரம் செய்ய போகும் போது, ஸ்ரீராகவன் அவர்களை தடுத்து, ஹே மஹான்களே! இந்த எம் அவதாரமானது "ஓர் அரசகுமாரனே"! யாம் ஓர் க்ஷத்ரியன். இங்கு உலகநெறிப்படி யாம் தான் உங்களை நமஸ்காரம் செய்ய வேண்டும். நீங்கள் அனைவரும் "மஹா தபஸ்விகள்" யாம் நமஸ்காரம் செய்ய, நீங்கள் ஆசி வழங்க தகுதி உடையவர்கள். ஆகவே எம்மை நமஸ்காரம் செய்ய வேண்டாம் என்றான் ஸ்ரீராமன்.

ஆனால்?

எம் அடுத்த அவதாரமான ஸ்ரீ கிருஷ்ணவதாரம், "பரிபூரண அம்ஸமாகும்", "ஸ்ரீ பரமாத்ம ஸ்வரூபமாகும்"! ஆகவே அந்த அவதாரத்தில் உங்கள் நமஸ்காரங்களை யெல்லாம் யாம் ஏற்று உங்களை ஆசீர்வாதம் செய்து "உங்கள் மனோபீஷ்டங்களை" பூர்த்தி செய்திடுவேன் என சொன்னான் எம் ராமன்.

மனோபீஷ்டம் :— ஜலக் கிரீடை, ராஜக் கிரீடை மூலமாக, ஜீவனை ஜீவகளைந்து "ஜீவாத்மா — பரமாத்மா ஐக்கிய சாதனை".

எம் ஸ்ரீராமன் வாக்குப்படி ஸ்ரீ கிருஷ்ணவதார காலத்தில் அந்த ஸ்ரீ மஹான்கள் அனைவரும் "கோபஸ் ஸ்திரீகளாக" தோன்றி எம் கண்ணனுக்கு முறையான எட்டு பட்டமகிஷிகள் போக மீதி 10000 (பத்தாயிரம்) பெண் வடிவத்தில் எம் கண்ணனை ஸ்ரீ பதியாக ஏற்று குடும்பம் என நடத்தி வந்ததாக "கதை" (உண்மையல்ல)

இந்த பொய்யான கதை எப்படி அமைந்திருக்கிறதென்றால்?



உ

எம் அரும் தவத்தில் உதித்த எம் தவக் குழந்தாய்! ஸத் ஸித் ஆனந்தா!

துவாரகையில் இருந்த பத்தாயிரம் (பொய்யான) மனைவிகளையும் தனித் தனி வீட்டில் தனிக் குடித்தனம் செய்வித்து, ஒவ்வொரு பெண்களிடமும் தனித் தனிக் கண்ணனாக இருந்து கொண்டு, ஒவ்வொரு மனைவியிடமும் தலா பத்துப் பத்து குழந்தைகள் பெற்றுக் கொண்டும்.

"ஒரு குடும்ப ரகஸ்யம் அடுத்த குடும்பத்திற்கு தெரியா வண்ணம்"

# "அதிரகஸ்யமாக"

"பாதுகாத்து வந்தாலும் எம் மாயவனாகிய திருட்டுக் கண்ணன்!"

"இது நமக்காகப் போட்ட வேஷம்".

எம் கண்மணியான மழலையே!

ஸத் ஸித் ஆனந்தா! திரிலோக சஞ்சாரியாகிய நாரதர், முனிசிரேஷ்டர்களையும், மற்றும் மஹரிஷீஸ்வரர்களையும் கண்டு பேசி அவரவர் க்ஷேமலாபங்களைக் கேட்டுக் கொண்டே வந்தவர். இப்படி சிந்திக்கிறார்!

1. நாம் ஒருவன் தான் உண்மையான பக்தனாக இருக்கிறோம்.
2. இறை நாமத்தைத் தவிர வேறு எதையும் சிந்திப்பதில்லை.
3. எல்லோரும் நம்மையே வணங்குகிறார்கள். நாம் வணங்க தேவை இல்லை.
4. "நாம் ஒருவனே நைஷ்டிக பிரம்மச்சாரி".
5. மற்றும் எந்த சாதகரோ, பக்தரோ, ஞானிகளோ, கணவன், மனைவி குழந்தை உறவு என "சம்சார சாக்கடையில்" விழுந்து தவிக்கிறார்கள்.
6. குடும்பம் என்ற சம்சாரம் "ஓர் நரகக்குழி" என எவனும் உணர்வதில்லை.
7. மனைவி என்பது "ஆறாத ரணம்". அதில் குழந்தைகள் என்பது அதில் "நெளியும் புழுக்கள்" இந்த மெய்யுணர்வு எவனுக்கும் வருவதில்லையே!
8. மஹா விஷ்ணுவின் அம்சமான கண்ணனும் 8 பட்டமஹிஷியாம், 10000 மனைவிகளாம், ஏகப்பட்ட குழந்தைகளாம், தனித் தனிக் குடித்தனமாம், "கண்ணன் ஏன் எப்படி இந்த நரகக் குழியில் விழுந்தான்?"



உ

ஓர் அவதார சொரூபியே இப்படி விழுந்து தவிக்கிறான் என்றால், சாதாரண மானிடர்களை சொல்லவா வேண்டும்? பதினாயிரம் பெண்களிடமும் எப்படி தனித் தனியாக குடும்பம் நடத்த முடியும்? "கீதா உபதேசம்" பண்ணிய கண்ணனா இப்படி சாக்கடையில் விழுந்து விட்டான்? என்றும், பின் வந்த அபூர்வமான சிந்தனை யாதெனில்,

நாம் ஓர் நைஷ்டிக பிரம்மச்சாரி! நாம் ஓர் தேவரிஷி! நாம் ஓர் பாகவதோத்தமன்! நாம் ஓர் உத்தம பக்தன்! நாம் ஓர் பிரம்மரிஷி! நாம் ஞானத்திற்கே அதிகாரி! (ஸத்குரு)

முதலில் அனைத்து வீடுகளிலும் சென்று ஆங்காங்கு நம் கண்ணனின் நிலையை சரிபார்த்துவிட்டு, பின் கண்ணனை தனியே சந்தித்து "ஹிதோபதேசம்" செய்து கண்ணனை "பந்தத்திலிருந்து" விடுதலை செய்வோம் என எண்ணிக் கொண்டு கண்ணனின் ஒவ்வொரு வீடாகச் சென்று சரிபார்க்கிறார் நம் நாரதர்!

இதில் ஓர் உண்மையை உணர வேண்டும்!

"**எண்ணமே வாழ்க்கை**" என்றும் "**பயமே பலிதமென்றும்**" உணர வேண்டும்.

இப்போது திரிலோக சஞ்சாரியாயும் ஓர் ஒப்பற்ற பாகவதோத்தமனும், திடமான ஓர் விவேகியும், ஓர் ஞானியும், ஓர் குருவுமான நம் ஸ்ரீ நாரதனுக்கே இப்படி "ஓர் அறிவில் குழப்பம் என்றால்" சாமானியரை சொல்லவா வேண்டும்? எனவே நீங்கள் குழம்ப வேண்டாம். இது நாரதர் அறிவில் குழப்பம் இல்லை. எமதய்யனின் நாடகமும் இல்லை. "சாதகர்களாகிய உங்களுக்கு" ஓர் அனுபவ பாடம், என்பதை உணர்த்த அவர்கள் இப்படி வாழ்வதைப் போலும், பேதப்படுத்துவதைப் போலும், குற்றம் குறை காண்பதைப் போலும், அதனால் கஷ்ட நஷ்ட கவலை துக்கம் கொள்வதை போலும், உங்களுக்காக **வாழ்க்கையை நடித்து** காட்டுகிறார்கள்.



உ

நீங்கள் சாதனைதான் செய்ய வந்தீர்களே தவிர

**வாழ வரவில்லை!!**

என்பதை முழுமையான உறுதியோடு இருந்துகொண்டு குற்றம் குறை காணாமலும், பேத உணர்வு தோற்றாமலும், விருப்பு வெறுப்பு இல்லாமலும், அன்பும், பணிவும், கனிவும் கருணையும், பொறுமையும் கொண்டு, சாதனை செய்து மோட்சத்வம் பெறுவீர்களாக!

இனி கதைக்கு வருவோம்.

பிறர் சாதனையில் கவனம் வேண்டாம்! உன் சாதனையில் கவனம் வேண்டும்!

ஓ எம் அற்புதமான செல்வக் குழந்தாய்!

ஸத்ஸித் ஆனந்தா!

துவாரகையில் கண்ணன் குடித்தனம் செய்யும் அத்தனை வீடுகளிலும் எம் நாரதர் புகுந்து "கண்ணனை சரிபார்க்கிறார்."

ஓர் வீட்டில் கண்ணன் தம் குழந்தைகளை குளிக்க செய்து துணிமணி மாற்றிக் கொண்டிருந்தான்.

ஓர் வீட்டில் கண்ணன் தம் குழந்தைகளை அணிகலன்களை பூட்டி அழகு பார்த்துக் கொண்டிருந்தான்.

ஓர் வீட்டில் கண்ணன் தம் குழந்தைகளுக்கு ஆகாராதிகள் கொடுத்து மகிழ்ந்து கொண்டிருந்தான்.

ஓர் வீட்டில் கண்ணன் தம் குழந்தைகளுடன் பொருள்களை கொடுத்து விளையாடிக் கொண்டிருந்தான்.

ஓர் வீட்டில் கண்ணன் தம் மனைவியை குளிப்பாட்டி அவளுக்கு ஆடை அணிகளை சரி செய்து கொண்டிருந்தான்.

ஓர் வீட்டில் கண்ணன் தன் மனைவி குழந்தைகளின் துணிகளை சுத்தம் செய்து கொண்டிருந்தான்.

ஓர் வீட்டில் கண்ணன் தம் மனைவிக்கு தலைவாரி பொட்டு திலகம் சாத்தி அழகுபடுத்திக் கொண்டிருந்தான்.

ஓர் வீட்டில் கண்ணன் தம் குழந்தைகளுக்கு வேதபாடம் நடத்தி பாராயணம் செய்து கொண்டிருந்தான்.



உ

இந்தவிதமாக எம் "கண்ணன்" நாரதர் புகும் அனைத்து வீடுகளிலும் "**சேவை**" பற்பல செய்து எம் நாரதர் உள்ளத்தை ஓர் கலக்கு கலக்கி விட்டான் என்றே சொல்லலாம்.

நாரதர் திகைத்தார், மருண்டார், ஆச்சரியம் கொண்டார், அவர் மனம் பலமாக அசைந்தது"

## "பரமாத்மாவாகிய நம்" "கண்ணனுக்கா இந்த கதி"??? என எண்ணினார்

இதில் ஓர் விநோதம் என்னவென்றால்? எந்த வீடு சென்று கண்ணனை கண்டாலும் அங்குள்ள கண்ணன் சொல்லும் வாசகம் என்னவென்றால்? பிரம்மபுத்திரா! என்றே, பிரம்ம ரிஷியே! என்றே, ஓ மஹாத்மா! என்றே, ஆரம்பித்து,

"இங்குள்ள குடும்ப ரகஸ்யங்களை வேறு எங்கும் சொல்லி எம்மை கேவலப்படுத்தி விடாதீர். யாம் ஒருவன் இப்படி சம்சார சேற்றில் அமிழ்ந்து போனோம். எம்மை கரையேற்றுவார் யாருமில்லை. இது யாம் தேடிய கர்மா. இதை யாம் தான் அனுபவிக்க வேண்டும். இது "**ரகஸ்யமாகவே**" இருக்கவேண்டும். எம் மானத்தை நீர் தான் காப்பாற்ற வேண்டும்! என கெஞ்சிக் கெஞ்சியும், அவர் தாடையை பிடித்த கொஞ்சியும் அவர் பாதங்களை பற்றிய நிலையிலும் எம்பிரபு (கண்ணன்) கெஞ்சுகிறான்.

"எம் நாரதருக்கே நம் கண்ணனின் நிலை மிகவும் பரிதாபமாகப்பட்டது"!

ஓ உத்தமோத்தமா!

ஸத் சித் ஆனந்தா! நாரதர் பிறகு நேராக துவாரகை அரண்மனையில் சென்று துவாரகாதீசனை (சக்ரவர்த்தி கண்ணனை) கண்டார். இப்போது தான் "நாரதரின் அறிவில் பெரும் குழப்பம் ஏற்பட்டது."

**இந்த கண்ணன் யார்?** முன்பு கண்ட குடும்பிகளான **அந்த கண்ணன்கள் யார்??** என திகைத்தார் நம் நாரதர்.



உ

கண்ணன் :- பிரம்மரிஷி நாரதரே! வர வேண்டும் உம் வரவு நல்வரவாகுக!

நாரதர் :- நாரதர் தம் கண்களை கசக்கிவிட்டுக் கொண்டே கண்ணா! இங்கு நீயா? (நமக்கு முன்பாக அங்கு கண்ட கண்ணன் யார்?) என எண்ணுகிறார்.

கண்ணன் :- என்ன நாரதரே? ஒரே திக்பிரமை ஏன் இந்த நிலை? காணக்கூடாததை ஏதேனும் கண்டு விட்டீரா? அல்லது கேட்கத்தகாததை ஏதேனும் கேட்டு விட்டீரா? **மனப்பேய்** அறைந்தது போல் காணப்படுகிறீரே? என்ன விஷயம்? சற்று தெளிவாகத்தான் சொல்லுமே?

நாரதர் :- ஒன்றும் இல்லை கண்ணா! மனப்பேயாவது அது அறைவதாவது? அது ஒன்றும் இல்லை! சில காட்சிகள் மனதை குழப்புகிறது! சரி இன்று யாம் வந்த நேரம் சரி இல்லை அப்புறம் வருகிறேன்.

கண்ணன் :- (சிரித்துக் கொண்டே) ஏதோ குழப்பம் அடைந்தவர் போல் தெரிகிறது. சரி சரி. சற்று வெளியே சென்று வனசஞ்சாரம் செய்து விட்டு வந்தால், இயற்கையை கண்டு மனம் சற்று சாந்தி அடையும். என சொல்லிக் கொண்டே ஏ சாத்தகி! நம் தேரை சித்தப்படுத்து யாம் சற்று நாரதருடன் வெளியே போய் வர வேண்டும் என்றான் நம் கண்ணன். சாரதியாகிய சாத்தகியும் தேர் தயார் நிலையிலுள்ளது பிரபோ! என்றான். உடனே நாரதரின் கையைப் பற்றிய வண்ணம் தம் தேர் மீது நாரதருடன் ஆரோகணித்தான் கண்ணன்.

கருமையான ஓர் வனம் வந்ததும் உடனே நம் கண்ணன் தேரோட்டியாகிய சாத்தகியை தேரை நிறுத்த ஆணையிட்டான். பின் ஹே சாத்தகி! நீ இங்கேயே தேரிலேயே இரு. யானும் நாரதரும் சற்று காலார நடந்து விட்டு வருகிறோம் என்றான். அதன்படி சாத்தகி நின்று கொண்டான். நம் கண்ணனும் நம் நாரதரும் தேரை விட்டிறங்கி ஏதோ பேசிக்கொண்டே சற்று தூரம் சென்றார்கள்.



உ

நம் கண்ணனால் "நிர்ணயம் செய்த இடம்" வந்ததும்; நாரதரை நோக்கி எம் கண்ணன் சொல்லுவான்;

ஹே பிரம்ம புத்திர நாரதரே! ஏனோ எமக்கு இன்று தாக வேட்கை கடுமையாக இருக்கிறது. இங்கு சற்று தூரத்தில் குளம் ஒன்று இருப்பதாக தெரிகிறது. பறவை இனங்களின் சப்தம் கேட்கும் போது அப்படி தோன்றுகிறது. யாம் இந்த மரத்தடியில் அமர்ந்து கொள்கிறோம். நீர் சென்று ஓர் தாமரை இலையை தொன்னையாக்கி அதில் ஜலம் கொஞ்சம் கொண்டு வாரும். யாம் தாக சாந்தி செய்த பின்பு துவாரகை செல்வோம் என்றான் எம் மாதவன். சரி யெனச் சம்மதித்து நாரதர் சென்றார். கண்ணன் அவரை கை சைகையால் இடைமறித்து;

ஐயா நாரத பகவானே!

ஜலம் மொண்டு வரும் சமயம் இந்த வீணை தாங்களுக்குத் தடையாக இருக்கும். ஆகவே அவ் வீணையை இங்கே தந்து விட்டுச் செல்லுங்கள். வந்தவுடன் வாங்கிக் கொள்ளுங்கள் என்றான் எம் கபட நாடகன். நம் நாரதரும் வாஸ்தவம் ஜலம் மொண்டு வரும் போது வீணை தடைதானே என தானே ஜலம் மொண்டு வீணையை நம் கோபாலனிடம் கொடுத்து விட்டுச் சொல்லி விட்டு சென்று விட்டார் எம் அப்பாவியான நாரதர். தன் சிப்ளா கட்டையையும் சேர்ந்தே கொடுத்து விட்டார்.

(அச்சிப்ளாவில் ஒன்பது (நவமணி) சலங்கைகள் இருந்தன போலும்)

ஓ எம் ஐயனே! தயாபரனே! ஸத்ய சொரூபியான மழலையே! ஸத்ஸித் ஆனந்தா!

நாரதர் குளக்கரைக்கு வந்தார். வந்தவர் சுற்றும் முற்றும் பார்த்தார்; எந்த ஜீவனும் இல்லை. குளம் நிறைய ஜலம் இருந்தது. தாமரை, ஆம்பல், அல்லி முதலியவைகள் நிறைய இலைகளும், பூக்களுமாக நிறைந்திருந்தன. ஓர் தாமரை இலையை பறித்தார்; அதை தொன்னையாக்கினார்; அதில் ஜலம் மொண்டார். இவர் நின்றதோ தொடை அளவு ஜலம்; ஜலத்தை மொண்டு கரையை நோக்கி திரும்பினார். இரண்டு அடி தான் கரையை நோக்கி எடுத்து வைத்திருப்பார். கரை ஓர ஓர் மரத்தின் மறைவிலிருந்து ஓர் யௌவனமான தேவலோக மாதையும் மிஞ்சிய ஒயிலி



உ

ஓர் பெண் பாவை இடுப்பில் ஓர் குடத்துடன், ஜலம்
எடுக்க வந்தவள் போல் தோற்றிக் கொண்டு தன்
ஒய்யார நடை அழகுடன் வந்து கொண்டிருந்தாள்
எம் கமல நயனக் கண்ணன் அங்கிருந்த நிலையில்
"ஓர் பார்வையை" வீசுவான் போலும்?
(மன்மதன் தன் காமக் கணையை வீசுவான் போலும்)

நம் நாரதர் "தன்னை மறந்தார்!" "தன்னை இழந்தார்!!"

இதில் ஓர் உண்மை

ஸத்யத்தை மறந்தால் அஸத்யம் உடனே பற்றும்!
தர்மத்தை மறந்தால் அதர்மம் உடனே பற்றும்!
தெய்வத்தை மறந்தால் உலகம் உடனே பற்றும்!
ஸத்குருவை மறந்தால் குணதோஷங்கள் உடனே பற்றும்!

ஆனால்???

ஸத்யவாக்காக நாம் இருந்தால் அசத்யம் இல்லவே இல்லை!
தர்ம சொரூபமாக நாம் இருந்தால் அதர்மம் இல்லவே இல்லை!
சாட்சியாகிய தெய்வம் நாம் ஆனால் நாமரூப மயக்கம் இல்லவே இல்லை!
ஸ்ரீஸத்குருவின் வாக்கியமாக நாம் ஆனால் கோர குணதோஷம் இல்லவே இல்லை!

"நம் நாரதர் காமன் வலைப்பட்டார்.
நாரதர் "பெண்ணே" என்றார்!
அவள் "ஸ்வாமி" என்றாள்!

அவள் இவர் மேல் சாய்ந்து கொண்டாள்! இவர் அவளை தாங்கிக் கொண்டார்!
யாம் உன்னை மணம் பெண்ணாக ஏற்றுக் கொள்கிறேன் என்றார் நாரதர்.
யாம் உம்மையே மணாளனாக வரித்து விட்டேன் என்றாள் அம்மாது.
நாம் எங்கு போகலாம் என்றார் அவர்? அவள் கண்ணன் இருக்கும் திசையை
"சுட்டிக்காட்டி, ஸ்வாமி இந்த திசையில் செல்லலாம் என்றாள் அவள்.
"ஊஹும்! அங்கு ஓர் திருடன் உள்ளான் என்றார்
அவர். அப்படியானால் வேறு எங்கு போகலாம் என்றாள் அவள். அந்தப் பக்கம்
போகலாம் என எதிர் திசையை சுட்டிக் காட்டினார் எம் நாரதர். இதை
எம் கண்ணன் கண்டு சிரிக்கிறான்! நாரதர்
காட்டிய திசையில் ஓர் பழம் பெரும் கிராமத்தை உண்டு பண்ணி விட்டான் எம் மாயவன்



உ

ஸ்ரீமஹான் சமர்த்த ராமதாஸின் அம்சபூதரான பூஜ்யஸ்ரீ "பப்பா" ராம்தாஸ் அவர்களின் உத்தம ஸந்நிதியும், ஓர் உதவாக்கரை பைத்தியத்தின் அன்புக் குழந்தையாயும் அமைந்த எம் செல்வமே! "ஷுத்ஸித்ஆனந்தா"

இனி கதையை கவனமுடனும் கருத்துடனும் கேட்பாயாக!

அந்த கண்ணனால் நிர்மாணிக்கப்பட்ட அந்த பழம் பெரும் கிராமத்தில் "புதுத் தம்பதிகளாக" நாரதனும் அவர் மனைவியுமாக குடியேறினர். அவ்வூர் மக்கள் நாரதனையும் அவர் மனைவியையும் வரவேற்று "அவ்வூர் தவியாரி" என ஆக்கி வைத்தனர் போலும்?

இங்கு நாரதர் வாழ்க்கையில் பொன்னும் பொருளும் வாழ்வும் வளமும் குவிந்தன. (அவன் கருணையால்) அதைப் போலவே போக இன்பத்திலும் கரை கண்டு கொண்டிருந்தனர். (அவன் கருணையால்) குழந்தை செல்வங்களும் பெருகி ஒன்பதை எட்டி விட்டன போலும்? (அவன் கருணையால்) "அவன் திருவிளையாடலால்" அந்நாட்டில் "கடும் பஞ்சமும், கொள்ளை நோயும்" ஏற்பட்டன போலும்? நம் நாரதனின் குடும்பமும் அதிகமாய் பாதிப்படைந்தன. பொன் பொருள் போகம் எல்லாம் முடிந்தன. நாரதனின் குழந்தைகள் பட்டினியால் பெரும் அவதியுற்றனர். அப்பா பசிக்குது, அது வேணும், இது வேணும், என நாரதனை பிச்சுப் பிடுங்குகின்றனர்.

நாரதனால் வேறு தொழில் செய்யவும் இயலவில்லை! பல வழிகளை கையாண்டார். வியாபாரம் செய்து பார்த்தார். வண்டி இழுக்கும் கூலி வேலையும் செய்து பார்த்தார். முடிவில் பிச்சை (தர்மம்) எடுக்கவும் தலைப்பட்டார். அதுவும் அவரால் சமாளிக்க முடியவில்லை. சில கடைகளில் யாருக்கும் அறியாமல் களவும் செய்தார். பலன் அடி உதை திருடன் என்ற வசைமாறி. இருந்தாலும் "அவர் உள்ளத்தில் இந்த எண்ணம் மட்டும் மறையவில்லை! "நான்" பெற்ற பிள்ளைகள். "என்னால்" எப்படியும் காப்பாற்ற முடியும். "என்னுடைய" மனைவி அவள் எனக்கே சொந்தம். என் மனைவியையும் என் குழந்தைகளையும் காப்பாற்றியே தீருவேன்.

உ



"என்ற அஹங்கார அபிமானத்தால் பிணைக்கப்பட்டார்."
"இந்த அஹங்கார அபிமானத்தால் சோதனையும் வேதனையும் கடுமையானது. குழந்தைகள் நோயினால் பீடிக்கப்பட்டனர்.
ஏகப்பட்ட கடன் வாங்கி வியாதிக்கு வைத்தியம் பார்த்தார். "கடன் தொல்லை! வாழ்க்கை தொல்லை! மனைவி மக்கள் தொல்லை"! இவை அனைத்தும் சேர்ந்து

"**மனோபாரம்**" இதை நம் நாரதர் பொருட்படுத்தவில்லை அனைத்தையும்?

"**இன்பவேதனையாக**"

ஏற்றுக் கொண்டார். அந்த கஷ்ட நஷ்டங்களையும் சகித்துக் கொண்டு மனைவியையும் குழந்தைகளையும் எப்படியும் காப்பாற்றி விடலாம் என ஓர் நம்பாசையுடன் இருந்தார் நாரதர்.

நம் கண்ணன் சிரித்தான்!

காரணம்?

1. கண்ணனின் கூட் சமத்தால் நாரதரின் வீணையையே அவர் மனைவியாக ஆக்கி இருக்கிறான்.
2. கண்ணனின் கூட் சமத்தால் வீணாவிலுள்ள ஒன்பது மணிகளையும் நாரதரின் ஒன்பது குழந்தைகளாக ஆக்கி இருக்கிறான்.

நாரதரின் எண்ணம். ஒன்பது குழந்தைகளின் விபரம்?

1. கண்ணன் ஓர் கிருஹஸ்தன்! 2. கண்ணன் ஓர் காமுகன்! 3. கண்ணன் ஓர் பாமரன்! 4. கண்ணன் மாயையில் மாட்டிக்கொண்டான்! 5. யாம் தான் நைஷ்டிக ப்ரம்மச்சாரி! 6. யாம் ஓர் பாகவதோத்தமன்! 7. யாம் ஓர் ப்ரம்மரிஷி! 8. ஸ்ரீபகவன் நாமாவை இடைவிடாமல் தைலதாரை போல் ஸ்மரிப்பவன் யாம் தான்! 9. கண்ணனை இந்த சம்சார சாகரத்திலிருந்து கரையேற்றும் ஓர் ஸத்குருவும் யாம் தான்! என இப்படி ஒன்பது விதமாக "**அஹ எண்ணம்**" (அஹம்மதை) கொண்ட தன்மையினால் இந்த ஒன்பது எண்ணமும் ஒன்பது குழந்தைகளாயின.



உ

அந்த ஒன்பது எண்ணத்திரையும் "விளைந்த குழந்தைகள்" செங்குளவிகளாகி (கொட்டும் வண்டாகி) நாரதரை துன்புறுத்தின போலும்?

தேவகானம் இசைத்த வீணையானது, சம்சார சோக கானம் பாடும் மனைவியாகவும், காலைப்பற்றிய விலங்காகவும் ஆகி நாரதரை "சரீர இன்பத்தில் பிணைத்து" "மறை வேதனையை" உண்டு பண்ணி, கரை காணமுடியாத, **புதைச் "சேற்றில்"** அமிழ்த்துகிறார் போலும்?

(மறைய குற்றம் குறை உணர்வுகளும், பேதபார்வையும் செயலும், விருப்பு வெறுப்பான எண்ணங்களும், நாரதரை பாடாய் படுத்துகின்றன)

அன்புருவாயும், அறிவுருவாயும், சாந்தி சொரூபமாயும் அமைந்துள்ள தவசீலா!

சத்சித் ஆனந்தா! கண்ணனின் விளையாட்டுகளை காணமுடியாது! "அனைத்தும் எண்ண வடிவமே"! முடிவாக ஓர் கடினமான பரீட்சை வைக்கிறான் எம் இறைவன்.

அதாவது?

"நாரதரின் குழந்தைகள் அந்த கொடும் நோயால் அவதியுற்று ஒவ்வொன்றாக மரணம் அடைகின்றன"! நாரதரின் சோகத்தையும் அவர் துன்பத்தையும், அவர் வேதனையையும் இங்கு வரி வடிவில் எழுத முடியவில்லை. அதற்கு எம்மை மன்னிக்கவும்.

கடைசி பையன் வயது மூன்று இருக்கலாம். அவனைத் தவிர மற்ற எட்டு குழந்தைகளும் அவ்வியாதிக்கு பலியாயின. நாரதர் சிந்திக்கிறார். "இந்த ஒரு குழந்தையையும், அருமை மனைவியுமாவது **நான்** காப்பாற்றி விடுவேன்" என்ற ஓர் வலிய எண்ணம் கொண்டு, வீட்டையும் காலி செய்துவிட்டு, அந்த ஒரு பையனை தன் மனைவி ஒக்கலில் (இடுப்பில்) தூக்கிக்கொள்ள, தம்மிடம் மீதம் இருந்த சாமான்களை ஓர் மூட்டையாக கட்டிக்கொண்டு, அதை தம் தலையில் சுமந்த வண்ணம், தம் வலக்கரத்தால் தம் ஆசை அருமை மனைவியின் இடக்கரத்தை பற்றியிருக்கிறார். அவள் இடுப்பில் குழந்தை இருக்கிறது. இந்த நிலையில் நம் நாரதர் சோகம் தோன்றிய முகத்திலும் நாம் நம் மனைவியையும் நம் ஒரு குழந்தையையும் எப்படியாவது வெளியூர் சென்றாவது,



உ

"காப்பாற்றிவிடுவேன்" என்ற "தற்காப்பு" சக்தியுடன் (இது தற்கவன சக்தியில்லை) அவர் "வரும் வேகத்தை காண்கிறோம்"!!!

(பந்தபாச வலைப்பட்ட ஓர் ஜீவன் எப்படி நடந்து கொள்ளும் என்பதை இங்கு நிதர்சனமாக காண்கிறோம். ஆகவே பேறு சற்று எட்ட மறுக்கிறது! சற்று சிரமத்திற்கு ------------------------------ மன்னிக்கவும்.)

(இதுவும் எம் கண்ணன் கருணைதான்)

ஆனால் இதை அருள் கருணை என்று சொல்வதைவிட மறக்கருணை என்று தான் சொல்லவேண்டும்!!!

இனி கதையைக் கவனி எம் சீவ மகனே!
ஸத் சித் ஆனந்தா!

இறைவன் மறக் கருணையினால் ஓர் காட்டாறு கரை புரண்டு ஜலப் பிரவாகத்துடன் ஓடிக்கொண்டிருக்கிறது. அங்கு எம் இறைவன் தருந் நாட்கொள்ளும் நிமித்தம் ஓர் காட்சியை காட்டினான். எப்படி என்றால்? அங்கு ஓர் இடத்தில் "சற்று மேடான பகுதி! குண்டு குழி பாறைகள் இல்லாத பகுதி! சம வெளியான பகுதி! குறு மணல் பாங்கான பகுதி! ஓர் இடுப்பளவே ஜலம் பரவலாக ஓடும் பகுதி!

நம் நாரதர் துணிந்து விட்டார்!

அதாவது:- பின்னால் கொள்ளை நோய் துரத்தி வருகிறது!
முன்னால் ஆற்று வெள்ளம் தடுத்து நிறுத்துகிறது!

தன் மனைவியிடம் ஓர் வார்த்தை கேட்டார்:- பெண்ணே என்ன செய்யலாம் என்றார். அவள் சொன்னாள்:- எம் பிராண நாதா! "புலியூருக்குப் பயந்து எலியூருக்கு ஓடி வந்தோம். ஆனால் அந்த எலியூரும் புலியூராக மாறி விட்டது! **அங்கும் மரணம்!**

**இங்கும் மரணம்!!** கவலையை விடுங்கள். பயத்தை விடுங்கள். துக்கத்தை விடுங்கள்! துணிந்தவனுக்கு துக்கம் இல்லை! மறந்தவனுக்கு மரணம் இல்லை! சாகப் போகிறவனுக்கு சமுத்திரம் முழங்கால் அளவே! முழுக்க நனைந்த பின் முக்காடு எதற்கு ???

உ



# வாழ்வா? சாவா?

இரண்டில் ஒன்றை பார்த்து விடுவோம். தைரியமாக ஆற்றில் இறங்குங்கள்.

1 என் கையை நீங்கள் பற்றிக் கொள்ளுங்கள்!
2 உங்கள் கையை நான் பற்றிக் கொள்கிறேன்!
3. மூட்டையை நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள்!
4. குழந்தையை நான் வைத்துக் கொள்கிறேன்!

"உங்களுக்கு நான் துணை! எனக்கு தாங்கள் துணை!"
(இங்கு இறைவன் துணை இல்லையென்றாகி விட்டது)

# ஏ கெட்ட மனித பதரே!

"பந்தத்திலும், பாசத்திலும், போகத்திலும், மோஹத்திலும், காமத்திலும்,"
"சிக்கிக் கொண்டால் இதே கண்டா"
"நிகழ்ச்சி நாளை உங்களுக்கும்"???

நம் நாரதர் மூட்டையை தலையில் வைத்து இடக்கரத்தால் பற்றிக்கொண்டார். அந்தப் பெண் இடுப்பில் உள்ள குழந்தையை வலக்கரத்தால் பற்றிய வண்ணம் இடக்கரத்தால் நம் ஸ்ரீபதியின் வலக்கரத்தை இறுகப் பற்றிக் கொண்டாள்.
ஆற்றில் இறங்கி நடந்து வருகின்றனர்!

எம்மதுசூதனன் ஆகிய சூதறிந்த கள்வன் மறக்கருணையினால்" ஆற்று ஜலம் வர வர அதிகரித்தது. ஜலம் மேலே மேலே ஏறியதால் இருவரும் திகைத்தனர்.

"ஜலம் பிரவாகத்தில் நான்கு எண்ணங்களும் (பொருள்களும்) அதாவது கணவன் மனைவி, குழந்தை, மூட்டை ஆகிய நான்கும் "மீட்க வழி தேடின"!

நாரதர் (**கணவன்**) சொன்னார்: பெண்ணே ஜல வேகம் எம்மால் தாள முடியவில்லை, ஒரு பக்கம் நீயும் குழந்தையும், மறுபக்கம் ஓர் மூட்டை, இதில் ஏதாவது "ஒன்றை விட்டால் தான்" **நான்** கரையேற முடியும் என்றார். பெண் சொன்னாள்:- எம் பிராணபதே தலையிலுள்ள மூட்டையை ஜலத்தில் விட்டு விடுங்கள்.

# அதை நாம் தேடிக் கொள்ளலாம்!

என்றாள். நம் நாரதரும் அது உத்தமமே என எண்ணி தலையில் உள்ள மூட்டையை ஜலத்தில் விட்டார். நம் கங்கையும் அதை ஏற்றுக் கொண்டது.



௨

நம் நாரதர் (**கணவன்**) சொன்னார்:-
பெண்ணே! ஐவம்பிரவாக வேகம் மீண்டும் எம்மால் தாள முடியவில்லை. இப்போது குழந்தையும் நீயுமே எமக்குப் பாரமாக இருக்கிறீர்கள்" இதில் ஏதாவது ஒன்றை விட்டால்தான் "**நான்**" கரையேற முடியும் என்றார். அந்த பெண் அப்போது உடனே பதில் சொன்னவள் இப்போது சற்று ஆழ்ந்து சிந்தித்தாள். அவள் எண்ணம்:- குழந்தை போனாலும் பரவாயில்லை. வேறு குழந்தை பெற்றுக் கொள்ளலாம். ஆனால் நாம் போனால்? ------------------
அவரை யார் பார்ப்பது? அவள் குழந்தையை வலக்கரத்திலிருந்து அப்படியே நழுவவிட்டுவிட்டு தன் முகத்தை அறைந்து அறைந்து அழுதபடியே கணவன் கையை இறுகப் பற்றிக் கொண்டாள் அந்த பெண் பாவை. அக்குழந்தை ஐவம்பிரவாகத்தில் அம்மா, அம்மா, அம்மா, அப்பா, அப்பா, அப்பா! என அலறியவண்ணம் சென்று எம தயையன் கண்ணனின் திவ்ய சரணாலயத்தில் சென்று லயமானது.

முன்பு திவசத்தால் சென்ற எட்டு குழந்தைகளாகிய சலங்கை மணிகளுடன் இம்மணியையும் இணைத்து "**சிப்பாக் கட்டை**" அக்கிரதம் இடக்கரத்தில் தாங்கிக் கொண்டான் எம்பிரான்!

ஓம் சத்ய சொரூபமே!

சத் சித் ஆனந்தா! மூன்றாவது நிலையாக நாரதரும் அந்த பெண்ணுமாக (**கணவன், மனைவி**)யுமாக ஐவம்பிரவாகத்தில் தத்தளிக்கிறார்கள். இங்கு கணவன் (நாரதர்) சிந்திக்கிறார்:- (இப்போது தான் நாரதர் இறைவனை சிந்திக்கிறார்) இறைவா! ஹே பிரபோ! அழகான போகத்திற்குரியதான மனைவியை கொடுத்தாய்! அப்போகத்தினால் ஒன்பது மணியான குழந்தைகளை கொடுத்தாய்! இவர்கள் அனுபவிப்பதற்காக செல்வத்தையும் கொடுத்தாய். இப்போது எம் போறாத காலம். செல்வத்தைப் பறித்தாய். குழந்தைகளையும் ஒவ்வொன்றாக ஒன்பதையும் பறித்தாய். அத்துடன் நிறுத்தக் கூடாதா?



2

இப்போது மனைவியையும் பறிக்கப் பார்க்கிறாயே? இதுதான் தர்மமா? ஆனாலும் "யாம் எம் மனைவியை கைவிடோம்" என அவளையும் இழுத்துப் பிடித்தவண்ணம் நதிப்பிரவாகத்தை கடக்க முற்பட்டார், நம் நாரதர்!

**"அவரால் இயலவில்லை"!!**

இவரையும் சேர்த்து இழுத்தது கங்கையின் பிரவாகம்!

நாரதர்:- ஓ கற்புக்கரசியே! உத்தமோத்தமியே! பெண்பாவாய்! உன்னை எப்படி கரை சேர்ப்போம் என தெரியவில்லையே?

பெண்:- ஓ ஸ்வாமி! எம் பிராணநாதா! ஓ எம் தெய்வமே! ஸ்வாமி, ஸ்வாமி! எம்மைக் கைவிட்டுவிடாதீர்! உமக்கு கடைசிவரை சேவை செய்ய அடியாள் ஒருத்தி நான் இருக்கிறேன். என்னை எப்படியாவது கரை சேர்ப்பீராக!

நாரதர்:- பெண்ணே! இயற்கையின் சீற்றத்திலிருந்து மீள்வதாக இருந்தால் "விதி வலியதாக" இருக்கவேண்டும். இங்கு விதி வேறுவிதமாக வேலை செய்வதாக உணர்கிறேன். இன்று இங்கு வந்த விதி (நதி) நம்மைப் பிரிப்பதற்காகவே வந்ததென உணர்கிறேன். இனி "ஒருவரை ஒருவர் விட்டால் தான்" இருவரும் கரையேற முடியும். **"எம்மை மன்னித்துவிடுவாயாக"** என சொல்லிக்கொண்டே தம் வலக்கரத்தை ஓர் உதறு உதறினார். மனைவி ஜலப்பிரவாகத்தில் அடித்துச் செல்லப்பட்டாள். (இங்கு அவர் எண்ணம்)

"இந்த மனைவி போனால் வேறொருத்தியை மனைவியாக்க"லாம்.

ஆனால் **"நான் போனால்"???**

1. நான் போனால்:- சொந்த பந்த பாச உறவிலிருந்து விடுதலையாகி தெய்வ நிலை பெற்று, அத்தெய்வ கிருபையால் ஓர் ஸத்குருவை அடைந்து அவர் கிருபையால் ஜீவன் முக்தி அடையலாம்.

2. நான் போனால்:- உடல் உலக இன்பதுன்ப போகம் அனுபவிப்பது யார்? வேறொரு பெண்ணை அடைவது யார்? மேலும் பின்னர் பிறவிகள் பெற்று இன்பதுன்ப எல்லைக்கு போவது யார்? ஆகவே நான் வேண்டும்"

**"இவள் போனால் இன்னொருத்தி"**

என ஓர் தீர்க்கமான முடிவுடன், அவளை ஜலத்தில் விட்டுவிட்டு தான் மட்டும் கரை சேர்ந்தார் நாரதர்.

உ



அந்த ஜலப் பிரவாகத்தில் ஸ்வாமி! ஸ்வாமி!
ஸ்வாமி! வாமி! வாமி! வாமி! மீமீமீமீமீ என
ஓர் நீண்ட அலறலுடன் சப்தம் ஓய்ந்ததோ? அல்லது
நதியின் இரைச்சலினால் சப்தம் ஓய்ந்ததோ? அல்லது
நம் நாரதரின் எண்ணத்திலிருந்து சப்தம்
ஓய்ந்ததோ? யாம் அறியோம்!!!

"மனம் உடையவர்களுக்கு இக்காட்சி ஓர் "**கோர**" சம்பவமே!"

"மனம் தம் வசம் ஆனவர்களுக்கு, அதாவது மனம் மறைந்தான வர்களுக்கு அதாவது மனம் சாட்சி நிலை பெற்றவர்களுக்கு இக்காட்சி ஓர் படக்காட்சியே! சித்திரக்காட்சியே! பொம்மைக் காட்சியே! சாட்சிக்காட்சியே!" "**ஆனந்த**"

"நம் நாரதர் "**அக்கரை**" சேர்ந்தார்." சம்பவமே!

நம் நாரதர் கரையேறியவுடன், தம் மனைவியும் கரையேறிவிட்டாளா என கரையோரமாகவே "கால் ஓயும் வரை" ஓடினார், தேடினார், வாடினார்.
ஓ பெண்ணே! ஓ அம்மணி! ஓ பெண்ணே! ஓ அம்மணி! ஓ பெண்ணே!
ஓ அம்மணி என அலறியபடி, ஓர் ஓரமாக ஆற்றைப் பார்த்த வண்ணம், கைகளால் தம் தலையைப் பிடித்த வண்ணம், இவ்விதம் அலறி அழுதார்.

ஐயோ! பெண்ணே! எம்மை விட்டு சென்று விட்டாயே!
உன்னை விட்டு இனி யாம் எப்படி வாழப் போகிறோம்?
எம்மை இப்படி நிர்க்கதியாக விட்டுவிட்டு நீ மட்டும் போய்விட்டாயே?
உன்னை கொண்டு போன அந்த நதி எம்மையும் கொண்டு செல்லவாகாதா?
மணி மணியாய் ஒன்பது குழந்தைகளைப் பெற்றோமே!
ஒரு குழந்தையாவது எமக்கு ஈமக்கடன் செய்ய இல்லாமல் போய்விட்டதே
யாம் அப்படிப்பட்ட ஓர் பாவியா? யாம் ஏன் இன்னமும் இப்புவியில் உயிருடன் இருக்க வேண்டும்? எமக்கும் ஓர் மரணம் வரவில்லையே! யாம் எப்படி தனிமையில் இனி வாழப் போகிறோம்? என இன்னமும் பற்பல விதமாக அழுது புலம்பி! முடிவில்,
அந்த இறைவனுக்கும் கண் இல்லாமல் போய்விட்டதே!
அந்த இறைவனும் இரக்கம் இல்லாத கல்நெஞ்சனாக போய்விட்டானே!
ஏ இறைவா! எம்மையும் எடுத்துக் கொள். இனியும்



உ

யாம் உயிரோடு இருப்பதில் அர்த்தம் இல்லை. யாம் கூப்பிடும் குரல் உன் செவியில் ஏறவில்லையா? உன் செவியும் மந்தமாகிவிட்டதோ? யாம் இனியும் உயிரோடு இருக்கமாட்டோம். இனியும் இருக்கக் கூடாது! எனகுய்யோ! முறையோ! என அலறி அடித்துக்கொண்டு அழும் போது;

கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரும் எம் கண்ணன்! பார்க்கும் நிலையில் இருந்து பார்த்தால் தெரியும் பரமாத்மா!! கண்ணுக்குத் தெரியாத இருட்டகத்திலிருந்து உருவில் பெரிய யானைபரியந்தம் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் எம் "**சர்வாந்தர்யாமி**" யாகிய "கபடநாடக சூத்ரதாரி"

நாரதரின் பின்புறம் பிரத்யக்ஷமாய், நாரதரின் வீணையாகிய அப்பெண்ணை திரும்பவும் "**வீணை**" ஆக்கி, அவ்வீணையை, நாரதரின் தந்தாலி குழந்தைகளாகிய ஒன்பது சலங்வும், கைமணிகளையும் அந்த "**சிப்ளா**" ஆக்கி அவ்விரண்டையும் தம் இடக்கரத்தில் தாங்கிக்கொண்டு, தம் வலக்கரமாகிய "அபயகரத்தால்" தம் குழந்தையான நாரதரின் தோளைப் பற்றி சற்று இலேசாக அசைத்து. அந்த "ஸ்ரீகரஸ்பரிசத்தால்" எம் நாரதரின் "அறியாமையால் சேகரித்த" "அஞ்ஞானமான" "குற்றம் குறை உணர்வு", "பேதபார்வை", "ராகத்துவேஷங்களான விருப்பு வெறுப்பு", ஆகியவைகளை போக்கிய வண்ணம் குறும்புச்சிரிப்பாக சிரித்துக்கொண்டே,

"**என்ன நாரதா! ஜலம் எங்கே?**"

யாமும் ஓர் மூன்று மணிநேரமாக ஜலம் கொண்டு வருவாய் என அம்மரத்தடியிலேயே காத்திருந்தோம். நீ வராத தன்மையினால் யாம் உன்னைத் தேடி இக்குளக்கரைக்கே வந்துவிட்டோம்!



உ

தாகசாந்தியும் செய்துகொண்டோம். ஆமாம்
நீ யாரை எதிர்பார்க்கிறாய்? துக்கம் கொண்டு
அழுது கொண்டிருப்பவனைப் போல் தோன்றுகிறதே?
காரணம் என்ன? எதையாவது பறிகொடுத்து
விட்டாயா? இதோ பார் உன் வீணையும், உன்
சிப்ளாவும் எம்மிடம் பத்திரமாக உள்ளன! நீ ஏன் துக்கிக்க
வேண்டும்? நீதான் நைஷ்டிக பிரம்மச்சாரியாயிற்றே? நீ
ஓர் திடஞானி ஆயிற்றே? நீ ஓர் பாகவதோத்தமனாயிற்றே?
நீ பிரம்மரிஷி ஆயிற்றே? நீ பிரம்மாவின் குமாரனல்லவோ?
உன் கண்கள் கலங்கலாமோ? உன் மனம் சஞ்சலமடையலாமோ?
என இன்னமும் "ஆறுதலான வார்த்தைகளும்! அஹங்கார
அபிமானங்களை உடைத்தெறியும் வார்த்தைகளையும்! சில
ஞானார்த்த வார்த்தைகளையும்!

எம்பிரபு கண்ணன் பரிவோடு சொல்ல?

"பிரபோ" "கண்ண பரமாத்மா"!

என நாரதன் கதறியபடி கண்ணன் திருவடிகளில் விழுந்தான்.

அவ்வளவுதான்!!!

அஹங்கார, அபிமான, ராகத்துவேஷாதி நாரதன்
முடிந்தான்!!

ஸ்ரீ பரமாத்ம சொரூபமாயும், நிர்குண சொரூப "நாரதன்"
"எழுந்தான்"!!

"எம் அன்புருவே! அறிவுருவே! திருவுருவே! தவவுருவே! கருணையுருவே!
கற்பகதருவே"! எம் தவக்கொழுந்தாம்!
ஸத் சித் ஆனந்தா!

கதை முடிந்தது கருத்து இனி தொடரும்!



# அன்பு உள்ளங்களே!

1 "குடும்பிகளுக்கு:- "தற்கவன சக்தியோடு இருங்கள்" "தற்காப்பு சக்தியோடு இராதீர்கள். உங்கள் குடும்பத்தை (கணவன், மனைவி, குழந்தைகளை) உங்களுடையதாக கருதவேண்டாம். இறைவனுடையதாக உறுதியாக நம்புங்கள். அணுஅளவு சந்தேகம் கொண்டாலும் பயனற்றதாக போய்விடும்! பிறருடைய வாழ்க்கை, வசதி, போகம், மோஹம், ஆடம்பரம், சந்தோஷம் இவைகளையும் அதைப் போலவே வறுமை, கஷ்டம், கவலை, நோய், நொடி இப்படி கஷ்டநஷ்டங்களையும் "நிறைவு, குறைவாக" கணக்குப் பார்க்க வேண்டாம். இவ்விருநிலைகளிலும் அவரவர் விகிதாச்சாரப்படி பாரபட்ச தோஷம் இல்லாமல் ஒழுங்காக நடைபெறுகிறது என்றும் உறுதியாக நம்பி, அனைத்தும் இறைவன் "கருணையே" என்றும் சாந்தி சமாதானம் கொள்ளுங்கள். "உறுதியாகவும் பிரமாணமாகவும் கூறுகிறேன்."

உலகையும் ஜீவர்களையும் அவர்கள் "நடை, உடை பாவனை"களையும் "எந்தக் கண்" கொண்டு மனதால் காண்கிறீர்களோ "அதே மனக்கண்" அந்நிலையிலேயே உங்கள் நடை உடை பாவனையை அமைத்து இன்பதுன்பத்தை அவசியம் கொடுக்கும். எல்லாம் நலமே என்றும், எல்லாம் சுகமே என்றும், இவை அனைத்தும் "இறை அருளே" என்றும், உங்கள் மெய்யறிவால் உணர்ந்து "எங்கும் குற்றம் குறைகளை காணாமல்" "நிறைவாகவே" உணர்ந்து, "எங்கும் எந்த பேதமும் காணாமல்" "அபேத திருஷ்டி"யுடனே நோக்கி, எங்கும் இராகத்துவேஷாதிகளாகிய "விருப்புவெறுப்பு" இல்லாமல், இறைவனிடமே "சர்வசங்கபரித்தியாகத்துடன் சாதனை செய்வீர்களாக"! (வாழ வேண்டாம், வாழ வரவில்லை.)



உ

**உ. சாதகர்களுக்கு:—** அன்பு குழந்தாய்! "பிற சாதனையாளனைக் கவனிக்காதே" இதன் உண்மை என்னவென்றால், உன் உடல் உலகத்திற்கு சொந்தம்! ஆனால் நீ எமக்குச் சொந்தம்! யாமே நீ! உன் உடல் உன் வினையின்படி இன்ப துன்பத்தை அனுபவிக்க வந்ததே! ஆனால் உன் "**மனதை**" மட்டும் எம் வசம் திருப்பு. அப்படி நீ முழுமையாகவே (சரணாகதி) திருப்பி விட்டால் உன் "**முன்வினை**" தான் அனுபவிக்க முடியுமே தவிர "**பின்வினை**"யை அனுபவிக்க முடியாமல் "எம் வசம் சரணாகதி பண்ணிய மனம்" அது பார்த்துக் கொள்ளும் (அவ்வினையை பார்த்துக்கொள்ளும்) இது பிரமாண உண்மை. இங்கு உன் மனம் எப்படி இருக்க வேண்டுமென்றால் "**உடல் உலக பாவனை**" வேண்டாம். "**அகம் பிரம்ம**" பாவனை வேண்டும். இதை வாயால் மட்டும் பேச்சளவில் சொன்னால் மட்டும் பிரயோஜனம் இல்லை. குண தோஷங்கள் அற்ற நிலையில் நீ இருக்க வேண்டும்.

இதற்குத்தான் முன்பே சொன்னேன். பிற சாதனையாளனைக் கவனியாதே என்றேன். இதன் ரகஸ்யம் என்னவென்றால் "உணவு உடை இருப்பிடம் அனுபவம்" இவை வினை சம்பந்தம். உதாரணம்:— ஒருவனுக்கு கிடைக்கும் உணவு ஒருவனுக்கு கிடைப்பதில்லை. அது அவரவர் "கர்ம தர்மத்திற்கு" தக்கபடி அமையும். ஆகவே அடுத்தவர் உணவைக் கண்டு "குற்றம் குறை கூறவோ", "ஆத்திரம் ஆவேசம் கொள்ளவோ" "பேத உணர்வு தோன்றாமல்", "விருப்பு வெறுப்பு கொள்ளாமல்" "**அவனுக்கு அளந்த அளவு அது**" என்றும் "**நமக்கு அளந்த அளவு இது**" எனவும் பூரண நிறைவோடு இருப்பதுவே சாதனை. இந்த அளவும் அதன் அனுபவமும் அவரவர் "**வினையின்**" படி நிகழ்கிறது. அந்த வினை நமக்கில்லாமல் இருப்பது இறைவன் கருணையே என உடனுக்குடன் சாந்தி சமாதானம் செய்துவிட வேண்டும். அப்படி இல்லாமல் மனம் போன போக்கில் சாதனையாளன் சென்றால் அது "**படுகுழி**" தான். பின் அதன் மீட்பு பல காலமாகலாம். "கவனம் தேவை."



உ

அந்த வினை (அனுபவம்) நமக்கில்லையேயென கவலை கொண்டால் அங்கு நீ "அடுத்தவன் உணவின் மேல்" ஆசை கொள்கிறாய் என்றாகி விடும். அப்படி நீ ஆசை கொண்டால் அந்த வினை (அனுபவம்) உனக்கு அவசியம் கிட்டாது. அந்த எண்ணத்தின் வினையால் "**அவஸ்தையும் பின்வினையும்**" நாள் அவசியம் தொடரும், என பிரமாணமாகச் சொல்கிறேன்!

உதாரணம்!

1. ஓர் இடத்தில் கொலையோ, சண்டையால் படுகாயங்களோ, சகிக்க முடியாத கோரக்காட்சிகளோ "அவரவர் வினைப்படி" (உன் கண்முன்னாலும் சரி) ஓர் நிகழ்ச்சியோ ஓர் காட்சியோ நடைபெறுகிறதென வைத்துக்கொள். அதன் உட்புகுந்து விசாரித்து நியாய அநியாயங்களை விசாரிக்காதே. அது அவரவர் வினைகளை கொடுத்தும் வாங்கியும் பரிமாற்றம் செய்கிறார்கள் என "**உன்னை**" சாந்தி சமாதானம் செய். அது ஓர் "பொம்மலாட்டம்" என உறுதியுடன் உன் மனதிலிருந்து அக்காட்சியை அகற்றிவிடு. இதன் சாதனை "இறை குருநாமத்தில் சமர்ப்பணமாகும்"!

2. ஓர் விரசமான காமலீலை காட்சிகள் நடைபெறுகிறதென வைத்துக்கொள். "**ஓர் கணமும்**" அங்கு நிற்காதே! இக்காட்சியில் உன் மனம் "**துடிக்கும்**" இதில் சர்வ ஜாக்கிரதையாக மனம் விலக வேண்டும் A. அதையே "திரும்ப திரும்ப படம் போடக் கூடாது" B. அவரவர் வினையை பரிமாற்றம் செய்து கொள்கிறார்கள். C. அவ்வினை தன்னை தொடாத (தொடராத) வரையில் இறைவன் நம்மை காப்பாற்றி விட்டான் D. இது ஓர் திரைக்காட்சி அல்லது பொம்மலாட்ட காட்சியென்றும் உறுதிகொள். E. அத்துடிப்பை அடக்குவது உன் இறைநாமமும், குருவாக்கியமும் ஆகும்.

3. ஓர் பொருளை கண்டதும் நம்மை அறியாமலே ஓர் பிடிப்பு, ஓர் ஏக்கம், ஓர் பாச "உணர்ச்சி" உண்டாகலாம். இங்கு அதிக கவனம் தேவை. பார்வையை மாற்று. எண்ணத்தை மாற்று. இடத்தை மாற்று. இங்கு உன் குரு உபகாரம் பண்ணமாட்டார். காரணம் நீ காண்பது மாயா ஸொரூபம். அவர் ஸத்ய ஸொரூபம். ஆகவே மாயா ஸொரூப சம்பந்த இறைவன் நான்



உ

உனக்கு உதவ முடியும். ஆகவே இறைவா உன் "கருணை எதுவோ" அது நடக்கட்டும் என "சந்து சம்மா" இருக்கப் பழகு. உனக்கு அது விதி (வினை) யாயின் உனக்கு கிட்டும். இல்லையாயின் அது தானே விலகும்! இங்கு இது ஏன், எப்படி என உன் "**மனோபாரத்தால்**" அழுத்தாதே. அவசியம் சுகம் பெறுவாய்.

4. எங்கும் குற்றம் குறை காணும் நிலையும். விருப்பு வெறுப்பு தோற்றும் நிலையும், பேதமாக காணும் காட்சியும் ஓசைகளும் நிகழ்ந்தால், "**மறை**" அல்லது "**மன்னி**" அல்லது நீ "**விட்டுக் கொடுத்து விலகு**" இதில் "இறைநாம தியானமும் குருவாக்கியார்த்த சிரத்தையும்" அவசியம் இந்த அவஸ்தைகளிலிருந்து உன்னைக் காப்பாற்றும்.

5. நடந்து முடிந்ததை எண்ணி எண்ணி "மனோபாரம் ஆக்காதே"! நடக்கப்போவது என்னென்ன என மனக்கோட்டை கட்டி விருப்பு வெறுப்புக்கு ஆளாகி "மனோபாரம் ஆக்காதே". அப்போதைக்கப்போது நடைபெறும் காரியங்களையும், கேட்கும் சப்தார்த்தங்களையும் வேறு எந்த "எண்ணமும் இன்றி" இது **நலமே**. இது **சுகமே**. இது **இறைவன்** தீர்ப்பே, என **தலைவணங்கி** ஏற்றுக் கொள்வாயாக!

6. தவறு, குற்றம், குறை ஓர் அசம்பாவிதம், உன்னை அறியாமல் "**உன் வினைப்படி**" உனக்கு நடந்து விட்டால். அதை உன் "மனக்கசிவுடன்" இறைவனிடம் சொல்லி அழு. "அழுதால் உன்னைப் பெறலாம் என்று"?

"உன் வினையை அவனிடம் கொடு! அதன் பிரதிபலனை அவனும் நீயும் ஒன்றான நிலையில் அவனாகிய உன்னைப் பெறலாம்."

அந்தவறு திரும்பவும் நடைபெறுவண்ணம் இறைநாமாவையும் குருவாக்கிய சிரத்தையையும் **உறுதியான நம்பிக்கையாக**வும் இரு. இது அவசியம் அக்குற்றத்திலிருந்து நிம்மதி பெறுவாய்.



உ

ஓ எம் அருந்தவச் செல்வமே! கண்ணுக்கும் கண்ணான கண்மணியே!

ஸத் ஸித் ஆனந்தா!

இந்த விதமாக ஆறு நிலைகளில் "உணர்ந்து" சாதனை புரிந்தால் அவஸ்யம், **வெற்றி பெறுவாய்.**

குற்றம் குறை உணர்வுகளிலிருந்தும், பேதபாவனையிலிருந்தும், விருப்பு வெறுப்புகளிலிருந்தும் நீ விடுபடுவாய்.

"இது **எம் இறை குரு தீர்ப்பு**"

இந்த நாரத சம்வாதமானது "**ஓர் கற்பனையே!**"

கற்பனையாக இருந்தாலும் சாதனையாளர்களுக்கு இது அவஸ்யம் தேவைப்படும் என எமதையன் திருடன் (கண்ணன்) கணிப்பாகும். இக்கதையின் ஆழ்ந்த கருத்துக்களை மட்டும் எடுத்துக்கொண்டு, கதையையும் அதன் அலங்காரங்களையும் மறந்து விடவும். இவ் வேதை பைத்தியத்தை மன்னித்து விடவும். இந்த அலங்காரரஸனைகள் இருந்தால் தான் நாம் "**எப்படி இருக்க வேண்டும்**", "**நாம்**" "**எப்படி இருக்கக் கூடாது**" என உங்களுக்கு ஸ்வய ஞான அனுபவத்தைக் கொடுக்கும்.

குழந்தாய்!

ஸத் ஸித் ஆனந்தா இது காலபரியந்தம் எழுதி எழுதி "**சலித்தும் போனேன்**" அத்துடன் **பூரண நிறைவும் பெற்றேன்!!!**

இவை அனைத்தும் அவன் (கண்ணன்) செயலே. இந்த பைத்தியம் ஓர் கருவியே! பைத்தியம் கருவியாக இருந்தாலும், இப்பைத்தியத்தினுள் இருந்து இயக்கியது

பாபா.

**அதுவே! அதுயாமே! அதுநீயே!!!!!!!!!!!!!!!!!**



உ

ஓ எம் ஞானக் குழந்தைகளே! சென்ற இதழில் நாரதர் திருமணம் என்ற கதையை உணர்ந்து சுவைத்து படித்திருப்பீர்கள் அதில் இரண்டு இடத்தில் மட்டும் சிறிது விளக்கம் தருகிறோம் உணர்க!

# "ஸ்ரீநாரதர் திருமண தொடர்ச்சி!!!

அன்புக் குழந்தைகளே! இக்கதையில் இரண்டு கேள்விகள் வரும்.

அதாவது?

1. எம் கண்ணன் நாகசாந்தியின் நிமித்தம் "மூன்று மணி நேரமே" காத்திருந்தான் என சொல்லப்படுகிறது. அந்த மூன்று மணி நேரத்தில் நாரதர் திருமணம் முடிந்து ஒன்பது குழந்தைகளையும் பெற்று வாழ்க்கையென்னும் அந்த காலமானது "முப்பது வருஷங்கள்" ஆகிவிடுகிறதாக கதை வரும். "இந்த மூன்று மணிக்கும் முப்பது வருஷங்களுக்கும்" ஏற்படும் வித்யாச விளக்கம் தேவை? என உங்கள் அனைவருக்கும் படலாம். அதற்குரிய விளக்கம் கீழே தருகிறோம் உணர்க.

எம் அன்புச் செல்வங்களே!

உங்களை ஒன்று கேட்கிறோம்.

நீ இந்த பூலோகத்தில் பிறந்து உனக்கு 40 வயது ஆகியிருக்கிறது, என வைத்துக் கொள். உனக்கு கூடுமான வரை ஐந்து வயதிற்குட்பட்ட நிகழ்ச்சிகள் பெரும்பாலும் மறந்திருக்கலாம். மீதி 35 வயதிற்குட்பட்ட நிகழ்ச்சிகள் பெரும்பாலும் "உன் மனம் அதிக பாதிப்படைந்தவைகள் மட்டும்" உன் ஞாபகத்தில் இருக்கும். அவைகள் 35 வருஷத்தில் உன் சொந்த பந்த பாச உணர்ச்சிகளில் "உன் வாழ்க்கை என்னும் ஓட்டம்" எத்தனை முக்கியத்துவமாக இருந்தாலும் "இந்த க்ஷணம்" அவை திரும்ப வருமா? அல்லது நீ பிரயத்தனப் பட்டாலும் நடக்குமா? நடத்த முடியுமா? அதே இடம், அதே நபர்கள், அதே நிகழ்ச்சிகள், அதே குணாவய சம்பந்தங்கள், இவைகள் நடக்குமா? நடத்த முடியுமா? என்றால் அது நடக்காது"



உ

என்பதை பிரமாணமாக உங்களால் உணர முடியும்?
நடந்த நிகழ்ச்சிகள் அனைத்தும்
"சப்தார்த்தத்துடன் கூடிய ஓர் படக்காட்சியே"
என்பது உறுதியாகி விட்டது! அவைகளை நீங்கள் எண்ணி பார்த்தால் "அவை எண்ண வடிவமே" தவிர உண்மையல்ல. அப்படியான பல வருடமும் சில நொடிகளில் உங்களால் அனுபவித்து முடிந்து விடுகிறீர்கள். ஆகவே இந்த நாரதரும் கண்ணனைக் கண்டு "துவேஷ எண்ணத்தால்" பிறந்தான் அந்த துவேஷ எண்ணமே "ஓர் கற்பனை கதையை உண்டு பண்ணி" ஓர் வாழ்க்கை நாடகத்தை 50 வருடங்களை ஒரு நொடியில் நடத்தி காட்டிவிட்டதை உணரவும்.

௨. நம் நாரதர் நதியைக் கடக்கும் போது தன்னை சேர்ந்து நான்கு பொருள்களுடன் (கணவன், மனைவி, குழந்தை, ஓர் பேழை) நதியில் இறங்குகிறார். இந்த இடத்தில் உன்னை வைத்துப் பார். உயிருக்கு ஆபத்து வரும் போது?

1. பேழை:- அது அஃறிணைப் பொருள் (ஜடசொரூபம்) அது ஏன் எப்படி என்ற காரண காரியம் கேட்காது. ஆகவே அது போனாலும் வேறு நிலையில் நாம் உயிருடன் இருந்தால் அதை தேடிக்கொள்ளலாம்.

௨. குழந்தை:- அது உயிருள்ள உன் சொரூபம். அது ஏன் எப்படி எதற்கு என காரண காரியம் கேட்கும். அதற்கு பதில் சொல்லியே தீர வேண்டும். இங்கு அக்குழந்தைக்கு பதில் எப்படி அமைகிறது என்றால்? நான் இப்போது வேண்டுமானாலும் ஓர் பெண்ணை சேர்ந்து உன் போன்ற ஓர் சிசுவை பெற முடியும். ஆனால் நீ ஓர் 20 வருடம் ஆனால் தான் என் நிலை பெற முடியும். ஆகவே நீ இப்போது போனாலும் நோஷ்டம் இல்லை.

௩. மனைவி:- இது உயிருள்ள "வியபரம் தெரிந்த" உன் சொரூபம். அதுவும் ஏன் எப்படி எதற்கு என காரண காரியம் கேட்கும். அதற்கு பதில் சொல்லியே தீர வேண்டும். இங்கு தன் மனைவிக்கும் பதில் எப்படி அமைகிறது என்றால்? நான் குழந்தையல்ல. நான் உங்களில் சரிபாதி. நான் இல்லையானால் உங்களால் இயங்க முடியாது! என வாதாட (தர்க்கிக்க) பதில் எப்படி வருகிறது என்றால் இந்நிலையில் உன் சக்தியே எனக்கு பாரம் ஆகி விட்டது. இங்கு உன்னை ஒழித்தால் தான் நான் நிலை பெற முடியும். இக்கலியுகத்தில் (துவாபரயுக முடிவு கலியுக ஆரம்பம்) உன்னை விட்டால் வேறொரு துணையுடன் (சக்தியுடன்) நான் வாழ முடியும் ஆகவே உன் சகவாசம் இனி தேவையில்லை!



உ

4. குணவன்:— உலகநிலையில் "நான்" இருந்தால் பொன் பொருள் போகத்தோடும், பெண் இன்ப சரச சல்லாபத்தோடும், இல்லிருத்தியின் (குழந்தைகளின்) இன்பத்தோடும், "ஜனன மரண" சாகரத்தின் பிடிப்போடும், பிறந்திறந்து வாழ்வேன்.

தெய்வ நிலையில் "நான்" இறந்து, "நாம்" "அவன்" என ஆதலால் இன்பதுன்பம் இறந்து, பிறப்பிறப்பை கடந்து, பேரானந்தத்தில் மூழ்கி, "அவன்" கிருபையாலும் குரு கடாக்ஷத்தாலும் அது என ஆகி, பிரம்மானந்த சமுத்திரத்தில் உப்புக்கல்லைப் போல் கரைந்து, வந்ததற்கோ, இருந்ததற்கோ மறைந்ததற்கோ எந்த அடையாளமும் இல்லாமல், "அது நாமே", "நாமே அது" என ஆகி காலாதீத அந்த ஒன்றாகவே முக்காலமும் இருப்போம் எனப்பொருள் கொள்ள வேண்டும்.

## உட்கருத்து!!!

"குற்றம் குறைதாணமையும் எங்கும் இறை கருணையான "நிறைவு" தான் என உணர்ந்தும், பேத பார்வையும், பேத எண்ணமும் பேத செய்கைகளும் தவிர்க்கப்பட்டும், அனைத்தும் விகிதாச்சாரப்படி, நியதி வழுவாமல், பாரபக்ஷ தோஷமின்றி ஒழுங்காக நடந்துவருகிறதென்றும் உணர்ந்தும், காட்சிகளிலோ, கேள்விகளிலோ, செய்கைகளிலோ இராகத்துவேஷம் ஆகிய விருப்பும் வெறுப்பும் கொள்ளாமல், அனைத்தும் நலமேயென்றும், அனைத்தும் சுகமேயென்றும் உணர்ந்து, ஸ்ரீ சத்குரு வாக்கியார்த்த சிரத்தையில் கவனம் வைத்து "நம்பிக்கையான வைராக்யத்துடன்" "அது நாமே, நாமே அது" என பரந்துடன் கலந்து விடுவீர்களாக! அந்நிலைக்கு எம் பூரண நல்வாசிகள் உரித்தாகுக!

[signature]

பாபா.



ஸத்தியம் பேசு. ஓம் (ஸத்தியவாக்கை) தர்மம் செய்.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால் தர்மம் நிலைபெறும்"!

ஜெயராத்தின் மலர்!!!

"ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெயராம் ஓம்"!

"அகம்பிரம்மம், ஜெகம்பிரம்மம்"!

"அகமே எல்லாம்"!

"ஜெகம், பரமும், ஜீவர்களும்";

"சிறிதும் இல்லை"!

"அன்பும், ஆனந்தமும்";

"ஒருங்கே இணைந்த எம் செல்வங்களே"!

"பக்தியும், சேவையும், ஞானமும்"

"சிவமயமாய் அமைந்த";

"அன்பின் குடியும்"!

"ஆனந்தாஸ்ரமும்!"

"இணைந்து, கரைந்து, ஒன்றாய் கலந்து, அழகுபிரவாகமான ஆனந்த குழந்தைகளே"! "அடங்க" இருந்த நிறைவ் அமைதியும், ஆனந்தமும், ஞானமும் பெறுக! — [illegible] பாபா.



"பொறுமையே" உங்கள் கவசம்; அந்த பொறுமையின் லட்சணம் அன்பு, கருணை, சாந்தி, அமைதி, இனிமை, ஈகை, பணிவு, கனிவு, அடக்கம், பிறர் குற்றங்களை மறத்தல், அவைகளை மன்னித்தல் நீங்களாகவே விட்டுக்கொடுத்து விலகி ஆனந்தித்தல், ஆகிய இவை அனைத்தியும் "ஸ்ரீ பகவன் நாம" ஸ்மரணையுடன் "கண்டு களியுங்கள்"!

"நான்" என்ற அஹங்காரத்துடனும், "என்னால்" என்ற அதிகாரத்துடனும், "என்னுடையது" என்ற அபிமானத்துடனும், "உலகை" "உண்டு கழியாதிருங்கள்"!

அவஸ்யம் ஆனந்தமும், அமைதியும் அடைந்து நீங்கள் அனைவரும் "ஜீவன் முக்தி" பெற்று விட்டீர்கள் என ஆசி கூறிவிட்டோம்!!!!!! தறு பாபா.

உங்கள் ஸ்வய அனுபவத்திற்காகவும், உடல், உலக, தெய்வீக நிலையில் எப்படி "தர்மா தர்மங்களை" கடைப்பிடிக்க வேண்டும் என்பதையும், சற்று "உங்கள் நிலைக்கு இறங்கி" சில அனுபவ வாசகங்களை தருகிறோம். இவற்றை சற்று கவனமுடனும் ஆழ்ந்த அனுபவத்துடனும் நோக்கும்படி உங்கள் அனைவரின் திருவடிகளிலும் பணிந்து கேட்டுக்கொள்கிறோம். இவ் விதழின் தலைப்பாவது??

"பிரவர்த்தியும்"!

"நிவர்த்தியும்"!!



# 1. "பிரவர்த்தி"

எம் ஆனந்த சொரூபங்களே!

"பிரவர்த்தி" என்றால், "புறவிருத்தி" என்று பொருள்படும். அதாவது புறச்செயலாகும். அதாவது இந்த ஜீவனின் கர்மாவின் வெளிப்பாடாகும். அதாவது ஒவ்வொரு ஜீவனின் புண்ணிய பாபங்கள் வெளிப்படையாக தோற்றி, அதனால் கர்மா இயங்கி, "கொடுக்கல் வாங்கலோ", அல்லது "வாங்கல் கொடுக்கலோ" நடந்து, பண்டப் பரிவர்த்தனம் செய்வதாகும். இதை எந்த ஜீவனும் மறுக்கவும் முடியாது, மாற்றவும் முடியாது, மறைக்கவும் முடியாது; "**செய்தே**" தீரவேண்டும். இது எப்படி நடைபெறுகிறதென்றால், ஒவ்வொரு ஜீவனும் தான் ஏற்று வந்த கர்மாவை, கால்களால் நடந்து சென்று கைகளால் கொடுத்தும், வாங்கியும், அனுபவிக்கிறார்கள். இதைத் தான் அனுபவ ஞானிகள் சொல்வர்!

"கொடுத்ததை வாங்க வேண்டும்"! "வாங்கியதை கொடுக்க வேண்டும்"!
"விதைத்ததை உண்ண வேண்டும்! "விதைப்பதில் கவனம் வேண்டும்"!
என்றும்?
"தோன்றின அனைத்தும் அனைத்தும் நினைக்கத் தோன்றின" என்றும்!
"நின்றன அனைத்தும் அனைத்தும் நினைத்து நின்றன" என்றும்!!
"**வரையறுத்து**" (முடிந்த முடிவாக) கூறிவிட்டனர்.

இங்கு புண்ணியமும், பாபமும், ஒன்றே. இவ்விரண்டும் ஓர் நாணயத்தின் இருபக்கங்களாகும். நாணயம் (கர்மா) ஒன்றே. ஆனால் அதன் பக்கங்கள் (புண்ணியம், பாபம்) இரண்டாகும். இங்கு புண்ணியம் இல்லாமல் பாபம் இல்லை யென்றும்; பாபம் இல்லாமல் புண்ணியம் இல்லை யென்றும் சொல்லலாம். இவை இரண்டும்,



உ

ஞானநேத்திரத்திற்கு, பிரத்தியக்ஷமாக நேருக்கு நேர் தெரிவதால், இதை அனைவரும் அவசியம் ஒப்புக்கொள்ள வேண்டும். இதை எவராலும் மறுக்க முடியாது. புண்ணியம் என்ற இன்பமே, பாபம் என்ற துன்பமாக மாறுகிறது.

"உதாரணம்"!

1. படையை சொறிவதால் இன்பம், இது புண்ணியம். அப்படி சொறிந்ததால் வரும் எரிச்சல், துன்பம் இது பாபம்.
2. காணும் காட்சிகளில் முதலில் ஓர் இன்பம், இது புண்ணியம். அதில் சலிப்பு தட்டுவதும், கண் பூத்தாவதும், ஓர் துன்பம், இது பாபம்.
3. ருசியாக உணவை அருந்தும் போது, அது ஓர் இன்பம், இது புண்ணியம். ருசியினால் அதிக உணவு ஏற்றதால், அஜீரணம் இது துன்பம், இது பாபம்.
4. வார்த்தைகளையோ இசையையோ ரசித்து கேட்பது, ஓர் இன்பம், இது புண்ணியம். அதுவே சலிப்பாக மாறுவதும், வேதனையாக கேட்பதும், துன்பம் இது பாபம்.
5. உடல், உலக, உறவு, சுற்றம் இவைகளால், ஓர் இன்பம், இது புண்ணியம். மேலே கூறியவைகளால் சலிப்பு விகார விலகாரம், ஓர் துன்பம் இது பாபம்.

எம் கண்மணிகளே! இப்படியே பலபல எழுதிக் கொண்டே போகலாம். ஆனால் இன்பமும், துன்பமும், அதாவது புண்ணிய பாபம் இரண்டும், ஒன்றே என்பது தெளிவாகிவிட்டது. இவைகள் "இன்ப துன்பம் என்றும், சந்தோஷம் துக்கம் என்றும்" சொல்லலாம்.

ஆனால் ?

இவைகள் தாவர புற விருத்திகளினால், தோற்றக் கூடியதாகும்! இவைகளில் மனம் சம்பந்தப்படுவதால், இந்த மனதின் "கற்பனை" வடிவில், இவை ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

இவைகளுக்கும் அதீதமாகவும் இரண்டு! அவை "ஆனந்தம்" என்றும், "அவஸ்தை" என்றும், இரண்டாகச் சொல்லலாம். இங்கு சந்தோஷம் வேறு, ஆனந்தம் வேறு. அதாவது "சகவாச தோஷங்களினால்" உண்டாவது, சந்தோஷம் என்றும், "ஆ" என்ற பசுத்தன்மையும், ஆனவ பந்த பாசத் தன்மையும், இறந்து அவற்றின் "அந்தத்தால்" உண்டாவது "ஆனந்தமாகும்".



உ

அதைப் போலவே, அவஸ்தை யென்பதையும், உடல், உலக, உறவு, பொருள்களாக கற்பனை பண்ணுவதும், அவைகளை நான், என்னுடையது, என கற்பனை பண்ணுவதும், அது "மனமய அவஸ்தை" யாக, துக்கத்தையும், கவலையையும், பயத்தையும், அவஸ்தையும் கொடுக்கும். இது ஓர் "போதை" ஆகும். அதாவது இதை "பிராந்தி மயக்கம்" என்றும் சொல்லலாம். ஏன் இதை இவ்வாறு கூறுகிறோம் என்றால், மெய்யுணர்வாகிய தெய்வீக உணர்வு மறைந்து, (அழிவதில்லை) உடல் உணர்ச்சியாகிய, ஓர் துடிப்பு, ஓர் படபடப்பு, ஓர் அதிர்ச்சி, ஓர் சலசலப்பு, ஓர் "இன்பவேதனை" உண்டாவதையே, அவஸ்தை என்றோம்.

1. "இன்பம்":- மனம் தொடுவதால் தெரியும் நிலை!
2. "ஆனந்தம்":- பசு பாசத்தன்மை இறந்தால் ஏற்படும் ஓர் "தெய்வீக உணர்வு"!
3. "சந்தோஷம்":- உடல் உலக உறவு "சகவாச தோஷத்தால்" மனதால் அறியும் நிலை!

1. "தெரியும் நிலை யென்றால்" கண்களால் கண்டு அது என்ன என தெரிவதாகும்!
2. "அறியும் நிலை யென்றால்" காதுகளால் கேட்டும்; வரிவடிவங்களைப் படித்தும் அறிவதாகும்.
3. "உணரும் நிலை யென்றால்" கண்ணால் காணாததும், காதுகளால் கேளாததும் ஆன, சுவைத்து ருசிக்கும் உணர்வு நிலையாகும்.

அன்பில் விளைந்து, ஆனந்தத்தில் மூழ்கி இருக்கும் எம் "ஞானச் செல்வங்களே"!

மேலே கூறிய கர்மா இல்லாமல், புறவிருத்தியாகிய பிரவர்த்தி இல்லை யென்றே சொல்ல வேண்டும். இந்த கர்மா வானது அந்த மாயாமனதின், சகவாச, தோஷ, கற்பனையால், வந்ததாகும்.



உ

இந்த மனதின் கற்பனைகளிவான, எண்ணத்தைத்தான், நம் இறைவன் "விதி" என்ற பெயரில் நடத்தும் நாடகம், அதை "சதி" என்று கூறப்படுகிறது. இங்கேதான், விதியும், சதியும், ஒன்றுடன் ஒன்று பின்னிக்கொண்டு, இந்த இல்லாத உலகத்தை, இருப்புடையது போல நடத்திக்கொண்டிருக்கிறது. இதை முடிந்த முடிவாக, எப்படி உணர வேண்டுமென்றால் ???

1. இந்த மாயா மனதின், மயக்கத்தினால் தோன்றிய, அஹங்காரம் "நான்" என்றும்; அதிகாரம் "என்றல்" என்றும், மானம், அவமானம், சூடு, சுரணை, வெட்கம், லட்சை உடைமைகள் அனைத்தும் இறைவனுடையதாக இருக்க அதை உணராமல் அபிமானமென "என்னுடையது" என்றும், பாராட்டி நாம் எடுத்து வந்த பிராரப்தத்தை மட்டுமே அனுபவிக்காமல், மேலும் "ஆகாமிய" வினைகளை, (இன்பதுன்பம் என்றும் புண்ணிய பாபங்களை) சேர்த்துக் கொண்டதால் ??? "(மதி) (மனம் + வினை)"

2. இந்த வினையை நடத்தி முடிக்க, இறைவன் கருணையோடு அனைத்து காரியங்களையும், எந்த குறையுமின்றி, விருப்பு வெறுப்பின்றி, பாரபட்ச தோஷமின்றி, செய்யும் கருணைக்கடல். நம் இன்ப துன்பத்தால் மயங்கி, எனக்கு இப்படி "விதித்து விட்டானே" என்று எம் ஸ்ரீ பகவானை தூஷித்துக் கொண்டதால் ??? "(வினை + விதி)"

3. இங்கு இந்த வினையை முடிக்கும் வண்ணம், எம் ஸ்ரீ பகவான் எடுத்துக்கொண்ட காரியத்தை, கருணையென உணராமல், இறைவன் இப்படி "சதி செய்து விட்டானே" என்றதால் "(விதி + சதி)"

4. கருணையின் செயல் சதியாக மாறி, "பழி"ச் சொல்லும், அதனால் வினையும் "பாபச்" செயலும், நம் ஸ்ரீ பகவான் மீது சுமத்துவது எத்தனை அநியாயம்? எத்தனை அறியாமை? என எண்ணிப் பாருங்கள்!



உ

எம் ஞானக் கருவூலமான கண்மணிகளே! இவை அனைத்தையும், நீங்கள் அடங்கியறிவில், மிகவும் பொறுமையாக நோக்குவீராகில், இந்த வேண்டாத புறவிருத்திகளாகிய, **"பிரவர்த்தி"** எப்படி உண்டாயிற்று? என்பதை தெளிவுபட உணரமுடியும்.

**"பிரவர்த்தியின் மூலதனமே"**, அதாவது அதன் **"வித்தே"**! **"நான்"**, **"என்னுடையது"**, என்ற அஹங்காரமும், அதிகாரமும், அபிமானமும், எனமட்டும் உணரவும். இனி இந்த பிரவர்த்தியின், நிவர்த்தி மார்க்கத்தை கேட்பீர்களாக!

## உ. "நிவர்த்தி"!

எம் அன்பில் உதித்த, ஆத்மஞானமழலைகளே! இந்த நிவர்த்தியின் மார்க்கம், மிக, மிக, மிக, மிக, மிக, மிக, மிக, எளிதாகும்! முன் அத்தியாயத்தில் கூறிய, நான், என்றல், என்னுடையது, என்ற அஹங்கார, அதிகார, அபிமானங்களை, **முழுமையாக விட்டொழிக்க வேண்டும்!!!**

உங்களுடைய பிரவர்த்தியாகிய, கர்மாவான பிராப்தத்தை, என்ன காரணத்தைக் கொண்டும், "விலக்க முயற்சிக்காதீர்"! அப்படி முயற்சித்தால், "அந்த கர்மா மாறி வேறொன்றாக" வந்து, உங்களை அவஸ்யம் ஆட்படுத்திவிடும். ஆகவே அவற்றை தலை வணங்கி, உங்கள் உபாசனாமூர்த்தியாகிய, "ஸ்ரீ பகவத்நாம" உச்சாரணத்துடனே; **"எல்லாம் நீயே"**! என சர்வார்ப்பணமாக செய்து முடித்து விடுங்கள்.



உ

யாமே உங்கள் ஸ்ரீ பகவன் நாமாவாக இருந்து கொண்டு, "ஜீவ சம்ரக்ஷணை" செய்கிறோம். அதாவது அவரவர் வினைகளை, குறிப்பிட்ட காலங்களில், குறிப்பிட்ட நிலைகளில் (குறிப்பிட்ட இடங்களில்) உங்களுக்கு ஏற்றவாறு, "உங்கள் கருவிகளை அசைப்பித்து" அக்கர்மாவை யாமே, எம்மையா சக்தியினால் நடத்தி முடித்துவிடுகிறோம். அக்கர்மாவின் பலன் அவசியம் உங்களை பற்றாது நாசமாகும். "ஆனால்"

"நான், என்னால், என்னுடையது, என அக்கர்மாவை செய்தீர்களானால், அதன் பலன் உங்களையே வந்து சேரும்!"

அடுத்து!

யாமே உங்கள் ஸ்ரீ ஸத்குருவாக இருந்து கொண்டு, உங்கள் "மனோ அவஸ்தைகளாகிய", "காரணங்களை" (எண்ணங்களின் கற்பனைகளை) "காலாதீத ஒன்றே ஸத்தியமென்றும், அதுவே யாமென்றும், அதுவே நீங்கள் என்றும்" திரும்ப, திரும்ப, அப்யாசிக்கச் செய்து, அதை ஆக்கி விடுவோம்!

"எண்ணங்களே உங்கள் கரணங்களின் வேலை!"

"அதன் செய்கைகளே உங்கள் கருவிகளின் வேலை!"

இவை இரண்டும், ஏக காலத்தில் இயங்கினால் தான், உலகின் கர்மாவின் காரியம், எந்த தடையுமின்றி நடைபெறும்!

இதன் உதாரணம்!

1. "மாவு" என்றால் ஒரே எண்ணம். அந்த ஒரே எண்ணத்தால், இயக்கங்களை, "எல்லாம் நீயே" என்ற ஒரே எண்ணத்துடனும். நம்மை, "நாமே அது, அதுவே நாம்" என்ற ஒரே எண்ணத்துடனும், முடித்துக் கொண்டால், கர்மாவும் முடிவுறும், அசையும் நின்றுவிடும்!

2. "பட்சணம்" என்றால் விதவிதமான நாமரூபம், விதவிதமான சுவைகள், விதவிதமான குணதோஷங்கள், "பயம், சந்தேகம், குற்ற உணர்வு" முதலிய கலக்க எண்ணங்களை விடவும்!



2

பக்ஷணமாக, பலநாம ரூபங்களிலும், பலவித சுவைகளுடனும், பற்பல குண சொரூபங்களிலும், சுவைத்தது போதும், என "**நிறைவு**" கொள்ளுங்கள். "**வெறுப்பு**" வேண்டாம். எளையுங்கள் அவரின் பாதங்களிலும் பணிந்து வேண்டிக் கொள்கிறோம்! கீழே உள்ளதை, வெகு உன்னிப்பாக கவனிக்க வேண்டுகிறோம். ஏனென்றால் நீங்கள் குடும்பிகளோ, சுகசாரிகளோ, தொழில் அதிபர்களோ, பரம ஏழைகளோ, பரம்பர பணக்காரர்களோ, அல்லது சாதனை செய்து வரும் அன்பின் குடில் "**பிரம்மச்சாரிகளோ**"!!! அல்லது, ஆனந்தாஸ்ரம, "**எம்ஞானக்குழந்தைகளோ**" இது பிரமாண உண்மையாகும்"!!!!!

எப்படியோ ஓர் "கர்மா தாவம்," தாங்கி வந்து விட்டீர்கள். இந்த கர்மா தாவத்தை, எந்த க்ஷணம் எப்படி விட்டாலும், திரும்ப ஓர் தாவம் தாங்கக் கூடாது. அப்படியானால் ஏற்று வந்த தாவ "கர்மா பூர்த்தியாக முடியவும் வேண்டும். வேறு கர்மா தொடரா மலும் இருக்க வேண்டும்". ஆகவே இங்கு நீங்கள் அனைவரும், சற்று கவனமுடன் இருக்க வேண்டும். நம் முன்னோர், உலகையும் தெய்வீகத்தையும், இணைத்து, ஓர் பழமொழி சொல்வார்கள். அதாவது?

"**செய்யும் தொழிலே தெய்வம்**"

இதில் என்ன உணர்த்தப்படுகிறதென்றால்???

"தொழில் என்றால், புண்ணிய, பாப, கர்மாவாகும்!

"தெய்வம் என்றால், அனைத்திலும், சாட்சி, நிலையாகும்"!!

சாட்சியென்றாலே காட்சியிலும், நிகழ்ச்சிகளிலும், ஓசைகளிலும், "**பற்றப்படாத**" நிலையாகும்.



உ

இது எப்படி சாத்தியமாகும், என்று எண்ணத் தோன்றுகிறதா? "கீழே சில உதாரணங்கள்:"

1. ஓர் பக்தன் கசாப்புக்கடை வைத்து, வியாபாரம் செய்து, ஜீவனம் செய்கிறான். அவனை எம் பிரபு, அன்போடும், கனிவோடும், ஏற்றுக் கொள்கிறான். "அங்கு அவன் தொழிலால் பாதிக்கப் படவில்லை."

2. ஓர் பக்தன், ஸ்ரீ பகவான் அம்சமான, சாளக்கிராம கல்லை, தம் கசாப்புக் கடையில், "எடைக் கல்லாக" பயன் படுத்தி, அவனுடைய ஜீவனத்தை நடத்துகிறான். அவனையும், எம் பிரபு, அன்போடும், கருணையோடும், ஏற்றுக் கொள்கிறான். "அங்கு அவன் தொழிலால் பாதிக்கப் படவில்லை."

3. ஓர் அரசன், தாசி போகத்திலேயே, மூழ்கியவன். ஆனாலும் அவன் "ஓர் சிவபக்தன்". ஓர் நாள், அத்தாசியின் கொங்கையை, சிவலிங்கமாக்க, அதன் மூலம் எம் பெருமான் காட்சி தந்து, அவ்வரசனை ஆட்கொள்கிறான். "இங்கும் இவன் செய்கையால் (தொழிலால்) (காமத்தால்) பாதிக்கப் படவில்லை."

4. ஓர் தாசி, தம் உடலை விற்றுத்தான், ஜீவனம் செய்யும் நிலையில் "அவள் கர்மா இருக்கிறது". அவளையும் எம் பிரபு ஏற்றுக் கொண்டு, அவளுக்கு சொர்க்கத்தை அருளுகிறான். "இங்கும் இவள் செய்கையால் (போகத்தால்) பாதிக்கப்படவில்லை."

5. ஓர் சேணிய பக்தன், தினமும் எட்டு, பத்து என்று ஆடுகளை, அறுத்து அதன் தோல்களை பதனிட்டு, அவைகளை விற்று, தம் ஜீவனம் செய்பவன். இவனையும் எம் பிரபு, அன்போடு, ஆட்கொள்கிறான். "இங்கும் இவன் செய்கையால் (கொலைத்தொழில்) பாதிக்கப்படவில்லை."

இதைப் போலவே, இன்னமும் பலர் உண்டு. ஆகவே எம் அன்பு குழந்தைகளே! நீங்கள் ஏற்று நடத்தும், எந்த தொழிலும், உங்கள் புண்ணியபாப கர்மா நிமித்தம், அமைவதாகும். இது பாபத் தொழிலாயிற்றே, இது கொலைத் தொழிலாயிற்றே, என சந்தேகமும், சஞ்சலமும், சந்தேகமும், பயமும் அடைய வேண்டாம்.



ஆணவ அவைகளோ "இன்பமென்று" மூழ்கிவிடவேண்டாம்.

மேலும் முக்கியமான ஒன்றை சொல்கிறேன், சிரத்தையுடன் உணர்வீர். அனைவரின் தூலங்களும் "மண்ணால்" ஆனவையே, மேலும் நீங்கள் காணும் அனைத்தும், மண்ணுக்கு அன்னியமில்லை, "இதுவே மறுக்கமுடியாத உண்மையாகும்." புண்ணியபாபம் என்னும் இருவினைகளும், "ஜலமும், மண்ணுமாகும்". நீங்கள் தேடும் பொன்னும், பணமும், மண்ணே; உண்ணும் உணவும் மண்ணே; புடவையும் உடையும், மண்ணே; இருக்கும், படுக்கும், வசிக்கும், இடமும் மண்ணே! இந்த அனைத்து மண்ணும், அம்மண்ணுவான பொருள்களும்; "நம்முடைய மாயா "பூபகவானுக்கு" சொந்தமே. அப்படியானால் இவை அனைத்தும் அவன் பொருள். இவை அனைத்தும் அவன் இயக்கம்; இவை அனைத்தும் அவன் உடைமை! இதில் "நான், என்னால், என்னுடையது", என "உரிமை" கொண்டாட, எந்த பாத்தியதையும் இல்லவேயில்லை. அப்படி இருக்க, இங்கு உண்பதோ, உடுத்துவதோ, உறங்குவதோ, எதையும் எடுத்து அனுபவிப்பதோ, இருந்தால் அவன் அனுமதி வேண்டும். அந்த அனுமதி எப்படி நமக்கு கிடைக்கும் என்றால்? "இந்த தூலம் இங்கு, "உழைக்க" வேண்டும்"! "சரீர உழைப்பு இல்லாமல், இங்கு எதையும் தொட உரிமை இல்லை! இறைவன், நம் புண்ணிய பாப வினையின்படி, நம் "தூலங்களை," இயக்கும் காரண சொரூபனை, "மேஸ்திரி" (அதிகாரி) நாம் நம் புண்ணிய பாப வினையின்படி, அக்கர்மாவை முடிக்கும், "பதுமைகள்" எனச் சொல்லும், "காரியஸ்தன்! இங்கு அவரவர் இயந்திரத்திற்கு தக்கபடி, கர்மாக்கள், அவரவர் தூலங்களை, பிணைந்து வேலை வாங்கும். குடும்பிகளுக்கு இங்கு ஒன்றை, நினைவில் கொள்ள வேண்டும். நாம் இந்த இனத்தவன், நாம் இந்த மதத்தவன், நாம் இந்த படிப்பு படித்த பட்டதாரி, நம் அந்தஸ்திற்கும், நம் கௌரவத்திற்கும், இந்த வேலை பார்க்கலாமா? என வீணை நீங்களோ



உங்கள் "உடை" போட்டுக் கொண்டு மனக் குழப்பம் அடைய வேண்டாம். மேலும் "ஆண்களுக்கு ஒன்று கூறுகிறோம்:"

உங்கள் புண்ணிய பாப சரீரம் உங்கள் ஸ்ரீமாதா, ஸ்ரீபிதாவால், கொடுக்கப்பட்டது. உங்களுக்காகவே உழைத்து, உழைத்து, உருக்குலைந்து போன (உணவு, உடை, இருப்பிடம், தேவைகள், கல்வி, இவைகளை உங்களுக்கு தந்த) உங்கள் ஸ்ரீமாதாபிதாவை, கடைசி காலத்தில் உணவு, உடை, இருப்பிடம் தந்து ஆதரிக்க வேண்டியது, உங்கள் "தர்மம்". இந்த தர்மத்தை ஓர் ஆண்மகன் செய்யாது, தன் குடும்பத்தை மட்டுமே, போஷிப்பானாயின், அவன் "ஏரி நரகில்" வீழ்வான், என நம் சாஸ்திரங்கள் கூறுகின்றன. மேலும் படிப்பை முடித்த ஆண்மகன், தன் ஊதியத்தால், ஸ்ரீமாதாபிதாவுக்கு கொடுத்து, போஷிக்காமல், தன் அப்பா "சொத்தில்", செலவு செய்வானாயின், அவன் "கும்பீபாக நரகில்" வீழ்வான், என நம் சாஸ்திரங்கள் மொழிகின்றன. "ஆகவே கவனம் தேவை! எல்லாமே இல்லை, இல்லை என்று சொல்லும் அப்பா! இப்படி ஏன் நம்மை பயமுறுத்த வேண்டும் என நீங்கள் கேட்கலாம். உங்கள் உடலும், (புண்ணியபாபம்) உங்கள் மனமும், அதன் இயக்கங்களும், உங்களுக்கு தோன்றாது மறைந்து, அழிந்துவிட்டால், (நீங்கள் ஸ்வய ஞானானுபூதி பெற்று விட்டால்) மேலே கூறிய, இப்பயம் பிராந்தி இல்லையென்றே, பிரமாணமாகச் சொல்லுவோம்! அவைகள் இல்லை! இல்லை! இல்லை!

எம் ஆனந்தச் செல்வங்களே! தர்மத்தையும், ஸத்தியத்தையும், நீங்கள் போற்றி பணிந்தீர்களானால் அவை உங்களை அவசியம் நிலைகண்டு, பொறுப்பேற்றுக் கொண்டு, அவசியம் காப்பாற்றும், என பிரமாணமாகச் சொல்லுவோம்.



உ

இவ்வுலகிற்கும், தெய்வீகத்திற்கும், "**தர்மாதர்மங்கள்**" அவசியம் உண்டு. உங்கள் யதார்த்த சொரூபத்தை, உங்கள் குரு மூலமாக, ஸ்வயமாக உணர்ந்து, "**அது நாம். நாம் அது**" என அறிவிட்டால், அங்கு எந்த தர்மா தர்மங்களும், இல்லையென்றே பிரமாணமாகச் சொல்லலாம்.

மேலே கூறிய நிலையின்படி, "செய்யும் தொழிலே தெய்வம்" என்றால் "தொழில், உங்கள் கர்மா சம்பந்தம்". அதனால் வரும் புண்ணிய பாபம் அவசியம் உங்களைப் பற்றாது. எப்படியென்றால் "நான், என்னால், என்னுடையது" என்ற அஹங்கார, அதிகார அபிமானம் அற்று, செய்தால் பற்றாது. மேலே கூறிய பந்த குணங்களோடு, நீங்கள் செய்தால், அக்கர்மாவின் பலனை, நீங்களே, "**வலுவில்**" ஏற்றுக் கொள்கிறீர்கள், எனப் பொருள் கொள்ள வேண்டும்!

அத்தொழில், உன் உபாசனா மூர்த்தி வசம், எல்லாம் நீயே என்றும், எல்லாம் உன்னால் என்றும், எல்லாம் உன்னுடையதே என்றும் மாற்றிப் பிடித்து செய்யப் பழகிக் கொண்டீர்களானால், அத்தொழில் "**பாதகமோ**", அல்லது "**சாதகமோ**", அது உங்கள் பிராரப்தத்தின் பல, முடிவு மேயல்லாது, அது மீண்டும் தொடராது. மேலும் நடந்து முடிந்த கர்மாவில், "**மனம், அழுந்தக்கூடாது**", அதாவது அவற்றை, திரும்ப திரும்ப, எண்ணி எண்ணி, உங்கள் மனமைய கற்பனையை விரித்தால், அதனால் சந்தேகம், பயம், தவக்கம், அவஸ்யம் வந்தே தீரும். அங்கு நீங்கள், "**பயமே பலிக்கும்**" என்ற நிலைக்கு ஆளாக நேரிடும்.

உ

# "முடிவு"



**கர்மா** :- "வேறாலும் ஏவப்படுவாய்!
"அல்லது, உன்னாலேயே உந்தப்படுவாய்"!!

அது சமயம், "இரண்டொரு வினாடிகள்", ஸ்ரீ பகவான் நாமஸ்மரணையில், முழுமையாக மூழ்கு. அக்கர்மா உன் மூலம் வழியாக, ஏவப்பட்டாலும், அல்லது பிறரை ஏவுதல் செய்தாலும், அது நடைபெற வேண்டுமாயின், நடைபெறும். அது உனக்கு உரியதில்லையாயின், தானே விலகிவிடும். நடைபெற்றாலும், நடைபெறவிட்டாலும், அதன் "**பலன்**", எண்ணி எண்ணி, வருந்தவோ, துக்கிக்கவோ, சந்தேகிக்கவோ, சந்தோஷிக்கவோ, வேண்டாம்!"

"**முயற்சி**" "உன்னுடையது"! அதன் "**பலன்**" அவனுடையது. அதன் பொறுப்பும் நீயே. அதாவது கர்மபலனில் ஆழ்ந்தால், அந்த சொரூபத்திலோ, வேறு சொரூபத்திலோ, உன்னைத் அக்கர்மா தொடரும். பேசும் நிலையில், உன்னை ஓர் ஸ்பீக்கராகவும், (பேச்சு அவன் வசம்) அசையும் நிலையில், உன்னை ஓர் பதுமையாகவும், (சூட்சுமக் கயிறு அவன் வசம்) எண்ணி. இது ஏன்? இது எதற்கு? இது எப்படி? என பல நிலைகளில், கேள்வி கேட்கவும் வேண்டாம். அதை திரும்ப, திரும்ப, எண்ணவும் வேண்டாம்.

1. கடந்த காலம் :— நீ காறி உமிழ்ந்த எச்சில்!
2. வரும் காலம் :- கற்பனை நிலையில் ஓர் கனவு!!
3. நிகழ் காலம் :- "உன் வினை முடிவுறுவதால்," அது உன் இறைவனால் நடக்கும் ஓர் "**நலமான** பொற்காலம்." ஆதலால் அறிவும் ஆழ்ந்து விடாதே! "**எல்லாம் நீயே**" என அவனிடம் சரணடைந்து விடு.



உ

இந்த அத்தியாயத்தில், முன்பு கூறியபடி, இது பாபமாயிற்றே என்றும், இது புண்ணியமாயிற்றே என்றும், எண்ணும் உன் "எண்ணமே", அக்கர்மாவின் பலனாக வடிவெடுக்கிறது. அந்த மனமே எண்ணங்களுக்கு இடம் கொடாமல், இத்தாவம் "உன்னை ஆயுதம். இதன் இயக்கம் உன்னுடையதே" என சர்வார்ப்பணமாக, அக்கர்மாவை செய்ய முனைவாயேல், அது உனக்கு பிராப்தமாக இருந்தால், தானே சுலபமாக நடைபெறும். அது உனக்கு பிராப்தம் இல்லையாயின், நீ அதை தொடும் போதே, "அது உன்னை விட்டு அகலும்". அல்லது "அது முடிவுறுது நாசமாகும்" அல்லது "பிற ஜீவர் அதைதாமே வந்து வலிய ஏற்றுக் கொள்வர்".

அங்கு அக்கர்மா பற்றி, "ஆழ்ந்து விடாதே"!! இது வேறு எந்த குண தோஷங்களுக்கும், நீ ஆட்பட்டு விடாதே. இது போதும் "இறைவன் கருணையே", என சாந்தி சமாதானம் செய். என "நிறைவு" கொள். "மாறாக சலிப்படையாதே!!"

குறிப்பாக

1. எதையும் கொடுப்பதானாலும்:- "இறைவன் பொருள்", "இறைவனே", "இறைவனுக்கு" கொடுக்கிறேன் என, பரிபூரண எண்ணத்துடன் செய்!

2. எதையும் வாங்குவதானாலும்:- "இறைவனே" "அவன் பொருள்", நம்முள் இருக்கும், "இறைவனுக்கு" கொடுக்கிறேன். இவ்விரண்டின் "பலன், இறைவனுக்கே" என சர்வார்ப்பணமாக விட்டு விட்டு, அக்கர்மாவில் பூரண நிறைவு கொள்ளவும்.



உ

ஸ்ரீ பகவத் கீதா வாசகம்:– நீ பாபிகளுக்கெல்லாம், மஹா பாபியாக இருந்தாலும், கவலை, பயம், சந்தேகம், வேண்டாம்!!! (ஆத்ம) "ஞானம்" என்ற ஓர் "ஓடம்" தருகிறேன். அவசியம் நீ கரையேற்றப்பட்டு விட்டாய், என்றே உறுதி நிச்சயம் கொள்!
(அகம் பிரம்மம், பிரம்மம் அகமே என்று)

ஸ்ரீ கீதா வாசகம்:– நிறைவுறும் இந்த நிஷ்டையுள்ளோர், "நீசரேயும்"??? "நிர்மலமாம் பரமாகி முக்தராவர்"!!! என அறுதியிட்டு சொல்வதால்; "செய்யும் தொழிலே "தெய்வம்":– நம் பிராரப்த கர்மாவின்படி, நம் தொழில் அமைந்திருக்கிறதென, "பரிபூரணமாக நம்பி," அத் தொழிலின் நிமித்தம், "கொடுக்கல், வாங்கல் களிலும்," ஏற்றதாழ்வாகிய, "லாப, நஷ்டங்களிலும்"! இது நம் குற்றம்; இது நம் குறை; இது நம் கவனக் குறைவு; இப்படியும் நடக்கிறதே; என்ற எந்த "விகார, விவகாரங்கள்"! (பிரச்சனைகள்) நமக்கு நாமே உண்டாக்காமல், பணிவுடன் ஏற்றுக்கொண்டு அனைத்திலும் "நான்", "என்னால்", "என்னுடையது"! என்ற அஹங்கார, அதிகார, அபிமானங்களை, மட்டும் பரிபூரணமாக நீக்கிவிட்டு, எல்லாம் அவன் கிருபையினால், "நலமாய்" நடைபெறுகிறது என்றும்; "சுகமே" அனுபவிக்கிறோம் என்றும். பூரண நிறைவோடு உங்களுக்கு விதிக்கப்பட்ட கர்மாவை திறம்பட "நடிப்பீர்" நிலையில் நடத்துங்கள். "ஆனால் கர்மா உங்களுடையது. அதன் செயல்பாடு, எம் யோகமாயாவினுடையது"! எல்லாம் நலமே!

அனைத்தும் ஒன்றே!
அது யாமே! அது நீங்களே!
இது ஸத்தியம்! ஸத்தியம்!! ஸத்தியம்!!!

பாபா.



# "சொல் அறு"
# "சும்மா இருப்பதுவே சுகம்!!!
அன்பும், கனிவும், பணிவும், சேவையும், ஒருங்கே

## "அமைந்தனம் ஆனந்தாஸ்ரம, அன்பின் குடியும், இணைந்த, ஆனந்த குழந்தைகளே!

"சும்மா இரு" என்றால், கையைக்கட்டிக்கொண்டு, எங்கும் போகாமலும், வராமலும், "எந்த வேலையுமின்றி" சோம்பேறியாய்ச், சும்மா இருக்கச் சொல்லவில்லை.

1. கண்கள்:- கண்கள் காணவேண்டும். கோரமாக, விகாரமாக, விரோதமாக, விபரீதமாக, விநோதமாக, வேற்றுமையாக, விருப்பு வெறுப்பாக, காமமாக, மோகமாக காணக் கூடாது! அனைத்தும் இறைவன் பொருளே, அனைத்தும் இறைவன் இயக்கமே எனக் காண வேண்டும்!

2. காதுகள்:- காதுகள் கேட்க வேண்டும். குற்றம் குறைகளாக, பிரச்சினைக்குரிய விஷயமாக, ஆசையைத் தூண்டும் நிலையில், வேகம், ஆத்திரம், ஆவேசம், ஊட்டும் நிலையில், வார்த்தைகளாகக் கேட்கக் கூடாது! அமைதியாக, இனிமையாக, ஆனந்தமாக, இது இறைவன் இயக்கமே என்று தலைவணங்கி ஏற்றுக் கொள்ளும் நிலையில், வார்த்தைகளையும், ஓசைகளையும், மாற்றி கேட்டுப் பழகவேண்டும்!

3. கால்கள்:- எங்கு நடந்தாலும், இறைவனையும், அவன் ஆலயத்தையும், வலம் வருகிறேன், என இறை உணர்வோடு நடக்கவேண்டும்.

4. கைகள்:- எதைக் கொடுத்தாலும், எதை வாங்கினாலும், எதை தொட்டாலும், "இது இறைவன் பொருளே" என்றும், இறைவனே இறைவனுக்கு கொடுக்கிறான் என்றும், இறைவன் பொருளை வாங்குகிறேன் என்றும், அப்படியே இறையுணர்வோடு இருக்க வேண்டும்!

5. எண்ணம்:- கடந்த கால கற்பனை வேண்டாம், வருங்கால கற்பனையும் வேண்டாம். நிகழ்கால நிகழ்ச்சிகளை, இந்த கால வினையின்படி, இறைவன் எந்த பாரபட்ச தோஷமும் இன்றி நடத்துகிறான் என்று அமைதி, திருப்தி, இதுசுகமே, இது நலமே, என எண்ண வேண்டும்.

**"வாக்கு":** கடும், சுடும், கபடச் சொல் பேசாமலும், எண்ணம், சொல், செயலால் பிறரைத் துன்புறுத்தாமலும், பிறர் அப்படி செய்தால் அவைகளை மறக்கவும், மன்னிக்கவும், விட்டுக்கொடுத்து, நாம் விலகிக் கொள்ளவும் பழகவேண்டும்.



உ

மேலே யாம் சொன்னபடி, அனைத்து கருவி கரணங்களையும், "செயல் இழக்கச் செய்யாமல்" "அவைகள் செயல்பட வேண்டும்"! ஆனால் நான், என்னால், என்னுடையது, என்ற அஹங்கார, அதிகார, அபிமானங்கள், இல்லாமல் செயல்பட வேண்டும். இதைதான் எம்பிரபு கீதையில் சொன்னான்:— நின்றாலும், இருந்தாலும், கிடந்தாலும், நடந்தாலும், வந்தாலும், கொடுத்தாலும், வாங்கினாலும், கருவி கரணங்கள், எத்தொழிலைச் செய்தாலும், "இது நானும் அல்ல"! "இது என்னுடையதும் அல்ல"! இது பாவனைகளை வைத்து, இக்கருவிகரணங்கள், இயல்பாகவே, அவைகளின் வேலைகளை ஒழுங்காக செய்கின்றன, என கருதுகிறான்; "உண்மைத் துறவி" என்றான்!

எம் குழந்தைகளே!

எந்த செய்கையும், அதன் தன்மையும், அதன் பலாபலனும், உங்களுக்கு இல்லவே இல்லை, யெனப் பிரமாணமாகச் சொல்கிறோம். "எண்ணம்" மனதுடையது! "செயல்" தேகத்துடையது! அதன்பலன் "கர்மா" வுக்குடையது! "நீங்கள்" எம்முடையவர்களே! நம்முடையவர்களே! இதைத்தான் ஓர் அன்பர் பாடினார்:— சும்மா இருக்க வைத்தான். அதன் சூக்ஷ்திரத்தை யாம் அறியோம்; "அம்" ; "மா" "பொருள்" ஏதனவே அடையவிழுங்கிறேம். என்றார். உங்கள் "நானை" அடக்குவதே சாதனை! சும்மா இரு என்றால், "அம்மா பொருள், நாம்" என, அடங்கி இருக்கவே யாகும்! உங்களால் முடியும் முடியாததை இப்பைத்தியம் அமையாது!

பாபா.



(ஸத்தியவாக்கு)

ஸத்தியம் பேசு. **ஓம்** தர்மம் செய்

நாவை அடக்கு. கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்"!

"ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெய ராம்", **ஸ்ரீ**!

"அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம், அகமே எல்லாம்"!

"ஜெகம், பரமும், ஜீவர்களும், சிறிதும் இல்லை"!

# "வெண்மை கொடி"!

## விளக்கம்.!!!

**அ**ன்பும், **அ**றிவும், **அ**னுபவ **ஞா**னமும்,

ஒருங்கே அமைந்த எம் செல்வங்களே! உலகபழக்க வழக்கத்திற்காக, நம் முன்னோர்களாகிய ஸ்ரீமஹான்கள், இவ்வுலகத்திற்காக, **"அறுசுவை"** என்று ஆறுசுவைகளையும், அதாவது இனிப்பு, உரைப்பு, (காரம்) உப்பு, புளிப்பு, துவர்ப்பு, கசப்பு, என ஆறுசுவைகளை, அவைகளின், **"குணங்கள்"** அனுசரித்து, தம் மறைமய கற்பனையாக, சொல்லி வைத்தார்கள். அவைகளின் குணங்களாவன:— இனிப்பு = ஆசை! உரைப்பு = கோபம் உப்பு = மந்தம்! (சோம்பல்) புளிப்பு = சந்தேகம்! (சபலம், சலனம், சந்தேகம்) துவர்ப்பு = ஆழ்ந்த சிந்தனை! கசப்பு = ஸத்வ குணம், என உலகியல் குணங்களை விட்டு, தெய்வீகஇயல் குணங்களை வகுத்துக் கொண்டு, வாழ்க்கைக்கும், சாதனைக்கும் பயன்படுத்தினார்கள்.



# “ஆசை?”

இந்த அறுசுவையும் அவசியம் தேவை!
ஆனால் “அளவோடு” தேவை!
இவைகளில் எவைகளிலும், “அதிக பிரியம்” வைக்கக் கூடாது! எதிலும் அதிக பிரியம் வைத்தால், அது “அனர்த்தமாக” முடியும்! ஆகவே கவனம் தேவை!

அதைப் போலவே “பஞ்சவர்ணங்களை”யும், நம் பெரியோர்கள் கற்பனையாக சொல்லி வைத்தார்கள். அதாவது பஞ்சவர்ணம் என்றால், “ஐந்து கலர்கள்”! அவையாவன:- வெள்ளை, கருமை, சிவப்பு, பச்சை, நீலம், (ஊதா) என ஐந்தாகும். அவைகளின் தன்மை என்னவென்றால்?

வெள்ளை:- பரசொரூபஸ்திதி! ஆன்மாவின் உவமானமான ஓர் வடிவம்! சாந்தி, சமாதானத்தின் அம்சம்! ஸத்வ குணத்தின் ஓர் தோற்றம்!!!

கருமை (கருப்பு):- அஞ்ஞான இருள்! கவனக்குறைவின் தோற்றம்! “மறதியின்” அம்சம்! ஓர் மறைப்பு! முக்கியமாக இது துக்கம்!

சிவப்பு:- மலினமாயை! ஆத்திரம், அவசரம், வேகம், ஆவேசம் இவைகளை உண்டுபண்ணும் ஓர் “அசுர” வேகம்! பொதுவாக இது “சக்தி” சொரூபம்! யோகமாயா!

பச்சை:- குளுமை! பசுமை! இனிமை! இதை சாந்தி சமாதானத்தையும் கொள்ளலாம்! செழுமை! (செழிப்பு) பொன் பொருள் போகம் சிற்றின்பம்!

நீலம்:- மேல்பிரகிருதி! (மேல்மாயை) யோகமாயா! பரசொரூபத்தின் “அடுத்த நிலை”! உபாதைகள் இல்லாதது! இதை “இறை சொரூப” அம்சம் என்றும் சொல்லலாம்!



உ

எம் அன்பு கண்டரஸங்களே!

இப்படி பஞ்சவர்ணங்களை வகுத்த ஸ்ரீ மஹான்கள், அதில் ஓர் "ரகஸ்யமும்" சொன்னார்கள் "அறுசுவைகளும்" இந்த ஜீவனை உடல் "உள்ளே!" சென்று, ஓர் மயக்கத்தையும், "குணங்களையும்," உண்டாக்குகின்றன. ஆனால் பஞ்சவர்ணங்களும் இந்த ஜீவனின், "வெளியே"! இருந்து, ஓர் மயக்கத்தையும், "பயமும்"! உண்டுபண்ணுகின்றன! என்றார்கள் ஸ்ரீ மஹான்கள்.

அதாவது அறுசுவைகளும், ஆகாரம் வழியாக உள்ளே சென்று, மனோரூபமாய் இருந்து கொண்டு, குணங்களுக்குக் காரணமாயும், மயக்கத்திற்குக் காரணமாயும் அமைகிறது!

அந்த பஞ்சவர்ணங்களும், (ஐந்து கலர்களும்) வெளி உலக காட்சிகளாக இருந்து கொண்டு, "மனதை மயக்கி" ஓர் வசீகரம் கவர்ச்சி, எழுச்சி, மோஹம், இவைகளை உண்டுபண்ணி, தானும் நாமரூபங்களில், "இனக்கவர்ச்சியை" உண்டுபண்ணி, வினைப் பெருக்கத்திற்குக் காரணமாக, இவை அமைகின்றன. ஆகவே இவை இரண்டும், அதாவது அறுசுவைகளும், "அக உணர்ச்சிகள்"! உண்டுபண்ணுகிறது! ஐந்து வர்ணங்களும், "புறக்கவர்ச்சிகள்"! உண்டுபண்ணி, வினைப் பெருக்கங்களை உண்டுபண்ணுகின்றன!

ஆகவே இந்த இரண்டிலும், ஓர் சாதகன் சர்வ ஜாக்ரதையாக இருக்க வேண்டும். "உணர்ச்சிகளுக்கும்," அடிமை ஆகக்கூடாது! புறக்கவர்ச்சிகளுக்கும், அடிமை ஆகக்கூடாது. எந்த விதமும், "இறை, குரு, உணர்வோடு"! இருந்தால், அக உணர்ச்சிகளும், புறக்கவர்ச்சிகளும், அவசியம் அழியும்!



உ

எம் ஆனந்தக் குழந்தைகளே!

ஸ்ரீஸத்குரு தேவரும், எம் இறைவனும், வைத்தியமாகிய யானும், என் இந்த

**"தூய வெண்மையை"**

"வஸ்திரமாகவும்", "கொடியாகவும்"

1. பயன்படுத்துகிறேம் என்றால் முன்பு கூறியது போல, தூய வெண்மையே, ஆன்ம சொரூபமாகிய, பர சொரூப ஸ்திதியில், அமைகிறது!

2. மாசுமறு இல்லாமலும் கள்ளம் கபட சூது இல்லாமலும், இருக்கும் உள்ளத்தை **"வெள்ளை உள்ளம்"** என்று தான் சொல்கிறோம்!

3. யோக அனுபவங்களில், ஓர் தோற்றமாக முடிவில் தோற்றம், ஓர் காட்சியும் "வெள்ளையே"!

4. பச்சைக் கொடி என்றால், "இயக்கம் ஆரம்பமாகும்" என பொருள்! வெள்ளைக் கொடி என்றால், இயக்கமும் இல்லை! கர்மா இல்லை! சாந்தி, அமைதி, ஆனந்தம் எனப் பொருள்!

5 மண்ணின் பரிபூரண அம்சம் வெள்ளை! சக்தியின் பரிபூரண அம்சம் வெள்ளை! சுத்த சிவத்தின் பரிபூரண அம்சம் வெள்ளை!

6 சாதனை முதிர்ச்சியாகி, அனைத்து நாமரூபங்களும், எந்த வர்ணங்களும் இல்லாமல், காணும் **"புதுமைகளும்"** வெண்மையே ஆகிவிடுகின்றன!

7. உலகமாக காணும் போது, பல வர்ண ஜாலங்கள். தெய்வமாக உணர்வு நிலையில், கண்டு உணரும் போது, நிறம் ஒன்றே! உலக காட்சியும் தெய்வ காட்சியும் முழுந்து ஸ்வய நானுபவம், பெறும் ஓர் நிலையும் வெண்மையே!

8. முடிவாக மஹாபிரளய முடிவில், அண்டரண்ட பிரம்மாண்டங்களும், யோகமாயாவில் ஒடுங்கும் போது, சொல்லும் **"அந்தகாரம்"** என்ற ஓர் இருளே! அதுவும் இல்லாமல் சூன்யமாகி



உ

அந்த அந்தகாரமாகிய "நீலமும்" ஒடுங்கி
உவமானமாகச் சொல்லும், (ஆனால் உண்மையல்ல)
கோடானுகோடி சூரியப்பிரகாசமும்
"தூயவெண்மையே"!
இப்படி எட்டுநிலைகளில், "அது" ஆகிய
"அவன்"; ஒருமைத்தியமாகிய "இது"க்கு;
விளக்கம் கொடுத்தது! அது; அவன்; இது; ஆக இருக்கும்,
எம் செல்வங்கள் அனைத்தும், "அதுவே"!!!!!
இது ஸத்தியம்! இது ஸத்தியம்!! இது ஸத்தியம்!!!
ஸாதுவின் இதயமும், வஸ்திரமும், இயக்கமும், "தூயவெண்மையே!"
எம் ஞானச் செல்வங்களே!"

அந்தப் பழகிய, உங்கப்பன்.

எங்கெங்கு பக்குவ ஆன்மா நிமித்தம், (லோக ஜீவ சம்ரக்ஷணம் அல்ல)
ஓர் தோற்றம் எடுத்துக் கொண்டாலும், எப்படி அமைத்துக் கொள்வோம்
என்றால்? எளிமை. இனிமை; வியாபாரம், விளம்பரம், ஆடம்பரம்
இல்லாமை; கூட்டம் இல்லாமல், பக்குவ ஆன்மாக்களிடம் மட்டும், ஆங்
காங்கு "பொறுக்கி" எடுத்துக் கொண்டு வந்தது, இருந்து,
மறைந்தது. இவைகள் உலகுக்கு காட்டாமல், அடங்கி இருந்து கொண்டு;
அன்பர்கள் அனைவருக்கும் யாம் ஒடுங்கி இருந்து கொண்டு; சுவடு
தெரியாமல் மறைந்து விடுவோம் (மறைத்துக் கொள்வோம்) ஆனால்.
"எம் சின்னம் தூயவெண்மையே"! வஸ்திரமும் வெண்மையே! கொடியும் வெண்மையே!
உள்ளமும் வெண்மையே! இயக்கமும் வெண்மையே! ஆத்மாவாகிய
பரமும் வெண்மையே! உங்கள் உள்ளமும்
வெண்மையே. அனைத்தும் ஒன்றே!

பாபா.


அதுநலமே! அது சுகமே! அதுயாமே! அதுநீங்கள் அனைவரும்! இதுஸத்தியம்!



உ

## வெள்ளை கொடியின் உட் கருத்து!

கொடி என்றால், "செடி கொடி" என்று தாவரங்களையும் குறிக்கும். அது **"பின்னிப் பிணைவதும்"** ஆகும். அதைப்போலவே "இனம், மதம்", இவைகள், **"குண தோஷங்களால்"**, பின்னிப் பிணைவதும், கொடியென்ற ஓர் சின்னமாகும்." பொதுவாக உலகின் கொடிகள், "பஞ்ச வர்ணங்களையும், பற்பல சின்னங்களையும்" குறித்து அனைத்தும், **"கோர குண** தோஷங்களால், பின்னிப் பிணைந்திருக்கின்றன! ஆனால் ??? இந்த "வெள்ளைக் கொடி" எந்த குணதோஷங்களும் இல்லையென்றும், எந்த **"இயக்கமும்"**, (கர்மாவும்) இல்லையென சுட்டிக் காட்டுவதாகும்! இக்கொடி "பரசொரூப ஸ்திதியை" சுட்டிக் காட்டுவதாகும்! இக்கொடி "ஸாந்தி அமைதியை" உணர சுட்டிக் காட்டுவதாகும்! இக்கொடி "எக்குணமும் அற்று நிர்குணத்தை" சுட்டிக் காட்டுவதாகும்! இக்கொடி "ஸம்ஸாரியும், சந்நியாசியும்" அல்ல என சுட்டிக் காட்டுவதாகும்! இக்கொடி "நீ பூபதியும் மடாதிபதியும்" அல்ல என சுட்டிக் காட்டுவதாகும்! இக்கொடி எந்த "தேவ தெய்வ சின்னமும் அல்ல" என சுட்டிக் காட்டுவதாகும்! இக்கொடி, "உலக இயக்கங்களும், தெய்வ இயக்கங்களும் அல்ல", என சுட்டிக் காட்டுவதாகும்! எமக்கு எந்த ஆஸ்ரம தர்மங்களும் இல்லை; யாம் **"பரமஸ்த"** தர்மத்தை கடைப்பிடிக்கிறோம், என்பதை சுட்டிக் காட்டுவதாகும்! இக்கொடி "யாமும் வெள்ளை. எம் மனமும் வெள்ளை. ஜீவ இருள் போனதால் எம் ஆத்மாவும் வெள்ளை. எம் ஆத்மா லயமாகும், பரமாத்மாவும் வெள்ளை. பரமாத்மாவின் முழு அம்ஸமான பரசொரூபமாகிய, **"பரப்பிரம்மமும்"** (உவமான) **"வெண்மை"** என்பதை சுட்டிக் காட்டக் கூடியதே **"வெள்ளைக்கொடியின்"** ரகஸியமாகும்! தன பாபா




Adobe of Love

You are Everything!